# கல்விக் கதிர்

கவியோகி சுத்தானந்த பாரதியார்

பாரதி பதிப்பகம்

தியாகராய நகரம் :: சென்னை-17.

முதற்பதிப்பு: மார்ச் 1960.

T
N60

விலை ரூ. 3-00

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 106213
EGMORE, MADRAS-600 008

பாரதம் அச்சகம், 14, உஸ்மான் ரோடு, சென்னை-17.

# பதிப்புரை

'கல்விக்' கதிர்' என்னும் இந்த அரிய மலரைக் கலைவாணி திருவடியில் வைத்து வணங்குகிறோம். இந்நூலை எழுதிய **கவியோகி சுத்தானந்த பாரதியார்** கல்வித் துறையில் நீண்ட அனுபவம் வாய்ந்தவர். அரசாங்கக் கல்விச் சாலைகளில் அலுவல் பார்த்தபிறகு, **வீரமணி** வ. வெ. சு. ஐயருடன் தமிழ்க் குருகுலத்தை நடத்தினார். அக்காலம் இவர் மேனாட்டுக் கல்வி முறைகளையும் நமது நாட்டுக்குரிய ஆத்மீகக் கல்வி முறைகளையும் ஆழ்ந்து ஆராய்ந்தார். அந்த ஆராய்ச்சியின் பயனே இந்த நூலாகும். அத்துடன் 'சக்தி நிலயம்' என்னும் ஆசிரமம் தொடங்கித் தொழிற் கல்வி நடத்தினார். முதன் முதல் ஆதாரக் கல்வித் திட்டத்தை ஆக்கி நிறைவேற்றினார். அற நிலயம் என்னும் ஸ்தாபனம் தொடங்கிக் கிராமப் பணிகள் செய்து பல கிராமப் பள்ளிக்கூடங்களை நிலைநாட்டினார். காந்தி நிலயம் என்னும் ஆசிரமத்திற்குத் தலைமை வகித்து தொழில்முறைக் கல்வி புகட்டினார். பிறகு ஊர் ஊராகச் சென்று, பிரமசரியக் கல்வியின் அவசியத்தைப் பற்றியும் உடலுறுதிக்கு யோகாசனங்கள் செய்யும் விதத்தைப் பற்றியும் பிரசாரம் செய்தார். ஆசிரியர் நம் நாட்டு வாலிபர்கள் அறிவும் தொழிலும் ஆற்றலும் ஆத்மஞானமும் நல்லொழுக்கமும் கலைத் திறமையும் பெற்று வீரதீரராக உலகில் விளங்கவேண்டியே இந்த நூலை எழுதியளித்தார். காலத்திற்கேற்ற கல்வி முறைகளும் இதில் அடங்கியுள்ளன. இந்நூல் முதலில் ஓர் இனிய கதையுடன் தொடங்குகிறது. பிறகு இங்கிலாந்து, பிரான்சு, ஜர்மனி, ஸ்வித்ஸர்லாந்து, இத்தாலி, ரஷ்யா, அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளில் வழங்கும் கல்வி முறைகளை விரிவாக விளக்குகிறது. நமது பழைய பாரதத்தில் வழங்கிய ஆத்மீகக் கல்வி முறையை விளக்குகிறது. தமிழர் கல்வி முறையைத் துலக்குகிறது; நமது நாட்டில் தற்போது வழங்கும் ஆசிரமங்களின் கல்வி முறையை விளக்கி, முடிவில் காலத்திற்கேற்றபடி

மேற்கும் கிழக்கும் இணைந்த கல்விமுறையை வகுக்கிறது. இந்நூலை மாணவரும் ஆசிரியரும் கற்றுப் பயன்பெறலாம். இந்திய சர்க்காரின் ஆதாரக் கல்வித் திட்டம் வெற்றிபெற இந்நூல் வழி காட்டுகிறது.

இந்த நூலை வெளியிட அனுமதி தந்த கவியோகிக்கு எங்கள் நன்றி. பேராசிரியர் சாரநாதன், ''கல்விக் கதிர், ஆசிரிய மாணவருக்கு வரப்பிரசாதமாகும்'' ('It is a timely gift to training School Students')என்று போற்றிய நூல்-இதை நமது சென்னை அரசாங்கம் ஆசிரிய மாணவருக்குப் பாடப் புத்தகமாக்கினுல் கல்விக் கதிர் பளிச்சிட்டொளிரும்.

சென்னை - 17<br>22-3-60

**பழ. சிதம்பரன்**<br>பாரதி பதிப்பகம்

# பொருளடக்கம்


| எண் | வரிசை | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | நீலகண்டம் எம். ஏ. | ... | 9 |
| 2. | தன் முயற்சி | ... | 33 |
| 3. | எடிசன் | ... | 34 |
| 4. | புக்கர் வாஷிங்டன் | ... | 36 |
| 5. | மேனுட்டுக் கல்வி | ... | 39 |
| 6. | கிரேக்கக் கல்வி | ... | 41 |
| 7. | ரோமர் கல்வி | ... | 43 |
| 8. | கிறிஸ்து நாகரிகம் | ... | 45 |
| 9. | புதுமலர்ச்சி | ... | 48 |
| 10. | முன்னேற்றம் | ... | 50 |
| 11. | ஸ்வித்ஸர்லாந்து | ... | 52 |
| 12. | இங்கிலாந்து | ... | 57 |
| 13. | அமெரிக்கா | ... | 61 |
| 14. | ஜர்மனி | ... | 64 |
| 15. | பிரெஞ்சு கீதம் | ... | 67 |
| 16. | பிரெஞ்சுக் கல்வி வளர்ச்சி | ... | 72 |
| 17. | எத்தனைக் கலாசாலைகள்! | ... | 76 |
| 18. | ஜப்பானில் பெண் கல்வி | ... | 92 |
| 19. | ஜினோ நருசு | ... | 94 |
| 20. | தோகியோச் சர்வகலாசாலை | ... | 99 |
| 21. | கல்வி முறை | ... | 102 |
| 22. | சபைகள் | ... | 104 |
| 23. | பாரத சமுதாயம் | ... | 107 |
| 24. | பிரமசர்யக் கல்வி | ... | 118 |
| 25. | குரு சிஷ்யன் | ... | 123 |
| 26. | தமிழர் கற்ற கல்வி | ... | 129 |
| 27. | தோல்ஸ்தாயின் கல்வி முறை | ... | 138 |

| எண் | வரிசை | | பக்கம் |
|---|---|---|---|
| 28. | திருமதி மோந்தெஸ்ஸோரி | ... | 143 |
| 29. | காலத்திற்கேற்ற கல்வி | ... | 147 |
| 30. | ஆசிரிய மணிகளுக்கு | ... | 156 |

# கல்விக் கதிர்

## 1. நீலகண்டன் எம். ஏ.,

நவீன கல்லூரி (Modern College) பழைய மாணவர் கொண்டாட்டம் அமளிபடுகிறது. காலே, காற்பந்து (Football), கைப்பந்து (Volley ball), நெட்டிப்பந்து (Badminton), மட்டைப் பந்து (Tennis), கட்டைப்பந்து (Cricket), நடை பந்து (Golf), ஓட்டம், தாண்டல், சுமை தூக்கல், நீந்தல் முதலிய எல்லா விளையாட்டுக்களும் நடந்தன. தாத்தாக்களெல்லாம் வாலிபக் காளைகளாய்விட்டனர். நரசுத் தாத்தா 20 வயது வாலிபர்களை ஒரு மைல் ஓட்டத்தில் தோற்கடித்து, ''பார் என் வாலிபத்தை!'' என்று வந்தபோது ''தாத்தாவுக்கு ஜே!'' என்று சபை முழுதும் கைதட்டி ஆர்கவித்தது! மாங்குடி உபாத்தியாயரின் பீமசேன வேலைகள் எல்லோரையும் பிரமிக்கச் செய்தன. இப்படி எத்தனையோ பழைய பலவான்கள் தம் திறமைகளைக் காட்டினர். மதியத்தில் இலட்டு பாயசத்துடன் தாட்டாக 5,000 பேர் சாப்பிட்டனர். எல்லாரும் சந்தனம் பூசி, வாசனைப் பாக்கும் தளிர்வெற்றிலையும் போட்டுக்கொண்டு ஆங்காங்குச் சிறு சிறு கும்பல் கூடித் தமாஷாகப் பேசிக் கொண்டிருந்தனர். சில உபாத்தியாயர்களும், பழைய மாணவரும் சீட்டாடிக் கொண்டிருந்தனர். அன்று இரவில் ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட் நடத்தப் போகிறார்கள். அதற்காகச் சிலர் காட்சிகளை ஜோடித்தும், ஒத்திகை வைத்தும் சுறுசுறுப்பா யிருந்தனர்.

நாடக மேடைக்கருகில், வெளிப்புறத்தில் ஓர் ஆலமரத் தடியில், இந்திய கிப்பன் (Indian Gibbon) ஈசுவரையர் சாய்வு நாற்காலி நிணறிப்போகும்படி வீற்றிருக்கிறுர். அவரைச் சுற்றி ஒரு கூட்டம் கூடியது. ஈசுவரையர் நவீன கல்லூரியில் 25 ஆண்டுகளாக ஐரோப்பிய சரித்திர பாடம் போதித்து வருபவர். மாணவர்களைப் பரீட்சைக்குத் தயாரிப்பதில் அவருக்கு நல்ல பெயர். அவர் மாணவர்களிடம் மாணவர் போலப் பழகுவார். அதனுல் அவரிடம் மாணவர் மனத்தை விட்டுப் பேசுவர். அவர் தம்மிடம் பயின்று பட்டம் பெற்ற பழைய மாணவர் நிலைமையை இப்போது விசாரித்துக்கொண்டிருக்கிறுர். ஒவ்வொரு மாணவனும் தனது வாழ்வுப் போரைப்பற்றிச் சரித்திரப் புலவரிடம் சொல்லுகிறுன். "நீலகண்டன், நீ, எம். ஏ. தேறிப் பத்தாண்டுகள் ஆயினவே! நீ எனது பாடத்தில் நூற்றுக்கு 80 வாங்கினவன். இப்போது என்ன செய்கிறுய்?" என்று வினவினுர் வரலாற்றுப் புலவர்.

"நான் போர் செய்கிறேன்."

"அப்படியா? எந்தப் பட்டாளத்தில்? எங்கே?"

"வேலையில்லாப் பட்டாளத்தில்! உபவாச புரியில்!" என்று நீலகண்டன் மளமளவென்று கண்ணீர் விடுத்தான்!

மாணவர் கொண்டாட்டத்தின் உற்சாகமெல்லாம் அந்தக் கண்ணீரில் கரைந்து போயிற்று!

"நீலு உனது நிலைமையைத் தெளிவாகச் சொல்லு!" என்று உரிமையுடன் கேட்டார் உபாத்தியாயர்.

அப்போது, பின்னுல் நாடக மேடைக் குள்ளிருந்து,

"To be or not to be; that is the question," என்று ஹாம்லெட் பேசும் மொழிகள் பளிச்சென்று கேட்டன!

"இதுதான் எனது நிலைமை! இதுதான் நான் இப்போது சிந்திப்பதும்!

"To be or not to be; that is the question:
Whether 't is nobler in the mind to suffer

The slings and arrows of outrageous fortune,
Or to take arms against a sea of troubles
And by opposing, end them? To die : to sleep
No more !

(இருப்பதா, இறப்பதா—அதுதான் கேள்வி ? கொடுமை செய்யும் விதியின் கற்களையும், கணைகளையும் மனத்தில் ஒட்டாமல் பொறுத்துக் கொண்டிருப்பது மேலா? அல்லது துன்பக் கடலை யெதிர்த்துப் பொருது ஒழிப்பது மேலா?; இறப்பு; உறக்கம்—வேறொன்றுமில்லை!)

இதுதான் எனது நிலைமை! வேறென்ன சொல்வது!'' என்று நிற்கும் நீலகண்டன் விழிகளில் துன்பக் கடல் பொங்கி யெழுந்ததை அனைவரும் பார்த்து மனமுருகினர். ''நண்ப, எங்களுக்கும் இந்த மாதிரித் துன்பம் உள்ளது; வெளியே சொல்லாமல் இருக்கிறோம்'' என்றனர் சிலர். ஈசுவரையர் நீலகண்டன் வரலாறு முழுவதையும் விடாமல் சரித்திரப் பாடம் போல ஒப்பித்துவிடும்படி மன்றாடிக் கேட்டார். நீல கண்டனுக்கு ஓர் ஆவேசம் பிறந்தது! தான் படித்து வாழ்ந்த தைப்பற்றி மன எழுச்சியுடன் பேசத் தொடங்கினான். கல்லூரி யில் படிக்கும்போது அவனுக்கு நவீன கல்லூரியின் பர்க் (Burke of the Modern College) என்ற பட்டப் பெயருண்டு. வாரன் ஹேஸ்டிங்ஸைத் தாக்கி எந்த வேகத்தில் பர்க் துரை பாராளு மன்றத்தில் பேசினாரோ, அந்த வேகத்தில் ஆங்கிலச் சண்டமாருதம் பொழிந்தான் நீலு! அங்குமிங்கும் கூடியிருந்த மாணவர்கள் நீலகண்டனைச் சுற்றிக் குழுமினர்! விளம்பரம் இல்லாமலே அன்று ஒரு பெரிய நிகழ்ச்சிக்குத் தலைவனானான் நீலகண்டன்! அவன் பேச்சைத் தமிழில் மொழிபெயர்க்கி றேன்:—

நண்பர்களே, இன்று மாணவர்களுக்குக் கொண்டாட் டமா, வேலையில்லாத் திண்டாட்டமா? சொல்லுங்கள்! (பல குரல்கள் : வேலையில்லாத் திண்டாட்டம்!)

அன்பர்களே, மனிதன் காலத்திற்கேற்ற கல்வி கற்க வேண்டியதுதான். சந்திரகுப்தன் காலத்தில் வடக்கே ஆரியம்

கற்றனர்; தெற்கே தமிழே கற்றனர்; அக்பர் காலத்திலே பார்ஸி, உருது கற்றனர். இப்போது நம்நாடு ஆங்கிலேயர் கையிலிருக்கிறது. ஆங்கிலம் கற்கிறோம்; இல்லாவிட்டால் பிழைப்பில்லை, உத்தியோகமில்லை யென்றிருக்கிறது. இனி, ஹிந்திக்கு ஒரு காலம் வரும். ஆங்கிலத்தை நான் குறை சொல்லவில்லை. அஃது உலகளாவிய மொழி; ஒப்பற்ற ஷேக்ஸ் பியர், மில்தன், ஷெல்லி, பைரன் போன்ற மஹா கவிகளைப் படைத்த மொழி ; உலகிற்கே பொது மொழியாக வழங்கத் தக்க உயர்வு பெற்றது. லௌகிக, பௌதிகக் கலைகளின் சிகரத்தை எட்டியது; தாகூர், விவேகானந்தர், போஸ், ரே, ராமன், காந்தி, பெர்னார்ட் ஷா, கெத்தே, தாந்தே, வர்கிலியன், ஹோமர், அரிஸ்தோதிலன், பிளேடோ, அரவிந்தர், போன்ற பெரும்புலவர்களையும், கவிகளையும், மகான்களையும் இன்று நாம் அறிந்துகொள்வதற்கு ஆங்கிலமே துணையாயிருக்கிறது. நமது பாரதநாட்டிற்குப் பெருமை தரும் வேத வேதாந்த நூல்களைக்கூட ஆங்கிலத்தின் மூலமாகவே நம்மிற் பலர் அறிகின்றனர். உதாரணமாக, ஆசிய ஜோதி (Light of Asia) மூலமாக புத்தரையும் புத்த தர்மத்தையும் நான் அறிந்து வியந்தேன். எட்வின் ஆர்னல்டின் தேவ கீத (Song Celestial) மும், பெஸண்டம்மையாரின் மொழிபெயர்ப்புமே எனக்குக் கீதையின் மாண்பைக் காட்டின. திருக்குறளையும், ஆங்கில மொழி பெயர்ப்பால்தான் நான் நன்கு அறிந்தேன்! ஆங்கிலம் கலைக் கடல்; கவிதை வனம்; அறிவுச் சுரங்கம்! இங்கிலாந்தே கடலில் முழுகிப் போனாலும், ஆங்கிலம் நின்று நிலவும் ; உலகில் அதற்கொரு முதன்மை ஏற்பட்டு விட்டது. ஆங்கிலம் கற்க வேண்டியதுதான்.

ஆனால், ஆங்கில மோகத்தால் நாம் என்ன காரியம் செய்யும்படி நேர்ந்து விட்டது பாருங்கள்! நமது தாய் மொழியையும், நம் முனிவர் தந்த நாகரிகத்தையும், அத்யாத்ம ஞானத்தையும், ஆசார வொழுக்கங்களையும் அன்னியக் கல்விக்குப் பலிகொடுத்தோம்! அன்னையை அவமதித்துப் பட்டினி போட்டோம்! அன்னிய மோகினிமேல் பித்தானோம். அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட பேதையின் கதியானோம்! கல்வி

யின் உயர்ந்த நோக்கங்களை விட்டு, உத்தியோகவேட்டைக்கு அதை ஓர் அம்பாகக் கொண்டோம்! அந்த அம்பு நமது மார்பிலேயே பாய்கிறது! ஏதோ பெரும் புதையல் அள்ளிக் கட்டப்போகிறோம் என்றொரு மோகனக் கோட்டையிற் புகுந்தோம்; கோட்டைக்குள் வளைந்து வளைந்து செல்லும் விநோதக் காட்சிகளில் மனத்தைப் பறிகொடுத்து மேன்மேலும் சென்றோம்; முடிவில் கோட்டை ஒரு சிறையென்றறிந்தோம்; அதைவிட்டு வெளிவர வழி தெரியவில்லை. மற்றொருவர் வார்க்கும் அரைக் கஞ்சி உண்டு, கதியின்றி, மயங்கிக் கிடக்கிறோம். 'தாயே, தாயே!' என்று கதறுகிறோம். தாயின் கண்ணீரையே காண்கிறோம்!

* * *

நண்பர்களே, ''கல்வியே ஒரு சமுதாயத்திற்குக் கண். கல்வியழகே யழகு; பிச்சை புகினும் கற்கை நன்றே; எக்குடிப் பிறக்கினும் யாவரேயாயினும் அக்குடியிற் கற்றோரை 'வருக!' வென்பர்; கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு'' என்றெல்லாம் கீழ் வகுப்பில் தமிழ் ஐயா சங்கு வைத்துப் புகட்டின சில வரிகள் மூளையில் ஒளிந்து கொண்டிருக்கின்றன. மற்றைப்படி எனக்குத் தமிழ் வராது. அதனாலேதான் தமிழர்களான உங்கள் முன் நான் படித்த வயிற்றெரிச்சலை ஆங்கிலத்தில் அழுது தீர்க்கிறேன். (வெட்கம்! வெட்கம்!) எனக்கா வெட்கம்? அதிருந்தால் நான் ஏன் இப்படித் திரிசங்கு சுவர்க்கத்தில் தொங்கி யலைகிறேன்?

நேயர்களே, என் வைதீகத் தாத்தா சிறு வயதில் சொல்லிக் கொடுத்த நீதி சதகத்தில் ஒரு சுலோகம் இப்போதும் என் மனத்திலிருந்து அவஸ்தைப்படுகிறது ; அதையும் சொல்லித் தீர்க்கிறேன். சமஸ்கிருதம் பழக்கமில்லை ; வாய் உளறினால் மன்னிக்கவும். அஃது ஓர் அரிய கவியின் வாக்கு. பெயர்.........மறந்து போயிற்று ஆ.........ஆம் பர்த்ரு ஹரி! ஷேக்ஸ்பியர், மில்டன் என்றால் பளிச்சென்று வருகிறது. தமிழ், வடமொழிக் கவிகள் பெயரே தடவலாயிருக்கிறது. (வெட்கம்) எனக்கா வெட்கம்? அதிருந்தால் நான் இந்தக் கோலமாவேனா? சரி சுலோகத்தைக் கேட்டுத் தீருங்கள் :—

*வித்யா நாம நரஸ்ய ரூப மதிகம் ப்ரச்சன்ன குப்தம் தனம்;*
*வித்யா போக கரீ; யஸஸ் சுககரீ வித்யா குருணும் குரு:*
*வித்யா பந்துஜனே விதேச கமநே வித்யாபரா தேவதா!*
*வித்யா ராஜஸு பூஜிதா நது தனம் வித்யா விஹீன: பசு:*

இதன் கருத்து :—

கல்வியறிவே மனிதனுக்கு அழகிய வடிவாகும்; கல்வியறிவே ஒருவன் உள்ளே வைத்துப் பாதுகாக்கப்படும் செல்வமாகும். இவ்வுலகிற்குரிய போகங்களைத் தருவதும் அதுவே; பெரும்புகழையும், இன்பத்தையும் தருவது கற்றறிவே; அறிவே குருவிற்கும் குரு; அன்னிய நாடுகளுக்குச் செல்லுங்கால், வித்தையே நல்ல உறவினர் போல உதவுகிறது; வித்தையே மேலான சக்தி தேவதை! மன்னர் சபைகளை அலங்கரிப்பது வித்தையே; இந்தக் கல்வியறிவில்லாதவன் விலங்கேயாவான்.

நண்பர்களே, இது கல்விப் பயன். ஆங்கிலம் படித்தவர்கள் இந்த சுலோகத்தைக்கொண்டு தங்கள் நிலைமையை அளந்தறியுங்கள்! மற்ெருரு வரி தமிழில் நினைப்பிருக்கிறது அதைப் பாடம் பண்ணி ஒப்பிக்க நான் வாங்கின குட்டுகளால் மூளை பயந்துபோய் மறக்காமல் வைத்திருக்கிறது.

*கற்றத னாலாய பயனென்கொல் வாலறிவன்*
*நற்ருள் தொழா ரெனின்?*

ஒரு மாமாங்கமாக இதன் அர்த்தம் எனக்கு விளங்கவில்லை. இப்போதும் வாய் உளறுகிறது. வாலறிவன் என்றால் என்ன என்று தமிழ்ப் பண்டிதர் கேட்டதற்கு, வால் முளைத்த புத்திசாலி (ஹனுமார்) என்று பதில் சொல்லி, ஒரு மணி நேரம் பெஞ்சிமேல் நின்றேன்! நற்ருள் என்றால் என்ன? தொழா! என்றால் என்ன? கொழபுழா என்றிருக்கிறதே. இது தமிழ்தானு, யார் இப்படிப் பாடியது என்பதே எனக்கு முன்னே விளங்கவில்லை. சென்ற வருஷம் வள்ளுவர் திருநாள் கொண்டாடினார்கள். நானும் பிரசங்கங்களைக் கேட்டேன். ஒரு குறள் வாங்கினேன். ஒருவரிகூட விளங்கவில்லை; இது சத்தியம். பிறகு வ. வெ. சு. ஐயரின் ஆங்கில மொழிபெயர்ப்பு வாங்கினேன். அதைப் படித்த பிறகுதான் குறளின்

பெருமை விளங்கியது; மேற் சொன்ன பாட்டிற்கும் அர்த்தம் தெரிந்தது. நண்பர்களே, இந்த இரண்டு அரிய வாக்குகளால் கல்வியின் பயன் விளங்குகிறது. கல்வியினுல் தாய்மொழி யறிவும், ஒரு பொதுமொழியறிவும் பெறவேண்டும்; வாழ்வின் கடமைகளை நிறைவேற்ற உடலுறுதியும், மனவுறுதியும், தொழிலறிவும் வேண்டும். நாலு பேர் கௌரவிக்கத்தக்க தன்மைகளும், ஒழுக்கமும் விளங்கவேண்டும். சுவையுணர்ச்சி (ரசஞானம்) பெறவேண்டும்; கடவுளுறுதியும் ஆத்ம ஞானமும் ஏற்படவேண்டும். பக்தி, சிரத்தை, சித்த சுத்தி-இவை ஏற்பட வேண்டும். வாழ்வை உயர்த்தும் ஆசார அனுஷ்டானங்களில் பற்றுதல் மிகவேண்டும். நம் நாட்டு மஹான்கள் வகுத்த நன்னெறி யொழுக்கம் வாழ்விற் பிடிபடவேண்டும். பிறருக்கு அடிமைப்படாது, நமக்குரிய தருமத்தை விட்டுக்கொடுக்காது, ஒரு யோக்கியமான தொழிலால் பிழைக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் பொய்யை விலக்கி, மெய்யறிந்து, இருளை நீத்து, ஒளியைப் பெற்று, கட்டறுந்து, சுயேச்சை பெற்று, துன்பந்தாண்டி, உண்மையான இன்பத்திற்கு உயர்ந்து செல்லவேண்டும். இதுவே கல்வியின் பயன்! நான் எம். ஏ. வரையில் கற்று வாழ்ந்த கதையைச் சொல்லுகிறேன். தற்கால படிப்பின் பயனை நீங்களே தெரிந்துகொள்ளுங்கள்! பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஏதோ சிலர் பெரிய சர்க்கார் உத்தியோகங்கள் வகித்திருக்கலாம்; கலெக்டர், டிபுடி கலெக்டர், தஹஸீல்தார், ஜட்ஜ், முனிசீபு வேலைகளில் அள்ளிக் குவித்திருக்கலாம். டாக்டர், வக்கீல், உபாத்தியாயர், எஞ்சிநீயர்களான சிலர் பணத் தட்டின்றி வாழலாம். இருபதாம் நூற்றுண்டில் ஆங்கிலம் படித்தவர்களிற் பெரும்பாலார் படும் பாட்டை என்னைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்!

* * *

நண்பர்களே, நான் ஒரு சுஷ்க வைதிகக் குடும்பத்திற் பிறந்தவன்; சோழவந்தான் அக்கிரகாரத்தில் என் பாட்டனுர் சுவாமிநாத தீக்ஷிதர் என்ருல் எல்லாரும் கையெடுத்துக் கும்பிடுவார்கள். ருக்வேதம் முழுதும், உதாத்த அனுதாத்த ஸ்வரங்களுடன், அவர் இனிமையாகப் பாடுவார்; 108

உபநிஷத்தும் அவருக்குப் பாடம். இராமாயணம், பாரதம், பாகவதம், ஸ்காந்தம், தேவீமஹாத்மியம், ஹூதஸம்ஹிதை முதலிய மஹா கிரந்தங்களை அவர் பாடம் சொல்லுவார். காலை நான்கு மணிக்குச் சிவானந்தலஹரி சொல்லிக் கொண்டே அவர் வைகைக்குச் சென்று அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு வீட்டிற்கு வருவார்; தும்பைப்பூ மாதிரி துவைத்த அவரது ஆடையைக் கொடியில் உலர்த்தி, மடி கட்டிக்கொண்டு, பூஜையறைக்குப் போவார். என் தகப்பனார் நடராஜ தீக்ஷதர் தம் தந்தையைத் தெய்வமாக மதித்து நடப்பார்; பெற்றோர்களுக்குச் சிரத்தையாக பாதபூஜை செய்வார்; தந்தையின் அனுஷ்டானங்கள் முடிந்து வீட்டிற்கு வருவதற்குள் தாம் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, பூவும் சமித்தும் கொண்டுவந்து வைத்திருப்பார். இருவரும் அக்னி ஹோத்ர ஔபாசனாதிகளைக் கிரமமாகச் செய்வார்கள். பிறகு தெய்வாராதனம் நடக்கும். என் தகப்பனார் புருஷ ஸூக்தம், ருத்ரம், சமகம், ஸஹஸ்ர நாமாதிகளைச் சொல்லிக்கொண்டே பக்தி சிரத்தையாகத் தம் தகப்பனார் செய்யும் பூஜையைக் கவனிப்பார். பிறகு இராமாயண பாகவதாதி கிரந்தங்களிலிருந்து சுலோகங்களை என் தகப்பனார் இனிய சாரீரத்தில் படிப்பார். என் பாட்டனார் வியாக்யானம் செய்வார். அவரது வியாக்கியானத்தைக் கேட்கப் பல பக்தர் வருவர்; அரிசி, பருப்பு, தேங்காய், பழம், ஏதாயினும் அன்புடன் கொண்டுவந்து வைத்து, ஸத்விஷயங்களைக் கேட்பர். இவ்வாறு தினம் தானாக வருவதே எங்கள் காலட்சேபத்திற்குப் போதுமானதாகும். வேறு எதுவும் யாரிடமும் என் பாட்டனார் கேட்க மாட்டார். என் தகப்பனாருக்கு நல்ல தமிழறிவுண்டு. சுமார் இருபது மாணவர்கள் இவர்களிடம் கல்வி கற்றனர். பாட்டனார் ஆரியம் சொல்லித் தருவார்; தகப்பனார் தமிழ், எண்சுவடி, ஓலையெழுத்து சொல்லித் தருவார். மாணவர்களிடம் எதுவும் வாங்கிக்கொள்வதில்லை. வித்யா தானத்தை ஒரு கடமையாக என் முன்னோர் காத்து வந்தனர். அவர்கள் தமது தருமத்தைச் சரிவரச் செய்துவந்ததால், ஊரார் அவர்களது தேவையைக் கவனித்துவந்தனர்.

எங்கள் வீட்டில் கலியாணம் கார்த்திகையானால், அந்த அக்கிரகாரம் முழுதும் பங்கு போட்டுக்கொண்டு உதவி செய்யும். பங்காருவையருக்கு மேல்வாரம் 100 கலம் கண்டால், தீக்ஷிதர் வீட்டிற்கு இரண்டு கலம் வராமற் போகாது. இரவு 8-மணி முதல் 10-மணிவரையில் வீட்டுத் திண்ணையில் புராணம் நடக்கும். அக்கிரகாரம் முழுதும் வந்து கேட்கும். திவ்ய ஜனனம், கல்யாணம், பட்டாபிஷேக கட்டங்களில் விசேஷ சம்பாவனைகள் நடக்கும். காலட்சேபத்திற்குத் தட்டில்லை. சனிக்கிழமை, ஏகாதசி நாட்களில் தீபப்பிரதக்ஷிணத்துடன் திவ்ய நாம பஜனை நடக்கும். அதற்கும் ஏராளமான பக்தர் வருவர். நாளைக் கவலை இன்று கிடையாது. வீட்டில் பெரியவர்களும் குழந்தைகளுமாகப் பத்துப்பேர் என்றால் பதினெட்டுப் பேருக்குச் சமையல் நடக்கும். இரண்டு அதிதிகள்இல்லாமல் எங்கள் வீட்டில் சாப்பிடுவதில்லை. இரவில் யாராயினும் பசி என்று வந்தால், சாப்பாடு இருக்கும். என் தாயார் முகங் கோணாது கணவன் குறிப்பறிந்து நடக்கும் உத்தமி. விருந்தாளிகளை உபசரிப்பதில் அவளுக்கு உற்சாகம் அதிகம். வீட்டில் நடக்கும் கதைப் புராணங்களைக் கவனித்தே அவளுக்கு ஏராளமான சுலோகங்கள் பாடம். அஷ்டபதி, கோபிகா கீதம், ஸௌந்தர்ய லஹரி, தேவீமஹாத்மியம், கீதை முதலியவற்றைச் சொல்லிக்கொண்டே அவள் அடுப்புக் காரியங்களைப் பார்ப்பாள். அவள் துளஸியின் அருகே நின்றால் ருக்மிணி போலிருக்கும்; வீட்டுப் பசுவில் பால் கறக்கும்போது லக்ஷ்மி தேவி போலிருக்கும். நண்பர்களே, நான் இத்தகைய வைதிக குலத்திற் பிறந்தேன். இனி நான் வாழ்ந்த வாழ்வைக் கேளுங்கள்:

என் தகப்பனாருக்கு நான்கு பிள்ளைகள்; இரண்டு பெண்கள். மூத்தவர் சதாசிவ தீக்ஷிதர் பாட்டனாரிடமும், அப்பாவிடமும் வடமொழி, தென்மொழி பயின்று, குலதர்மத்தையே மேற்கொண்டார். அடுத்தவர் சோமசுந்தர தீக்ஷிதர் கனாந்தம் அத்யயனம் செய்து, ஒரு பாடசாலையில் வேதம் சொல்லிக்கொடுக்க அமர்ந்தார். மூன்றாமவர் சுப்பிரமணிய தீக்ஷிதர். நான்காமவன் இதோ நிற்கிறேன்! இருவரும் ஆங்

கிலக் கல்வி கற்றோம். என் பாட்டனார் 1910-ஆம் ஆண்டு, 95-வயதில் அனுயாசமாகப் பரலோகப் பிராப்தியடைந்தார். அப்போது எனக்கு ஆறு வயது. அவருக்கு நெய்ப்பந்தம் பிடித்தது நினைவிருக்கிறது. அவர் சொல்லித்தந்த நீதி சதகத்தைச் சொல்லி அழுதுகொண்டே போனேன். என் அண்ணன் சுப்புவுக்கு அப்போது எட்டு வயது; அமரம் படித்துக்கொண்டிருந்தான்.

தாத்தா காலம் மாறிப்போயிற்று. அக்கிரகாரப் பிள்ளைகளெல்லாம் ஆங்கிலம் படிக்கின்றனர். என் தகப்பனாரிடம் சிரத்தையாகக் கற்கும் மாணவரில்லை. பிழைப்பிற்காகத் திண்ணைப் பள்ளிக்கூடம் வைத்தார். வைதிகத்திலும் அலைந்தலைந்து பார்த்தும் வரும்படி கட்டவில்லை. குடும்பம் பெரிது. ஆங்கிலம் படித்தவர்கள் வக்கீல், டாக்டர், எஞ்சிநீயர், உபாத்தியாயர்கள், கச்சேரி உத்தியோகஸ்தர்களாக வந்து மாதச் சம்பளம் பெற்றுக் கவலையற்றுப் பெருமையாக வாழ்வதை அவர் கண்டார். ஆகையால் கடைசி இரண்டு பிள்ளைகளையும் இங்கிலீஷ் படிப்பில் போட்டார்! ஏழு வயதில் எனக்கு உபநயனம் நடந்தது; உள்ளூர் நடுத்தரப்பள்ளிக்கூடத்தில் (Secondary School) ஒரு வருஷம் படித்தேன். அந்த ஒரு வருஷம் அப்பா கட்டாயத்தால் சந்தி ஜபங்கள் முடிந்தமட்டும் ஒழுங்காகவே செய்தேன். படிப்பிலும் சுறுசுறுப்பாயிருந்தேன்.

மதுரையில் என் தாய்மாமன் மிஸ்டர் ஸி. வி. ஸென் (Mr. C. V. Sen) இருந்தார். பெயரிலிருந்தே அவருடைய கொள்கைகளை நீங்கள் அறிந்து கொள்ளலாம். சிதம்பர தீக்ஷிதரின் சீமந்த புத்திரன் வேங்கடேசன். ஸி. வி. ஸென் என்று அவர் தம் பெயரைச் சுருக்கிக்கொண்டார். அது மட்டுமா? சுருள்சுருளாக நீண்ட குடுமியை வெட்டிக் கிராப்பாகச் சுருக்கிக்கொண்டார்; அது மட்டுமா? மீசையைச் சுருக்கி ஹிட்லர் மாதிரி வைத்துக்கொண்டார். அது மட்டுமா? பத்தாறு கட்டுவதை விட்டு, வீட்டில் முழங்கால் சட்டையும் குடுத்துணியுமாகச் சுருக்கிக்கொண்டார். அது மட்டுமா? தாய் மொழியான தமிழ் பேசுவதையும் சுருக்கிக்கொண்டு

ஆங்கிலமே நீளப் பேசினர். ஆள் நல்ல சிவப்பு; சட்டையும், தொப்பியும் பார்த்தால், அசல் வெள்ளைத் துரை மாதிரியே யிருக்கும். சுருட்டுக் குடித்துக் குடித்து உதடும் பல்லும் அதே மாதிரி கறுத்திருக்கும். நாகரிகத்திற்கு எந்த நோபெலாவது (Nobel) வெகுமதி கொடுத்தால், அது தனக்கே உரியதென் பது அவர் உறுதி. அவர் ஹைக்கோர்ட்டு வக்கீலாயிருந்தார். சோழவந்தானில் இருந்த முதல்கரை நிலங்களையெல்லாம் விற்று, சிதம்பர தீக்ஷிதர் பிள்ளையைப் படிக்க வைத்தார். இப்போது தகப்பனர் வாடையே பிள்ளைக்கு உதவாது. அந்த (uncivilised brute) அநாகரிக விலங்கு மூஞ்சியிலேயே முழிக் கக்கூடாதென்று விரதம் பூண்டிருக்கிறர் மிஸ்டர் ஸென். அவரது நாகரிகத்திற்குத் தகுந்தபடியே மேம்ஸாஹேபும் அமைந்தாள். மிஸஸ் ஸென் பத்து வகுப்பு ஆங்கிலம் படித்த வள். மூன்று பெண்களுக்குத் தாய்; என்றலும், வீட்டுப் பொறுப்பு அவளுக்கெதற்கு! லேடீஸ் கிளப்பிற்கு அவள் உப காரியதரிசி; பெண்கள் நவீன முறையில் என்னென்ன சீர் திருத்தங்கள் வேண்டுகிறர்களோ, அவற்றை யெல்லாம் தானே செய்து காட்டுவதென்று உறுதி பூண்டவள். அவள் கணவனை 'மிஸ்டர் ஸென்' என்றே அழைப்பாள்; அவர் அவளை 'மை டௌலி!' (பிரியை) என்றழைப்பார். அவள் அவ சரமாக 'பேடா' புறப்பட்டால், தம் மோட்டாரைத் தந்து, தாம் இரவல் மோட்டாரில் போவார். வீட்டுக் காரியம் கோவிந்தா, கோவிந்தா! மூன்று பெண்களில் முதல் பெண் விவாகம் செய்து, வாபஸ் வந்துவிட்டாள். அதற்காக யாரும் விசனப் படவில்லை. பெண்கள் கல்லூரியில் படிக்கவைத்த னர். மிஸஸ் தேவகி, P. G. முதலியார், பார்அட்லாவைக் காதல்மணம் புரிந்துகொண்டாள். மற்றொரு பெண்ணுக்கு வயது 13; 18 வயதில்தான் விவாகம் செய்ய வேண்டுமென் பது தந்தையின் பிடிவாதம். கடைசிப் பெண் 5 வயதுக் குழந்தை. அதை எனக்குத் தரலாம் என்ற உத்தேசம். அவர் என்னைத் தம் வீட்டிலேயே வைத்துப் படிப்புச் சொல்லித் தருவதாக மன்றடி அழைத்துச் சென்றர். அம்மாளுக்கு முத லில் பிடிக்கவில்லை. தமையன்மார், "நாங்கள்தான் இப்படி

வைதிகவிருத்தி கட்டி வராது கஷ்டப்படுகிறோம். இந்த இரண்டு பிள்ளைகளாவது படித்து, முன்னுக்கு வந்து உத்தி யோகம் பார்த்துக் குடும்பத்தைக் காப்பாற்றட்டும். உத்தி யோகம் புருஷலக்ஷணம்!'' என்று சொல்லி வற்புறுத்தினர்.

நானும், சுப்புவும் மிஸ்டர் ஸி. வி. ஸென் வீட்டில் வளரு கிறோம். சுப்பு ஸ்கூல் பைனல் தேறிப் பசுமலையில் உபாத்தி யாயர் வேலைக்குப்படித்து, திண்டுக்கல்லில் 25 ரூபா சம்பளத் தில் இருக்கிறான்; இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையா யிருக்கிறான். சம்பளம் அவனுக்கே கட்டாது. டியூஷன் கடை போட்டிருக்கிறான்.

இனி என் கதைதான்:

நான் மிஸ்டர் ஸி. வி. ஸென்னின் வருங்கால மாப்பிள்ளை அல்லனா? ஆதலால், என்னைத் தம் வழியில் பழக்கிவிட்டார். நான் மிஷன் கல்லூரியில் சேர்ந்தேன். ஆங்கிலம் நன்றாகவே வந்தது. ஒருதரங்கூட 'கோட்' அடிக்காது மேன்மேலும் தேறி ஒன்பதாவது வகுப்பிற்கு வந்தேன். அதிலிருந்து என் வாழ்க்கை அடியோடு மாறிப்போனது. மாமா வீட்டிற்கு வந் ததுமே என் சந்தி, ஜபம், வைதிகம், மடி, ஆசாரம், தெய்வ பக்தி, எல்லாம் மாயமாகப்பறந்துபோயின. ஐந்தாம் வகுப்பு மட்டும் பல்லைக் கடித்துக்கொண்டு தமிழ் சிறிது கற்றேன். ஆறும் வகுப்பில் சம்ஸ்கிருதம் எடுத்துக்கொண்டு, சேதுபதி ஹைஸ்கூலில் சேர்ந்து படிக்கும்படி தமையன் எழுதினான். "சீ நான்ஸென்ஸ்! செத்த பாஷையைக் (Dead language) கட்டி யழுது கொண்டு! நீ பிரெஞ்சு எடுத்துக்கொள்!'' என் றார் மாமா. மாமா சொல்லே எனக்கு வேதவாக்கு. ஆதலால் மிஷன் பள்ளிக்கூடத்தில் பிரெஞ்சு படித்தேன். கீழ் வகுப்பில் தமிழ்ப்பாடம் ஒப்பிக்க நான்பட்ட குட்டுகளும் என்னை அப்படித் தூண்டின. தமிழைக் கண்டால், பயம், பரிகாசம், ஆரியம் கிட்ட வரக்கூடாது! ஆங்கிலம் ஏற ஏற, என் தாத்தா, தந்தைமார்களெல்லாரும் மூடர், காட்டுமிராண்டிகள் என்று கருதினேன், பேசினேன், எழுதினேன். ஒன்பதாம் வகுப்பில் சரித்திரம் எடுத்துக்கொண்டேன். கணக்கிற்கும் எனக்கும் ஏழாம் பொருத்தம். அதில் 33% பெற்றதே பிரம்மப் பிரயத்

தனம். ஆங்கிலம், பிரெஞ்சு, சரித்திரம் மூன்றிலும் நல்ல மார்க்கு வாங்கினேன். ஒரு வாறு ஸ்கூல் பைனல் நாடகம் முடிந்தது.

இதற்குள் எனது நடத்தை பாழானதைச் சிறிது சொல்லித் தீர்க்கிறேன். வகுப்பில் மாணவர் பலவிதம், பல ரகங்கள்! சட்டை பளபள வென்றிருக்கும்; வாரமொருதரங்கூடக் குளிக்காமல் வரும் மாணவர் சிலர்; சிலருக்குக் 'கெட்ட பேச்சே' காலட்சேபம். அதற்குத் தினுசு தினுசான சங்கேதங்கள், ஜாடைகளெல்லாம் ஜோடிப்பது இவர் தொழில்; சில பையன்கள் கூடி உபாத்தியாயரைக் குறை சொல்லிப் புதுப்புதுப் பெயர் வைத்துக் கேலி செய்வர். கொட்டாப்புளி வாத்தியார், தூங்குமூஞ்சி, தேவாங்கு, திருப்பதி மங்கி, புல்டாக், நெட்டைக் கொக்கு, தாண்டு கால், புல் தடுக்கி வஸ்தாது என்று ஆளுக்குத் தக்கபடி பெயர் வைத்துச் சுவர்களில் எழுதுவது அவர் தொழில். தடிக்குழந்தைகள் சிலருக்குப் படிப்பேருது. முன்னுலே பாடம் ஒப்பிப்பவரைக் கண்டு பொருமைப்பட்டுத் தனியாகக் கூட்டிச் சென்று, உதைத்து அவமானப்படுத்துவது அவர் தொழில். இன்னொரு சதிக்கூட்டம் கேள்வித்தாள் திருட முயலும். இந்த மாதிரி மாணவர் பலவிதம். நான் எல்லாவித மாணவர் சேட்டைகளிலும் பங்கு கொண்டிருந்ததால், சேர்க்கை வாசனை என்னைக் குரங்காக்கி விட்டது. வகுப்பு மேலே ஏற ஏற, அடக்குவாரின்றி, தீய சேர்க்கையும் வலுத்தது. எனது 15-ஆம் வயதில் எட்டாம் வகுப்பை எட்டினேன். அப்போது எனது மனத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. நல்லது இன்னது, கெடுதல் இன்னது என்று யாராவது எனக்குச் சொன்னுல்தானே தெரியும்?

பாடத்தில் வரும் காதற் கதைகளையும், அவற்றை வியாக்யானம் செய்யும்போது ஆசிரியர்களுக்கும் பையன்களுக்கும் நடக்கும் விநோத வாக்குவாதங்களையும் கேட்கும்போது எந்த வாலிபன் உள்ளந்தான் மாருது? படிப்பின் அடிப்படையில் ஒழுக்கமும் ஆத்ம ஞானமும் இல்லை; ஏதோ அதிகாரிகள் வைக்கும் பாடப் புத்தகங்களைப் படித்துப் பரீட்சை தேறி மேல் வகுப்பிற்குப் போவதைத் தவிர வேறு பயனில்லை.

ஒரு நாள் கணக்கு வகுப்பிலிருந்தேன்; அடுத்த அறையில் தமிழ் ஐயா நளவெண்பா நடத்தினூர். அன்னம் தமயந்திக்கு நளன் காதலேச் சொல்லுகிறது. தமிழ் ஐயா பரமார்த்தம்; தம் மாணவர் பரீட்சையில் முதலில் தேற வேண்டுமென்று அவர்கள் கேட்டதற்கெல்லாம் பொறுமையாகப் பதில் சொல்லுகிருர்!

"மங்கையர்கள் தம்மனத்தை வாங்கு தடந்தோளான்!" என்னும் அடியைப் பிடித்துக்கொண்டு, பிள்ளேகள் கண்ட கேள்விகளெல்லாம் போட்டார்கள்; தமிழ் ஐயா எவ்வளவோ இடக்கரடக்கலுடன் பேசுகிருர். பையன்கள் கண் சிமிட்டுவதும், சிரிப்பதும், குதிப்பதும், ஜாடைகாட்டுவதுமாக வகுப்பு அமர்க்களப்படுகிறது! இங்கே எனக்குக் கணக்கு ஓடவில்லே. மனம் அடுத்த அறையில் நடக்கும் வேடிக்கையிற் பாய்கிறது! நாமும் தமிழ் எடுத்துக்கொண்டிருந்தால் எவ்வளவோ புதிய வேடிக்கைகள் செய்யலாமே என்று தோன்றியது. "அட தடியா! எங்கே கவனம்! மாடே $(a+b)^2$ என்ன?" என்கிருர் கணக்கு ஐயா இங்கே! "வழிக்கரைக்குப்போய்.........! இடியட்!" என்று வசை கொட்டுகிருர்! தடியா, மடையா, என்று ஏதாவது வையாமல் அவர் வாய் சும்மா இருக்காது. அன்று என் மூளேயில் கணக்கு ஏறவில்லே; பெஞ்சிமேல் நின்று தொலேத்தேன்! 'டாண் டாண்!' என்று கணக்கு வகுப்பிற்கு முடிவு மணியடித்தது. விடுதலே! விடுதலே! என்று மகிழ்ந்து, அடுத்த டிராயிங் வகுப்பில் நுழைந்தேன்.

அதுதான் எங்கள் காபினெட் சபை கூடுமிடம். என் நண்பன் தளுக்கு சுந்தரமும், யானேக்குட்டி பிரணதார்த்தியும் என் தோள்மேல் கைபோட்டுக் கொண்டே தமிழ்வகுப்பில் நடந்த தமாஷெல்லாம் சொல்லித் தீர்த்தனர். நாங்கள் இரகசியம் பேசிக் கொண்டிருந்தோம். "ஸ், கவனம்!" என்று சித்திரப் புலவர் போர்டில் யானேக்குட்டியின் படம் போட்டார். பிடித்தது பிரணதார்த்திக்கு எட்டாந் திருநாள். வகுப்பு முழுதும் 'யானேக்குட்டி' ஜபம் பண்ணி அவனேக் கேலி செய்தது. "என்னேப்போலப் பழையது சாப்பிட்டால் நீங்களும் இப்படிப் பெருக்கலாம்!" என்று அவன்

பதில் சொன்னான். ''பழையத்து கிண்டன்! பழையத்து கிண்டன்!'' என்று மற்றொரு பல்லவி! இவ்வாறு பரிகாசம் பேசிக் கொண்டே யானை போட்டோம். படமெழுதுவதில் எனக்குத் தேர்ச்சி உண்டு; 5 நிமிஷத்தில் என் படத்தை முடித்தேன். என் நண்பன் தனுக்கு சுந்தரம் பாதி ரப்பரைத் தேய்த்துக் காகிதத்தையும் பொத்தலாக்கிவிட்டான். அவன் யானை, பன்றி மாதிரி இருந்தது. அந்தப் பக்கத்தைக் கிழித்தெறிந்து, நான் இரகசியமாகப் போட்டுக்கொடுத்தேன். 10 நிமிஷத்தில் எங்கள் வேலை தீர்ந்தது. மீதி நேரமெல்லாம் எமது வாழ்வைப் படுகுழியில் ஆழ்த்தும் பேச்சும் சேட்டையுமாகக் கழித்தோம்.

எனக்கு வாய்த்த சிநேகிதர்களும் கீசகக் கும்பல்கள்! வீட்டில் அதற்கு இதற்கு என்று பணம் வாங்கி என் மனப்படி செலவிடலானேன்; தீய பழக்கங்களுக்கு இரையானேன், இறையானேன்! முகம் விகாரப்பட்டது! குமுத முகம் குரங்கு முகமானது. கன்னம் குழிந்தது; நெஞ்சு கூடு கட்டியது! கண்ணில் நீர் வடிந்தது: மூக்குக்கண்ணாடி போட்டேன்; படிப்பைவிடக் கலியாணமே முதன்மையாகத் தோன்றியது, வெறி பிடித்தலைந்தேன்.

இந்தச் சமயத்தில் என் மாமாவின் இரண்டாம் பெண்ணிற்கு விவாகம் நிச்சயமானது; மூன்றாம் பெண் தங்கத்திற்கும் வயதாயிற்று, சேர்த்துச் செய்துவிடலாம், மாப்பிள்ளை கைவசம் இருக்கிறான் என்று ஏற்பாடு செய்து மாமா காரியத்தை நடத்தி விட்டார். கலியாணமென்றால் எனக்கு வெகு குஷியாயிருந்தது. அதன் பிறகு நான் இங்கே மாடேண் காலேஜில் இண்டர் மீடியட் வகுப்பில் சேர்ந்தேன். மாமனார் மாதம் ரூ. 50 அனுப்பி வந்தார். என் மனப்படி செலவு செய்தேன். ஆறு மாதம் கட்டவிழ்ந்த காளைபோலத் திரிந்தேன்.

*　　　*　　　*

**பி**றகு என் குடும்பத்தில் விசனிக்கத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டன. மாமனார் திடீரென்று மார்படைத்து இறந்து

போனுர்! டாம்பீகச் செலவுகளால் அவர் ரூ. 3,000 கடன் வைத்துச் சென்ருர். அவருடைய சட்ட புஸ்தகங்களேயும், கச்சேரிச் சாமான்களேயும், ஏலம் போட்டுக் கடன் தீர்க்கப் பட்டு, அபரக் கிரியைகளும் நடந்தன. அந்தமட்டும் நடந் ததே பிரம்மப் பிரயத்தனமாயிற்று. அத்தை ஒரு பெண் பள்ளிக்கூடத்தில் வேலே ஒப்புக்கொண்டாள். இரண்டாம் பெண் தேசிய இயக்கத்தில் ஈடுபட்ட கணவனேடு கோபித்துக் கொண்டு வாழாவெட்டியாக ஒரு கைக்குழந்தையுடன் வீட் டில் இருக்கிருள். என் மனேவி கர்ப்பம்; அவளேச் சோழ வந்தானில் எனது வீட்டில் கொண்டு சேர்த்தேன். என் வீட்டில் தகப்பனுர் வயோதிகராகி, சிவலோகப்ராப்தியடைந் தார். அவர் காலஞ் சென்ற பிறகே தந்தையின் அருமை தெரிந்தது. பெரிய குடும்பம் நடக்கவேண்டும். என் தமை யன்மார் இருவரும் பரம ஏழைகள். திண்டுக்கல்லில் உபாத் தியாயரா யிருப்பவர் செய்திதான் முன்பே சொன்னேன். என் தமக்கைகளில் ஒருத்தி (கோமதி) கணவனேப் பறி கொடுத்து இரண்டு சவலேக் குழந்தைகளுடன் வீட்டில் வந் திருக்கிருள். என் தாயார் கிழவி. நான் மேலே படிப்பதா, வேலே தேடுவதா? ''எப்படியாவது கஷ்டப்பட்டுக்கொண்டு பணம் அனுப்புகிருேம், பி. ஏ. தேறி வக்கீலுக்குப் படி!'' என்று தூண்டினர் என் சாது தமையன்மார்.

ஆ, நான் ஒருவன் பி. ஏ. தேறுவதற்காக ஆறு பேர்கள் பட்ட சிரமம் சொல்லி முடியாது! மாதம் ரூ. 30, 40 அனுப்ப வேண்டும். என் பெண்டுபிள்ளேகளே வைத்துக் காப்பாற்ற வேண்டும். என்ன செய்வது? சதாசிவம் ஒரு கோயில் பூஜையை ஒப்புக் கொண்டான். அர்ச்சனே, தேர், திருவிழா என்ற சாக்கில் வரும்படி சம்பாதித்தான். சோமு புரோகிதம் நடத்தினுன். தர்ப்பணம், சங்கல்பம், திவசம், சாவு, கலி யாணம் எல்லாம் பண்ணி வைத்து அரைக்காலும் வீசமுமாக தக்ஷிணேப் பணம் சேர்த்து அவன் எனக்கு அனுப்புவான். என் தாயார் பாவம் குடு குடு கிழவி; நாலு வீடுகளில் அடுப் புக் காரியம் பார்த்து,அவர்கள்தந்ததைஎனக்குஅனுப்புவாள். நான் பி. ஏ. வகுப்பில் அடி வைப்பதற்குள் குடும்பத்தினரின்

இரத்தத்தைப் பிழிந்து விட்டேன்; எங்களுக்கிருந்த இரண்டு ஏகரா நிலமும் அடமானமாகி விட்டது. பி. ஏ. வகுப்பிற்குச் சம்பளம் கட்டவேண்டும்; என்ன செய்வது? என் தர்ம பத்தினிக்கு எழுதினேன். அவள் தாயாரிடம் எதுவும் கேட்க முடியாது; பசையில்லை. நாகரிகத் தந்தை ஒரு போலி வைரத் தோடும், ஒரு வடம் சங்கிலியில் கோத்த திருமங்கிலியமும் தவிர வேறெந்த நகையும் போடவில்லை. எதிர் ஜாமீன் ரூ. 3,000 வாக்களித்தார். நம்ப நீலுதானே மெள்ளத் தரலாம் என்றிருந்து விட்டார். இனி, எமலோகத்திற்கு 'சம்மன்' அனுப்ப முடியுமா? என் கடிதம் கண்டதும் என் மனைவி தாயாரிடம் விஷயத்தைச் சொன்னாள்: ''மாமி அவரை விட இந்தச் சங்கிலி எனக்குப் பெரிதில்லை; இதோ உங்கள் ஆசீர்வாதத்தால் ஒரு மஞ்சளை நூலில் கோத்துக் கட்டிக்கொள்ளுகிறேன். அவர் சந்தோஷமாயிருக்கட்டும். இந்தாரும், இந்தத் திருமங்கிலியத்தை விற்று அவருக்குச் சம்பளப் பணம் அனுப்புங்கள்!'' என்று நமஸ்கரித்துக் கொடுத்தாள். ஆ, அதைக் கேட்டதும் என் மனம் நிலையழிந்து உருகியது. இவ்வளவு கஷ்டப்படுகிறவர்களுக்கு நாம் என்ன நன்றி செய்யப் போகிறோம் என்று என் மனம் துடி துடித்தது! ஆ, பாவி, நானா நன்றி செய்தேன்! அவர்கள் ஆயிரம்பாடு அரைப்பாடு பட்டு ஊனைப் பிழிந்து, உயிரை வருத்தி, மாதாமாதம் அனுப்பிய பணத்தை முன்போலவே கண்டபடி செலவிட்டேன்! சிநேகிதர்கள் என்னைக் கெடுத்தனர். சினிமா தவருது; காதல் காட்சிகளிலேயே சித்தம் சுழலும்; ஹாஸ்டல் சாப்பாடு போதாதென்று வெளியே போகும்போதும் வரும்போதும் காப்பிக்கடைகளில் நுழைந்து காசை வீணுக்குவேன். அத்துடன் உடம்பு அடிக்கடி படுக்கும்; டாக்டர் செலவு வேறு. என் பெற்றோர் செய்த தபோ பலத்தால் படிப்பில் மட்டும் சோடை போகவில்லை. சரித்திரம், ஆங்கிலம், பிரெஞ்சு மூன்றிலும் தேறி, பி. ஏ. பட்டம் பெற்றேன். இனி, நமது கலி தீர்ந்தது என்று வீட்டோர் கருதினர். என் மனைவி முதலில் ஓர் ஆண் பிள்ளை பெற்றாள்; இப்போது ஒரு பெண் பிறந்தது!

பட்டம் பெற்றேன்; உலகிற் புகுந்தேன்! பிழைக்க வழியென்ன என்பதே அடுத்த கேள்வி! ஹிந்துப் பத்திரிகை தேவைப் பத்தியை (Wanted column) பார்ப்பதும், மனுக்கள் போடுவதுமாக ரு. 15 செலவிட்டேன். சுமார் 120 தர்ப்பணம் பண்ணி வைத்துச் சோமு சம்பாதித்ததை தபால் தலையாக மாற்றினதுதான் மிச்சம். பிறகு பி. ஏ. பட்டயத்தைத் தூக்கிக்கொண்டு கச்சேரி கச்சேரியாக அலைந்து, ஒரு குமாஸ்தா வேலையாவது கிடைக்குமா என்று பார்த்தேன். எங்கே போனாலும், 'No Vacancy' 'காலியில்லை' என்று எழுதி ஒட்டி யிருந்தார்கள். அப்படி யாராவது லீவு, பென்ஷன், வாங்கியிருந்து காலியேற்பட்டாலும், அதை எப்படியோ மோப்பம் பிடித்து 1,000 பேர் மனுப் போட்டார்கள். "நீ பிராமணனா?" என்ற ஒரு கேள்வி மண்டையிலடித்தாற் போலக் கேட்டார்கள்! இந்தச் சள்ளைக்காக என் பெயருக்குப் பின்னால் சாதிக்குரிய வால் சேர்ப்பதில்லை. ஒரு தடவை வேலை கிடைக்குமென்ற ஆவலால் நீலகண்ட முதலியார் என்றும் கையெழுத்திட்டு மனுப் போட்டேன். எனக்குமுன் 100 முதலியார்கள் மனுப்போட்டு விட்டனர். பள்ளிக்கூடங்களில் புகுந்து பார்த்தேன்! அவரவர்கள் தங்கள் உத்தியோகத்தைக் காப்பாற்றிக்கொண்டு சிரஞ்சீவியா யிருந்தார்கள். நாற்காலிகள் எதுவும் காலியாயில்லை. முடிவில் பத்துப் பையன்களுக்கு வீட்டுப் பாடம் சொல்லிவைத்தேன்; 30, 40 வந்தது. அத்துடன் ஆங்கில இலக்கிய எம். ஏ.க்கும் படித்துத் தேறினேன். படிப்பெல்லாம் சரிதான். வேலைக்குத்தான் தாண்டவமாடுகிறேன்! எங்கெங்கு இடங் கிடைத்ததோ அங்கெல்லாம் இருந்தேன். இங்கு இரண்டு மாதம், அங்கு நான்கு மாதமாக உத்தியோக வேட்டையாடினேன். வருமானம் எனக்கே கட்டுவதில்லை. நான் பழகிக்கொண்ட நாகரிக வாழ்வு எனக்கே கைவிலங்கானது! என் குடும்பத்தை எப்படிக் காப்பது? மாதம் ரூ. 100 இருந்தால் கட்டி வரும். வழியென்ன? எனக்குத் தெரிந்தது ஐரோப்பியச் சரித்திரம், பிரெஞ்சு, ஆங்கில இலக்கியந்தான். தாவர சாஸ்திரம் கற்றேன்; நம் நாட்டுப் பச்சிலையின் உபயோகம் தெரியாது!

கணக்குப் படித்தேன்; கடை சாமான் ஜாப்தா தயாரிக்கக் கூடத் தடவல்; தமிழ் சுத்த மோசம்; வைதிகக் குடும்பத்தில் பிறந்த எனக்குப் பஞ்சாங்கம் பார்க்கக்கூடத் தெரியாது. பூகோளம் படித்தேன்; எனது ஜில்லா விபரம் தெரியாது; என் ஊரில் என்ன விளைகிறது என்று தெரியாது; எண்சுவடி குழிமாற்றுடன் படிப்பை நிறுத்திக்கொண்டு கடை வைத்த மாணிக்கம் செட்டி புது வீடு கட்டி, நாலு பங்கு வாங்கி ரொக்கம் பதினுயிரம் பாங்கில் போட்டிருக்கிருன். நான் வெற்றிலை பாக்குக் கடை வைக்கக்கூட லாயக்கில்லை; உடம்பு வணங்காது. என்னுேடு முதல்வகுப்புப் படித்த ரங்கன் 'கணபதி விலாஸ்' சாப்பாட்டுக் கடை வைத்துக் கிண்ணி கிண்ணியாகச் சில்லறை கொட்டிப் பை கட்டுகிருன்! அவன் செய்யும் மைசூர்ப் பாகிற்கு வெளியூரிலிருந்து 'வேண்டு கோள்' வருகிறது. அந்தத் துணிவும் எனக்கில்லை ; படித்த கௌரவம்; வெள்ளைச்சட்டை கறைபடாதுஇருக்கவேண்டும். என்னுடன் 6—வது வரையிற் படித்துவிட்ட மருதாசலம் ஜவுளிக்கடை வைத்துப் பணந் தட்டிவிட்டான். என்னுடன் படித்து, ஸ்கூல் பைனலில் குழி பறித்த குப்பண்ணு, சினிமாக் கம்பெனியில் புகுந்து ஆட்டத்தில் தேர்ச்சிபெற்று இப்போது ஹாலிவுட்டிற்குப் போயிருக்கிருன். அந்தத் தைரியம் எனக்கில்லை; ஹாம்லெட், ஒதெல்லோ, மாக்பெத் என்ருல் நடிப்பேன்; தமிழ் வராது! மின்சார ஒளியிலும் சூட்டிலும் இருந்து ஆடும் தேகக் கட்டும் எனக்கில்லை. அதன் காரணத்தை முன்பே சொன்னேன். மளமளவென்று ஆங்கிலத்தில் லெக்சரடிப்பேன்! அதுதான் ஆங்கிலக் கல்வியால் நான் பெற்ற பயன்!

என் குலாசாரங்களை இழந்தேன்! தாய்மொழியை அவமதித்தேன்! ஒழுக்க மிழந்தேன்! பரதேசிக் கோலத்திற்கு ஆளானேன். வேலைக்கு வேட்டையாடினேன்! என் மனைவி இரண்டு குழந்தைகளுடன் அங்கே புலம்புகிருள்! அவளிடம் மஞ்சள் தாலிதான் இருக்கிறது! நான் இரண்டு காசு கொண்டு வருவேன் என்று ஆவலாக எதிர்பார்க்கிருள். எனக்காகக் காயக்லேசம் செய்து கொண்டு, பிறர் வீட்டில் பணி

விடை செய்து, மாதா மாதம் பணமனுப்பிய என் அன்னை அதோ தலையில் கைவைத்து,''இப்படியா நமது கதியானது!'' என்று புலம்புகிறுள். எனக்காக நாய்ப் பாடுபட்டுக் காசுகாசாகச் சேர்த்தனுப்பிய தமையன்மார்கள், அதோ ஏமாறித் தலையில் கைவைத்து வருந்துகின்றனர்! இதோ நான் என்ன செய்வதென்று தெரியாது எனது பரிதாப வாழ்க்கையை நொந்து நொந்து வெந்து போகிறேன்!

To be or not to be ; that is the question !

ஊரில் ப்ராமண - அப்ராமண உணர்வால் வைதிக விருத்தி நடக்கவில்லை. ஒருநாள் வீட்டில் எல்லாரும் முழுப் பட்டினி ; குழந்தைகள் 'அம்மா அம்மா' என்று அழுது துடிக்கின்றன; மனைவி அழுகிறுள்! அப்போது ஊரில் முகாம் போட்டிருந்த டிபுடி கலெக்டரைப் பார்த்து வேலை கேட்கப் போனேன். ''மனுவை ஹெட் கிளார்க்கிடம் கொடுத்துப் போமையா! சும்மா இதுதான் வேலை உங்களுக்கு ! No Vacancy'' என்ருர். வெட்கிப்போய் வீடு திரும்பினேன்! என் தமக்கை பொன்னேலையை அடகு வைத்து இரண்டொரு வாரம் குடும்பம் நடந்தது.

எனக்கு உலக வாழ்வு புளித்துப் போயிற்று. குடும்பம் இன்னும் பட்டினியால் வருந்துகிறது. மனைவி விசனத்தால் எலும்பாக இளைத்துப்போனுள். குழந்தைகள் ஊட்டமின்றி வருந்தின. இந்தப் பரிதாபம் என்னுல் சகிக்க முடியவில்லை. தற்கொலை செய்து கொள்வதென்றே தீர்மானித்தேன். மனைவிக்கு நல்லதங்காள் கதை சொன்னேன். என் மனத்தை அவள் அறிந்தாள்.

முன்னே அடியெடுத்து வைத்தேன். மனைவி என் காலில் விழுந்தாள். ''ஐயோ! என்னை அநாதையாய் விட்டுப் போக வேண்டா! உங்களை நான் ஒன்றும் கேட்கவில்லை; கழுத்தில் இந்த மஞ்சள் தாலி கட்டிக் கொண்டிருந்தால் போதும்; காப்பிக் கடை வைத்தாவது இந்தக் குழந்தைகளைக் காப்பாற்றிவிடுவோம். பிறகு அவர்கள் தலையெழுத்துப்படி நடக்கட்டும்,'' என்று விம்மியழுதாள். தாயார், '' இப்படி உன்

புத்தி போனதே! என் எலும்பை உருக்கிப் பணம் அனுப்பினேன்! நீ படித்து வாழ்ந்து சம்பாதிக்காமல் போனாலும் போகட்டும்; அவள் சொல்வதுபோல் சாப்பாட்டுக்கடை வைத்தாவது பிழைப்போம். நீ போனால் நான் நெஞ்சு வெடித்துச் சாவேன்; அபவாதம் வரும்!'' என்று முறையிட்டாள். தமையன்மார்களும் புத்தி சொன்னார்கள். அவர்கள் முன்னால் சரி சரியென்று தலையாட்டினேன். ஒருநாள் திடீரென்று தப்பியோடினேன், ஆற்றில் குதித்தேன்; மூழ்க மனமில்லை. நீந்தி வந்து விட்டேன்; திருவண்ணாமலைக்கு ஓடினேன்; ஒரு செங்குத்தான பாறையிலிருந்து தாவி உயிர்விட முயன்றேன்; மனம் வரவில்லை. அச்சமயம் ஒரு துறவி வந்து, ''அட பைத்தியமே! என்ன செய்கிறாய்? '' என்று என்னை இழுத்துத் தமது குகைக்குக் கொண்டு வந்து ஞானோபதேசம் செய்தார்; நான் அவருக்குச் சீடனாகிச் சில நாள் காலை மடக்கி மூச்சைப் பிடித்தேன்; மனத்தைக் கட்ட முயன்றேன். மனம் அங்கே குழந்தைகளை வைத்துக் கொண்டு வருந்தும் என் மனைவியிடம் சென்றது. நிம்மதி வரவில்லை. அச்சமயம் சங்கராச்சாரியார் திருவண்ணாமலைக்கு வந்தார்; அவர் வடக்கே யாத்திரை செல்வதாக அறிந்தேன்; பக்த கோஷ்டிகளுடன் நானும் புறப்பட்டேன். எனக்கோர் உத்தியோகமும் கிடைத்தது— கரண்டியாபீஸ் வேலை; கறி நறுக்க வேண்டியது, வேகும் சாமான்களைக் கிண்டவேண்டியது; நளபாகம் சாமண்ணாவுக்குப் பிடியாள் ஆனேன்... எம். ஏ. படித்ததற்கு இந்த உத்தியோகமாவது கிடைத்ததே! ஆசாரியார் உபதேசங்களைக் கேட்டுக் கேட்டு நானும் கொஞ்சம் ஞானவிசாரம் செய்தேன். 'உடல் உலகம், மனை, மக்கள், பட்டம், பதவி எல்லாம் அநித்தியந்தானே; அநித்தியமான வீடு, அநித்தியமான உத்தியோகம்... ...... எல்லாம் நமக்கெதற்கு? ஊரார் பிக்ஷை நடத்துகிறார்கள். சங்கராச்சாரியார் சாப்பாடு போடுகிறார். தாட்டாகச் சாப்பிடுவோம்; வேதாந்தம் கேட்போம்; தூக்கம் போடுவோம்; அதுவே நமக்கு நிஷ்டை...... மற்றதெல்லாம் பரப்பிரம்மமே பார்த்துக் கொள்ளும்' என்ற முடிவிற்கு வந்தேன். காசிக்கு வந்தேன். அங்கே சாமியார்க் கும்பல்

களைப் பார்த்தேன்; அவர்களுக்கு ஆசோபசாரங்கள் நடக்கின்றன. நாமும் அப்படி யிருப்போம் என்ருெரு சபலம் தட்டியது.செலவு இரண்டணு—தலை மொட்டை; இடுப்பில் காஷாயம்; 'சிவோஹம் சிவோஹம்' என்று கிளம்பினேன். என்னை சதாசிவப் பிரம்மமாக நினைத்துக் கொண்டேன்...... பேதை! மாந்தர் என் காலில் விழும்போதெல்லாம் உள்ளம் 'அட திருடா!' என்றுறுத்தியது. துறவிக் கும்பல்களுடன் ரிஷிகேசம் சென்றேன். அங்கே மாகமேளத் திருநாள் பலமாக நடந்தது. துறவிகளுக்குப் பலமான சமாராதனைகள் நடந்தன. நான் கவலையில்லாமல் சாப்பிட்டு ஒரு சத்திரத் திண்ணையில் உட்கார்ந்திருந்தேன். காஷாயத்தால் என் மனம் அடங்கவில்லை; நாடக அரசன் நாடாள முடியுமா? அன்ன விசாரம் ஒழிந்தால் சொர்ன விசாரம்; பிறகு அபிமான விசாரங்கள் பல வருகின்றன; ஆத்ம விசாரம் வரவில்லை. திண்ணை மூலையில் ஓர் இளம் பெண் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்; அவள் மடியில் மூன்று வயதுக் குழந்தை யிருந்தது. அக்குழந்தையிடம், "நமது விதி அதுதான்," என்று தனது துயரைச் சொல்லிப் புலம்பினுள்—அவள் தமிழ் நாட்டுப் பெண். எனது கல்நெஞ்சும் அக்காட்சியைக் கண்டு இரங்கியது. "ஏனம்மா அழுகிருய் ?" என்று கேட்டேன். அப்பெண் இன்னும் பலமாக விம்மியழுது தன் கதையைச் சொன்னுள்:

"சுவாமிகளே நான் இருப்பது சேலம்! பரம ஏழைக் குடும்பம்; இந்தப் பையனின் தகப்பனுர் மூன்று குழந்தைகளை விட்டுக் காஷாயதாரியாகப் புறப்பட்டார். அவரைத் தேடிக் கொண்டே இப்படித் திரிகிறேன்......வழியில் இரண்டு பிள்ளைகள் இறந்தனர். இந்தக் குழந்தைதான் மிச்சம்; அதற்கும் உடம்பு நன்ருயில்லை...... அவரையும் காணவில்லை......... என் விதி எப்படியோ......! தெய்வம் என் தலையில் இப்படி எழுதியது!" என்று அலறினுள்.

நான் அந்தப் பெண்ணை ஓர் அநாதை விடுதியில் சேர்த்தேன்;அவள் கண்ணீர் எனது கண்ணீரைப் பெருக்கிற்று;எனது வீட்டை நினைத்தேன். "ஆஹா! நம் இளம் மனைவியும் இப்ப

டித்தானே இரண்டு குழந்தைகளை வைத்துக்கொண்டு தவிப்பாள்! என்று நினைக்கும்போதே காஷாயத்தை உதறித் தள்ளினேன். அங்குமிங்கும் சேர்த்த பணம் ரூ. 50 இருந்தது; சாமண்ணு புண்ணியத்தில் அண்டா வுருட்டுவதில் கிண்டனுனேன். சோற்றுக் கடை வைத்தாவது மனைவி மக்களைக் காப்பதே கடனெனத் தோன்றியது; உடனே சீட்டெடுத்து வண்டி யேறினேன்; வழியெங்கும் பஞ்சத்தால் அடிபட்ட ஏழைகளின் காட்சியைக் கண்டுருகினேன். சோழவந்தானில் இறங்கிய போதே என் கால் நடுங்கியது. நாட்டில் வெள்ளப் பஞ்சம்; எனது குடும்பம் என்னவாயிற்ருே? மனம் படபடக்கிறது! அக்கிரகாரத்திற்குச் சென்றேன்; வீட்டுக் கதவைத் தட்டினேன். ஒரு கிழவர் கதவு திறந்து, ''நீர் யார்?'' என்ருர், ''நீர் யார்?'' என்றேன். ''நான் இந்த வீட்டுக்காரன்'' என்ருர். ''இது என் பாட்டனுர் சாமிநாத தீக்ஷிதர் வீடல்லவோ?'' என்றேன்! ''அதெல்லாம் பாட்டனுர் காலம்! இப்போது இதை நான் வாங்கிவிட்டேன்,'' என்ருர். ''அப்படியானல் வீட்டிலிருந்தவர்கள் எங்கே?'' என்றேன். ''எந்தப் பரதேசம் போனுர்களோ!'' என்று சொல்லிக் கதவை அடைத்துக் கொண்டார்.

தலை சுழன்றது ! என் தர்ம பத்தினி எங்கே ? என் குழந்தைகள் என்னவாயின? என் அருமைத் தாயார் எங்கே? தமையனுர் எங்கே? அக்காள் குடும்பம் எங்கே? தேடினேன்; தகவல் கிடைக்கவில்லை; திண்டுக்கல் சென்று சுப்புவைக் கண்டு விவரம் கேட்டேன்; என் மாமியார் தம் இரண்டாம் பெண்ணுடன் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக் கொண்டதாகக் கேள்விப்பட்டேன்; கடைசி மகளும் தாயார் வழியையே பின்பற்றியிருக்க வேண்டுமென்றே ஊகித்தேன். கிறிஸ்து மடங்களிலெல்லாம் தேடினேன்; எனது ஊகமே உண்மையானது; என் மாமியார் இரண்டு பெண்களுடன் அமெரிக்கன் மிஷன் சர்ச்சில் சேர்ந்து விட்டாள். என் மனைவி பத்தாவது தேறி மங்களபுரத்தில் உபாத்தினி வேலைக்குப் படிக்கிருள்; தங்கம் எலியட்டானுள்; என் மகள் சங்கரி மேரி என்ற திருநாமத்துடன் மங்களபுரம் பள்ளிக்கூடத்தில் இரண்டாம் வகுப்பில் படிக்

கிருள். என் மகன் சிவராமன் **ஜான்** ஆகிப் பசுமலே யில் படிக்கிருன்! அழுவதா, சிரிப்பதா? எனது நிலேக்கு வருந் துவதா? நாட்டு நிலேக்கு வருந்துவதா? இதோ நான் காக்க வேண்டிய குடும்பத்தைப் பாதிரிமார் காக்கின்றனர்...வெட் கம்! வெட்கம்!

என் தாயார் மனம் வெடித்து, மூச்சடைத்து, இந்தப் பாவியின் பெயரைச் சொல்லிக்கொண்டே இறந்து போஞ ளாம்! தமையன்மார் இருவரும் வீட்டை விற்று ரூ. 800 ரொக்கம் எடுத்துக்கொண்டு வெள்ளியம்பலத் தெருவில் பலகாரக் கடை வைத்திருக்கிருர்கள்.

இரங்குங்கள்! நண்பர்களே, இரங்குங்கள்! உங்கள் கண் ணில் கண்ணீர் இருந்தால், கல்லூரிக்கு முன்னிருக்கும் இந்த ஆலமரத்தடியில் வடியுங்கள்! இங்கேதான் எஃப். ஏ. தேறினேன், பி. ஏ. தேறினேன், என்று நான் துள்ளிக் குதித் தேன்! இங்கேதான் இன்றும் இதோ பரிதாபக் கண்ணீர் வடித்து நிற்கிறேன்!

To be or not to be; that is the question! இதுவே எனது முன்னுரை! இதுவே என் முடிவுரை!

நீலகண்டன் கதை 2,000 பேர் உள்ளத்தையும் உருக்கி யது! அன்று வேலேயில்லாத் திண்டாட்ட மகாநாடு (Un-employment Conference) கூடியது. சுமார் 1,500 பேர் அதில்சேர்ந்தனர். தாங்கள் படும் துயர்களேப் பேசினர்; கைவீசி னர்; சட்டசபையில் இதற்கொரு ஏற்பாடு செய்யவேண்டு மென்று மனுப்போட்டனர்! பள்ளிக்கூடத்தில் தொழிற் கல்வி புகட்ட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றினர். நீல கண்டனேத் தம் தலேவனுக்கினர். மறுநாள் ஒரு பெரிய பட்டினிப் பட்டாளம் சென்னேக்குப் புறப்பட்டது!

# 2. தன் முயற்சி

அன்பர்களே, மேற்சொன்ன நீலகண்டன் கதையைச் சிந்தித்துப் பாருங்கள்! இவ்வாறு ஆயிரக் கணக்கான வாலிபர் "'பசி, வேலை!' என்று கச்சேரிக் கதவை இடிக்கின்றனர்; கையலுத்துக் கண்ணீர் வடிக்கின்றனர்; பட்டினியால் துடிக்கின்றனர். அரசாங்கம் ஓர் ஆட்சி யந்திரச்சாலை; அது படை, ஊர்காவல், நீதி, சுகாதாரம், கல்வி, தொழில் என்று பல இலாகாக்களாக முறை வகுக்கப்பெற்றது. ஒவ்வோர் இலாகாவிற்கும் இத்தனைச் சிப்பந்திகள் என்று ஏற்பட்டிருக்கிறது. கணக்கிற்கு மேல் ஆயிரக்கணக்கான பேர் வந்து மோதினால் வேலையேது? எல்லாரும் சர்க்கார் வேலையை எதிர்பார்க்க முடியாது; சர்க்கார், சமூகம், இரண்டும் சேர்ந்தே வறுமைப் பிணியை ஒழிக்கவேண்டும். சர்க்கார் வேலைக்கே ஏங்கித் திரியாமல், சமூகத்திற்கு நன்கு பயனாகும் தொழில்களைச் செய்து பிழைக்கவே நம் வாலிபர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். கடவுள் கொடுத்த அறிவைப் பயன்படுத்தி நம் வாலிபர் தன்முயற்சியும், தன்னம்பிக்கையுங் கொண்டு வாழவேண்டும்.

# 3. எடிசன்

மின்சாரப் புலவனுன எடிசன் (Thomas Alva Edison) *11—2—1847-ல்*, அமெரிக்காவிலுள்ள மிலான் என்னும் ஊரில், பரம ஏழைக் குடும்பத்தில் பிறந்தான்: போர்ட் ஹூரன் (Port Huron, Michigan) என்னும் ஊரில் அவன் பெற்ருேர் குடியேறி வயிறு வளர்த்தனர். வீட்டில் வறுமை. சிறு வயதிலேயே எடிசன் இரயிலில் பத்திரிகை விற்று அன்ருடம் கிடைக்கும் சிறு தொகையைத் தன் பெற்ருேர் செலவிற்காகத் தந்தான். பத்திரிகையுடன் இரயிலில் போகும்போதே, நீராவி யத்திரம் எப்படி வேலை செய்கிறது என்று அவன் கவனிப்பான்; தந்தி எப்படிப் போகிறது, தந்திப் பொறியின் சூட்சுமம் என்ன என்று பார்த்தறிவான். மின்சார யந்திரம் எப்படி வேலை செய்கிறதெனப் பார்ப்பான். இப்படியே பார்த்துப் பார்த்துத் தானும் ரசாயனத்தில் தேர்ச்சி பெற்று, இவ்வாறு மின்சார அற்புதங்களைச் செய்யவேண்டுமென்று அவன் கனவுகள் காண்பான்; பிறகு, தனது வரும்படியில் சிறிது சிறிதாக்ச் சேர்த்து, ரசாயன நூல்களையும், கருவிகளையும் வாங்கினுன். கை பத்திரிகை விற்கும்; கண் ரசாயன நூலில் இருக்கும். வீட்டில் ஓயாது ரசாயனப் பரிசோதனைகள் செய்வான். இவ்வாருக அவன் 15-ஆம் வயதில் தந்தியின் நுட்பங்களைத் தேர்ந்து, தந்தி இலாகாவில் வேலை பெற்ருன். கன்னடா, ஐக்கிய மாகாணங்களிலுள்ள பல ஊர்களில் எடிசன், தந்தி வேலை பார்த்தான். ஒரு நாள், 'சீ, ஒருவர் கீழே உத்தியோகம் பார்க்கக்கூடாது; நாமாக ஏதாயினும் கண்டுபிடிக்கவேண்டும்' என்று தோன்றியது இந்த வாலிபனுக்கு. அவன் மின்சார நிபுணனுனன். ஏதேதோ புதிய சோதனைகளைச் செய்து பழகினுன்; 21-ஆம் வயதில், Automatic Repeater (தந்திச்

கட்டையின் உதவியில்லாமலே ஒரு கம்பியினின்று மற்றெரு கம்பிக்குச் செய்தி தாவும் ஓர் அற்புதமான மின்சார சூட்சுமத்தைக்) கண்டுபிடித்தான். அதைத் தொடர்ந்து, மனித சமுதாய முன்னேற்றத்திற்கேற்ற பல மின்சாரப் பொறிகளை அமைத்தான். 1869-ல் நியூயார்க்கில் Gold and Stock Company (கோல்டு அண்டு ஸ்டாக் கம்பெனி) அவனது மின்சார ஆராய்ச்சிக்கு வேண்டிய உதவியளித்தது. அவன் தான் கண்டுபிடித்த அச்சுத் தந்திக்காக (Printing Telegraph) 40,000 டாலர் வெகுமதி பெற்ருன். அந்த முதலைக்கொண்டு எடிசன் நியூயார்க்கில் ஒரு பெரிய மின்சாரக் கூடமும் (Electric Laboratory) யந்திர சாலையும் ஏற்படுத்திப் புதுப் புதுப் பொறிகள் கண்டுபிடிக்கவே வாழ்வை அர்ப்பணம்செய்தான். பிறகு (West Orange) வெஸ்ட் ஆரஞ்சு என்னும் இடத்தில் தனது ஆராய்ச்சியை நடத்தி, நவீன நாகரிக வுலகிற்குப் பெரும் பயனுகும் பல மின்சார சூட்சுமங்களைக் கண்டுபிடித்தான். பேச்சுக் கருவி (Phonograph), சலனப் படம் (Cinematograph), சுரங்கங்களிற் பயனுகும் புகையா விளக்கு (Incandescent lamp), முதலிய பல வியக்கத்தகு பொருள்களைச் செய்து உலகிற்குதவினன். உலகெல்லாம் இப்போது எடிசனைப் புகழுகிறது.

---

# 4. புக்கர் வாஷிங்டன்

**பு**க்கர் வாஷிங்டன் உதாரணத்தைப் பாருங்கள்! அவனை விட ஏழை நம்நாட்டில் இல்லை என்னலாம். அவன் நாயினும் கேடாக நடத்தப்பட்ட நீக்ரோ அடிமை மகன். மால்டன் நகரத்து உப்புச் சுரங்கத்தில் கூலிவேலை செய்து கொண்டிருந்த இந்தப் பையனுக்குப் படித்து முன்னேறவேண்டுமென்று ஆத்திரம் பிறந்தது. ஏழைத் தாயார் ஓர் அரிச்சுவடி வாங்கித் தந்தாள். அதை முடித்து அவன் மேற்கொண்டு படிக்கத் துடித்தான். பகலெல்லாம் வயிற்றுப் பிழைப்பிற்காக உழைத்துத் தாயாரைக் காப்பாற்றும் இச்சிறுவன், இராப் பள்ளிக்கூடத்திற் படித்தான். பிறகு கையில் பைசா இல்லாமல் 500 மைல் தூரமுள்ள ஹாம்டனிலிருக்கும் கல்லூரியில் சேரப் புறப்பட்டான்! யார் சிபார்சும் கிடையாது. கூலிவேலை செய்து, வழிச் செலவைச் சம்பாதித்துக் கொண்டே ஹாம்டனைச் சேர்ந்தான். பள்ளிக்கூடத் தலைவியைப் பார்த்தான் இச்சிறுவன். ''அம்மையே நான் ஏழை; படிக்க ஆவல்! 500 மைல் நடந்து வந்திருக்கிறேன்; தங்கள் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொண்டு என்னை முன்னுக்குக் கொண்டுவரவேண்டும்,'' என்ருன். பையன் பஞ்சப் பரதேசி போலிருக்கிருன். பசியாலும் களைப்பாலும் உடல் வாடியிருக்கிறது. பார்த்தாள் பள்ளித் தலைவி; ''சரி, இந்த அறையைப் பெருக்கு!'' என்ருள். கண்ணுடி போற் காணும்படி சுத்தமாகப் பெருக்கினுன். ''சிறிய வேலையில் நீ கவனமாயிருக்கிருய்; நல்லது பள்ளிக்கூடச் சேவக வேலை பார்த்துக் கொண்டே படி!'' என்ருள். அவ்வாறே படித்தான்; முன்னேறினுன். ஆம்ஸ்ட்ராங்(Armstrong)என்ற சிறந்த கல்விமான் இவ்வீரச் சிறுவனை அருமையாகக் கவனித்துப் பயிற்றினுர். 1878-ஆம் ஆண்டு,

தகுதிச் சீட்டுப் பெற்றான் வாஷிங்டன். உடனே என்ன செய்தான்? அடிமை வேலைக்கு மனுப்போட்டானா? இல்லை, நேராகத் தன் ஜாதியினரைச் சீர்திருத்தப் புகுந்தான். அவன் நீக்ரோவருக்குச் செய்த அருந்தொண்டு வெள்ளையரை வியக்கச் செய்தது. அவனது சொற்பொழிவை உலகம் கேட்டு மெச்சியது. அவன் 1881-ஆம் வருஷத்தில்(Tuskgi)துஸ்க்கி என்னுமிடத்தில் சுய முயற்சியால் ஒரு பள்ளிக்கூடம் தொடங்கினான். துஸ்க்கி ஒரு சிறு கிராமம்;நீக்ரோவரும் அமெரிக்கரும் சேர்ந்து அதில் 2,000 பேர் வசித்தனர். முதலில் ஒரு சர்ச்சின் பின்புறம் 40 மாணவருக்குப் பள்ளிக்கூடம் போட்டான் புக்கர் வாஷிங்டன். மிகவும் எளிமையாக வாழ்ந்து, தனது வருமானத்தில் மிச்சம் பிடித்து, ஒரு தோட்டம் வாங்கி, அதில் மாணவருக்கு விவசாயத் தொழில் கற்பித்தான். தானே முதலில் மண்வெட்டி பிடித்து உதாரணங் காட்டினான். பயிர் செழித்தது. அதன் பின் மாணவர் உதவியைக் கொண்டே சூளை போட்டு மரஞ் செதுக்கி, அஸ்திவாரம் தோண்டிப் பள்ளிக்கூடக் கட்டிடங்களை அவன் அமைத்தான். மேன்மேலும் தொழில்களைப் பெருக்கி, மாணவருக்கு எண்ணெழுத்துடன் பிழைக்கும் வழியும் கற்பித்தான். தொழில் பெருகப் பெருகப் போதியபணம் சேர்ந்தது. துஸ்க்கி பள்ளிக்கூடம் அற்புதமான நிலயமானது. பள்ளிக்கூடத்தில் வேலை செய்வோருக்கு அங்கேயே வீடு வாசலெல்லாம் அமைத்தான்; தியாக புத்தியுள்ள ஆசிரியர்களையே தேர்ந்தெடுத்தான்; பெண்களுக்கேற்ற தொழிற் பகுதிகளை ஏற்படுத்தினான். துஸ்க்கிக் கல்லூரி 2,350 ஏகராவில் அமைந்துள்ளது. அதில் 107 கட்டிடங்கள்; விவசாயத்திற்காகத் தனியாக 22,300 ஏகராக்கள் உள்ளன. ஏராளமான மாடுகள் வளர்கின்றன; மரவேலை, சித்திரம், துணி வெளுத்தல், அச்சுவேலை, இரும்புவேலை, நெசவு, தையல், தோல்வேலை, வண்டி செய்தல், குழாய் செய்தல், மின்சார வேலைகள், சிற்பம், நீராவியந்திர வேலைகள், தகரவேலை முதலிய பலதொழில்கள் கற்பிக்கப்படுகின்றன. இன்று காலத்திற்கேற்றபடி இன்னும் பல மின்சாரத் தொழில்கள் நடக்கின்றன. இத்துடன் ஆங்கிலம், கணிதம், சரித்திரம், புவி

நூல், அறிவு நூல், சங்கீதம், வைத்தியம், ராணுவப் பயிற்சி முதலியவை திறமையாகப் பயிற்றுவிக்கப்படுகின்றன. புக்கர் வாஷிங்டன் நீக்ரோ ஜாதியார் முன்னேற்றத்திற்குச் செய்த பணிகளை மெச்சிப் புகழ்ந்து, வெள்ளையர் வெகுமதி வழங்கினர். ஐக்கிய மாகாணத் தலைவர் மேகன்ஸியே துஸ்க்கிக் கல்லூரியை நேரே வந்து பார்த்து மகிழ்ந்து, புக்கர் வாஷிங்டனுக்கு வேண்டிய உதவி செய்தார்.

இவ்வாறு தன்முயற்சியும் தன்னம்பிக்கையும் கொண்டு பிறநாட்டு வாலிபர் முன்னுக்கு வருகின்றனர்! அவர் கல்வியை கல்விக்காகவே கற்கின்றனர்; அறிவை அறிவிற்காகவே வளர்க்கின்றனர்; அகண்டமான இயற்கையின் சூட்சுமங்களைத் துருவி ஆராயப் புகுந்து, புதுப்புது அற்புதங்களைக் காண்கின்றனர். நம் நாட்டிலும் ஸி. வி. ராமன், ஜே. ஸி. போஸ் முதலியோர் தன் முயற்சியாலேயே அற்புத முன்னேற்றமடைந்தனர். கலாசாலைப் படிப்புப் பிடிக்காது, திரிந்த ரவீந்திரர் தம் இயல் வழிச்சென்று கவீந்திரராக விளங்கினர்.

பிற நாடுகள் கல்வியில் அடைந்துள்ள முன்னேற்றத்தைக் கண்டு நாமும் அவ்வாறு முயன்று முன்னேற வேண்டும். இனிப் பிற நாடுகளில் கல்வி வளர்ச்சியைக் காண்போம்.

# 5. மேனாட்டுக் கல்வி

நாட்டுப் புதல்வரை வீரராக்குவதே மேனாட்டுக் கல்வியின் நோக்கம். அறிவு, கலை, ஒழுக்கம், உடலுறுதி, தொழிலறிவு, நாட்டன்பு—இவை ஒவ்வொரு பையனின் இயல்பிற்கும் திறமைக்கும் ஏற்றபடி வளர்ச்சி பெறவே போதனா முறைகள் அங்கே அமைந்துள்ளன. பள்ளிப்படிப்புடனே தேசாவேசமும், சிறுவருக்கு வளர்கிறது. சுதேசத்தைப் பெருமைப்படுத்தும் வீர வாலிபர் கலாசாலையினின்றும் வெளி வருகின்றனர் பெற்றோர் குழந்தையின் இயல்பும், நோக்கமும் அறிந்து தக்க முறையில் கல்வி பயிற்றுகின்றனர்.

ஓர் உதாரணம்: எனக்குத் தெரிந்த ஆங்கிலச் சிறுவன் ஒருவன், எட்டு வயதுக்குள் எண் எழுத்துக் கற்றான்; எடுத்த புத்தகம் தடவாது படிப்பான்; பொல்லாத சுட்டி; அரை நொடி சும்மா இருக்க மாட்டான். தந்தை அவனுடைய பிறந்த நாளிற்காக ஒரு கடிகாரம் பரிசளித்தார். ஒருநாள் அவன் தங்கையுடன் கோபித்துக்கொண்டு, கடிகாரத்தை அவள் மேல் எறிந்தான்; கண்ணாடி உடைந்தது; முள் நின்று போயிற்று; சாவி யேறவில்லை. தங்கை தந்தையிடம் கோட் சொல்ல ஓடிப்போனாள். சிறுவன் ஒரு கடியாரக் கடைக்கு ஓடினான். ''இந்தக் கடியாரத்தைப் பழுது பார்க்கவேண்டும்'' என்றான். கூலி ஒரு ரூபாய் பேசினான். கடிகாரத்தைத் தொழிலாளி அக்கக்காகப் பிரித்து மீண்டும் சேர்ப்பதைக் கூர்ந்து கவனித்தான் பையன். தொழிலாளி வேறொரு கடிகாரத்தைப் பழுது பார்க்கத் தயாராக வைத்துவிட்டுச் சிற்றுண்டி சாப்பிடப் போனான். ஆங்கிலச் சிறுவன் கை துருதுருத்தது. அந்தக் கடியாரத்தைக் கழற்றினான்; பாகங்களைப் பிரித்தான்; பழுது பார்த்து, மீண்டும் சேர்த்துப் பக்காவாக்கிவிட்டான். வந்து

பார்த்த தொழிலாளி வியந்து போனான்; "தம்பி, நீ கூலிதர வேண்டாம்; உனது கெட்டிக்காரத்தனத்திற்கு ஒரு ரூபாய் இனாம்," என்று அவனது கடிகாரத்தைத் திருப்பித் தந்தான். "வேலைக்குக் கூலி தராமல் போவது நியாயமில்லை. என்னிடம் பணமில்லை; ஒரு ரூபாய்க்குப் பதிலாக இந்தக் கோட்டை (Coat) வைத்துக் கொள்ளுங்கள். வந்தனம்!" என்று சட்டையைக் கழற்றித் தந்து வீட்டிற்கு வந்தான் பையன். தகப்பனார் கோபமாயிருந்தார். தாயாரிடம் போனான். காலையில் போன பையன் மாலை 5 மணிக்கே வந்தான். "அம்மா, இதோ கடிகாரம் நன்றாக ஓடுகிறது; இனி எந்தக் கடிகாரத்தையும் நான் பழுது பார்ப்பேன்!" என்றான். வீட்டில் ஒரு பழைய கடிகாரம் இருந்தது; அதைப் பழுது பார்த்துக் காட்டினான். தந்தை மகிழ்ந்தார். பையனை யந்திரத் தொழிலில் பயிற்றினார். அந்தப் பையன் மெக்கானிகல் எஞ்ஜிநீயரானான்!

திப்பு சுல்தான் குழந்தைப் பருவத்திலேயே கத்தியை விரும்பினான். நெப்போலியன் போர்ப்பறையை விரும்பினான். ஈடன் கல்லூரி கிரிக்கெட் மைதானத்திலேயே வெல்லிங்டன் தான் வாதர்லூ வீரனாக விளங்கப் போவதைக் காட்டினான். ஐரோப்பியர், தம் குழந்தைகள் முன், விளையாட்டுச்சாமான்களாக உள்ள ரயில், கப்பல், விமானம் முதலியவற்றை வைக்கின்றனர். பிள்ளையின் மனம் எதில் ஆவலாக ஈடுபடுகிறதோ அந்த வழியே அதைப் பயிற்றுகின்றனர். அதே மாதிரி நம் குழந்தைகளின் புலமையும் ஊக்கமும் எதில் செல்லுகிறதெனப் பார்க்கவேண்டும்; அதில் அவர்களைப் பயிற்றிப் புலவராக்க வேண்டும். நம் வறுமை மடமைப்பிணி தீர்ந்து, நாமும் மனிதராக வாழவேண்டுமானால், நாட்டில் கல்வியும் தொழிலும் தகுந்த வளர்ச்சி பெறவேண்டும். மற்ற நாட்டார் இந்த வழியில் எவ்வளவு முன்னேறி யிருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள்!

# 6. கிரேக்கக் கல்வி

கிரேக்கர் தம் குழந்தைகளை வீரராகவே பயிற்றினர். அறிவை அறிவிற்காகவே புகட்டினர்; தேக பலத்தைக்கடமையென வளர்த்தனர்; சோதாக்களை உலகின் சுமையெனக் கருதினர். அறிவு, அழகு, ஆற்றல் இம்மூன்றும் கிரேக்கர் வாழ்வின் மூன்று உயிர் நாடிகளாயின. அழகுக் கலைகளையும், வீர பலத்தையும் கிரேக்கர் போற்றினர். முற்கால கிரேக்க வாலிபர் குருகுலவாசம் செய்து, ஆசிரியனை வணங்கிக் கல்வி கற்றனர். ஹெர்குலிஸ் போன்ற பலசாலிகள்; ஹெக்தர், அஜாக்ஸ், யுலிஸீஸ், அகமெம்னன், லிகர்கஸ், மிலிதாது, லியோனிதன், தெமிஸ், டாக்ளிஸ், பெரிக்ளிஸ், அலெக்சாந்தர் போன்ற வீரர்; ஆர்ஃபியஸ், லினஸ், ஆம்ஃபியன் போன்ற இசைப் புலவர்; ஃபிதியஸ், போலிக்ளேத், லிஸிப் போன்ற சிற்பிகள்; திமாந்து, அபெல் போன்ற சித்திரர்; ஹோமர், பிண்டார், ஸொஃபோக்ளீஸ், யூரிபேது போன்ற கவிமணிகள்; ஹெரதோது, ஃஸெனோபன் (Zenophon) போன்ற சரித்திரர்; பெரிக்ளிஸ், தெமாஸ்தெனிஸ் போன்ற நாவலர்; பிதகோர், ஸொக்ராத்தன், பிளாத்தன், அரிஸ்தோதலன் போன்ற ஆத்ம ஞானிகள்; தால், ஆர்கிமேதன் போன்ற சாத்திரர் ஆகியோர் கிரேக்க நாகரிகத்திற்கும், புகழிற்கும் சாகா வரமீந்தனர். கிரேக்கர் கல்விமுறை இத்தகைய தீரர்களைப் பயிற்றியது.

ஸ்பார்டா (Sparta) போர்வீரரையே அதிகமாகப் பயிற்றியது. நோஞ்சலும் பூஞ்சலுமாயுள்ள சந்ததிகளை ஸ்பார்டர் வெறுத்தொழித்தனர்; தெம்புள்ள குழந்தைகளைச் சரியான ஊட்டமும், உடற்பயிற்சியும் தந்து வளர்த்தனர்; நாட்டிற்கும், புகழுக்குமே வாழச் சிறுவருக்குக் கற்பித்தனர்; இடர்களை எதிர்க்கவும், அபாயங்களுக்குக் கலங்காது சமாளிக்கவும்,

சாவிற்கு அஞ்சாதிருக்கவும், தேசம் தேசம் என்றே உயிர்க்கவும் குழந்தைகளைப் பயிற்றினர். பெண்களுக்கும் ஆண்களைப்போலவே ஆற்றல் அமையச் செய்தனர். தங்கள் கணவர் வீரத்தை அவர் பன்மடங்காக்கினர்; நம் பழங்காலத் தமிழ்த் தாய்மாரைப்போலவே, நாட்டைக் காக்கத் தம் குமரரையும், கணவரையும், வீர மகிழ்வுடன் போருக்கனுப்பினர். இவ்வாறு லிகர்கஸ் என்னும் மன்னன் ஸ்பார்டா மக்களைப் பயிற்றி, இணையற்ற போர் வீரராக்கினன். அவன் காலத்தில் ஏற்பட்ட ஒலிம்பியப் பந்தயங்கள் (Olympian games) இன்னும் ஐரோப்பாவில் நடந்து வருகின்றன. குமரர் வீரர்களாக வேண்டும்; பெண்கள் வீரத் தாய்மாராக வேண்டும்— இரண்டே ஸ்பார்டா வாசிகள் குறிப்பு. ஒவ்வொருவருக்கும் அரசியலறிவு நிறைவாயிருந்தது. அதற்கேற்றபடியே கல்விமுறை யிருந்தது.

ஆதென்ஸில் வாலிபருக்குப் போர்ப் பயிற்சியுடன் கலைப் பயிற்சியும் வழங்கினர். இசை, நடனம், சிற்பம், காவியம், கணக்கு, சொல் வன்மை, அரசியலறிவு இவற்றை முதன்மையாகப் புகட்டினர். 18 வயதுள்ள அதீனிய வாலிபனுக்கு, எஃபெபி (Ephebi) என்று பெயர். 18 வயதுக் காளையைக் கலை அறிவும், போர்த்திறமும் சிறந்த வீரனுக்குவதே அதீனியர் கல்விமுறை. பிளாத்தன், அரிஸ்தோதலன் ஆகியோர் உபதேசங்களையே அதீனியர் பின்பற்றி நடத்தினர். இந்த மகான்கள் தம் குருகுலங்களில் மாணவரைப் பயிற்றி ஆளாக்கினர்; உடல், புலன்கள், மனம் மூன்றும் முழு வளர்ச்சி பெறும்படியான கல்வி புகட்டினர். அரசாங்கமே இக்கல்வியில் கருத்தூன்றியது. ஆதென்ஸிலும் அலெக்ஸாந்திரியாவிலும் பெரிய சர்வகலாசாலைகள் நடந்தன. பாரசீகம், எகிப்து, இந்தியா முதலிய நாட்டின் அருங் கலைகளையும், அத்யாத்ம சாத்திரங்களையும் கிரேக்கப் புலவர் ஆராய்ந்தனர்.

# 7. ரோமர் கல்வி

**கா**லக் கேட்டால் கிரீஸில் வெறும் வாய் வேதாந்தம் வலுத்தது; பழைய வீரக் கனல் மறைந்தது; ரோமர் கிரேக்கரை வென்றனர், எந்த நாட்டில் சமூக வாழ்விற்கேற்ற கல்வியில்லையோ, அந்த நாடு பகைவர்க்கெளிதாகும். ரோம் தேசம் கல்வியைக் கண்போலப் போற்றியது; அறிவையும் ஆண்மையையும் வீரத்தையும் தனது வருங்காலப் பிரஜைகளுக்குப் புகட்டியது. ரோம குடும்பத் தலைவன் தந்தையே; அவனே வீட்டிற்குச் சர்வாதிகாரி. தந்தை சொல்லே மந்திரம்; வீரப்புகழே, வாழ்வே ரோமரின் ஆதர்சம். குடும்பத்திலும் பொதுவாழ்விலும் வாலிபர் சிறந்து விளங்குமாறு கல்விப் பயிற்சி பெற்றனர். நீதிநெறி யொழுக்கம், அரசியலறிவு, மதக்கடமை, ஐதிகங்கள், தெய்வ பக்தி, சிரத்தை, நாட்டு வரலாறு, சட்ட திட்டங்கள், பிறரிடம் மரியாதையாக நடந்து கொள்ளும் முறை முதலியவற்றில், ரோம் வாலிபர் பயிற்சி பெற்றனர். கிரேக்க இலக்கியங்களை லத்தீனில் மொழி பெயர்த்து, ரோமர் பயின்றனர்; அத்துடன், சொற்றிறமை (Rhetoric), இலக்கணம், தத்துவம் முதலியன கற்றனர். பழைய கிரீசும் ரோமும் போர்ப் பயிற்சியையே முதன்மையாகப் போற்றின. ரோம் உலகின் அரசியாக வேண்டும்; ரோமர் உலகை ஆள வேண்டும்; உலகெல்லாம் ரோமக் குடியரசின் கீழ் அடங்கி நடக்க வேண்டும்—இதுவே ரோமர் கனவு. கி. மு. 754-510 வரையில் ரோம் முடியரசாயிருந்தது. ரோமுலஸ், துலுஸ், செர்வியஸ் போன்ற வீர மன்னர் அதனை ஆண்டனர்; கி. மு. 510—31 வரையில் ரோம் குடியரசாக விளங்கியது. மாரியஸ், சில்லா, பாம்பே, யூலிய கேசரி போன்ற வீரர் குடியரசுத் தலைவராக விளங்கினர்.

அதன் பிறகு ரோம் சாம்ராஜ்யமாக விளங்கியது; பிரிட்டன், கால் (Gaul) அரபியா, கார்த்தாகம், கிரீஸ் முதலிய நாடுகளை வென்று புரந்தது. இக்காலம் ரோமுக்கும், நமது தமிழ் நாட்டிற்கும் நெருங்கிய அரசியல்—வாணிப உறவு ஏற்பட்டது. அகுஸ்தன், திபேரன், நீரன், திதன் (Titus), மார்க் ஒரேலியன், ஜூலியன் முதலிய வீர மன்னர் ரோமில் விளங்கினர். ரோமர் வரலாறு இரத்தகளமே! மண்ணாசை கொண்டு, போரே தொழிலாய் இரத்தம் வடித்தனர்; இதுவே அன்று ரோமின் கதை; இன்றும் மேற்படிதான்! இவ்வாறு ராணுவச் செருக்கால் வாழ்ந்த அரசு, தியோதஸ் என்னும் மன்னனுக்குப் பிறகு அதில்லா (Atilla) என்னும் அசுரனுல் ஹூணருக்கு இரையானது; பிறகு ஆஸ்திரியாவிற்கு அடிமைப்பட்டது; மஜினி, கரிபால்டி போன்ற வீரர் முயற்சியால் விடுதலை பெற்று, மீண்டும் நெப்போலியன் வாளுக்கிரையாகி, 20-ஆம் நூற்றுண்டில்தான் தலை நிமிர்ந்தது. இன்னும் அங்கே போர்க் கல்வியே கல்வி. சர்வாதிகாரி முஸோலினி தானே ஆசிரியராயிருந்தவன்; ஆதலால் சிறுவர் கல்வியைக் கண்ணும் கருத்துமாகக் கவனிக்கிறுன்; சிறந்த கலை யறிவும், தொழிலறிவும் புகட்டுகிறுன்; போர்வெறி யேற்றிக் கொலையறிவும் வளர்க்கிறுன்.

---

# 8. கிறிஸ்து நாகரிகம்

ஐரோப்பிய தியாகிகளின் இரத்த வெள்ளத்தில் நீந்தி வந்தது கிறிஸ்து மதம். போரே தொழிலான ஐரோப்பிய ருக்குக் கிறிஸ்து மதம் ஒரு புதிய வாழ்வைத் தந்தது. முதலில் கிரேக்கப் பாதிரிகள் மதோபதேசம் செய்தனர். படுகொலை யும், கொடுங்கோலும் பொறுத்து, கிறிஸ்து வீரர் ரோமில் மதத்தை நிலை நாட்டினர். அதன்பின் ஐரோப்பாவெங்கும் மதம் பரவியது. ஆங்காங்குக் கிறிஸ்து மடங்களும், சர்ச்சு களும் ஏற்பட்டன. அவற்றின் சார்பாகக் கல்வி பரவியது. கிறிஸ்து தர்மமே கல்வியின் குறிப்பானது. பைமிளறிவே அறிவு, அதனினும் உயர்ந்த தத்துவமில்லையெனக் கருதி, அன்பு, அடக்கம், பணிவு, கடவுளுறுதி, வேத நம்பிக்கை, ஒழுக்கம், ஒப்புரவு முதலிய நற்குணங்களை மாணவர் பயின்ற னர். இவ்வாறு சமயக் கல்வியைப் பரப்பியதில் முதன்மை பெற்றவர் அகுஸ்த முனிவர் (St. Augustine). இங்கிலாந்தில் பீடு (Bede) என்னும் முனிவர் சிறந்த கல்விப்பணி புரிந்தார். மத்திம கால ஐரோப்பாவின் மிகப் பெரிய பிரெஞ்சு மன்ன னும், ஜயவீரனுமான மஹா சார்லன் (Charle Magne) தக்க புலவரைக்கொண்டு, தன் குடிகளுக்கிடையே கல்வியறிவைப் பரப்பினன்; பல பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினன். அல்கின் (Alcuin), எழினார் (Eginhard) என்னும் புகழ்பெற்ற ஆசிரி யர்கள் அவன் காலத்தில் அரிய கல்விப்பணி செய்து நிலவினர் கள். மத்திம கால ஐரோப்பாவில் கல்வியும் சமயமும் இணைந் திருந்தன. கிறிஸ்தவப் பாதிரிகள் அற்புதமான அறிவுத் தொண்டு புரிந்தனர். வியாகரணம், தர்க்கம், அலங்காரம் மூன்றும் முப்பாடம் (Trivium); கோட்டுக் கணக்கு (Geometry), கணக்கு (Arithmetic), பாட்டு, ஒளி நூல்

(Astronomy), இவை நாற்பாடம் (Quadrivium); இந்த ஏழு கலைகளையும் மத்திம கால மாணவர் கற்றனர். இவற்றுள் இலக்கணம், இலக்கியம், பேச்சுக் கலை, தத்துவம், தர்க்கம், நியாயம், வசனத்திலும் செய்யுளிலும் எழுதும் திறமை, வியாசம், பூகோளம், தேசீய சரித்திரம், பஞ்சாங்கம் கணித்தல், சுவிசேஷ கீதங்கள் எல்லாம் அடங்கும்.

பதினேராம் நூற்ருண்டிற்குப் பிறகே போர்ப்புயல் தணிந்து, ஐரோப்பா சற்று நிம்மதி யடைந்தது; அதன் அமைதியைக் குலைத்து வந்த அன்னிய முரடர், கிறிஸ்து தர்மத்தைத் தழுவினர். மடங்களும் கோயில்களும் தர்மப் பிரசாரம் செய்தன. 11,13-ஆம் நூற்ருண்டுகளில் இஸ்லாமியருக்கும் கிறிஸ்தவருக்கும் எருசல விஷயமாக குருஸேடு (Crusade) எனும் மதப்போர் நடந்தது. அதில் ஐரோப்பிய நாடுகளெல்லாம் சிலுவையேந்திப் படை திரட்டி எருசலத்தைக் கைப்பற்றச் சமர் செய்தன. இப்போரினுல் ஐரோப்பாவில் ஒற்றுமையும், வீரமும் வளர்ந்தன. கிழக்கும் மேற்கும் கலந்தன; சாத்திரம், இலக்கியம், கலைகள் இவை புதுமை பெற்றன. ஐரோப்பிய மொழிகளில் பல ஆசிய மொழிகள் கலந்தன. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்ட பின்பும், வாஸ்கோடி காமா இந்தியாவிற்குக் கப்பற் பாதை கண்ட பிறகும் வியாபாரம் பெருகியது; இதனுல் ஐரோப்பாவின் செல்வம், கலை, செல்வாக்கெல்லாம் பெருகின. ஸ்பெயினில் இருந்த மூர் ஜாதியார் தமது அறிவொளியை ஐரோப்பியக் கலைமீது வீசினர். அரிஸ்தோதலன் வாக்குகளை ஏற்கெனவே; அரபியில் மொழிபெயர்த்திருந்தனர். ஐரோப்பியர் அதை 1167-ல் லத்தீனில் மொழிபெயர்த்தனர். சமய ஞானத்திற்கு பைபிளும், லௌகிக ஞானத்திற்கு அரிஸ்தோதலும் கற்றனர். கோயில்களிலும் மடங்களிலும் நடந்த பள்ளிக்கூடங்களுக்கு ஏராளமான மாணவர் வந்து சேர்ந்தனர். கல்வியை இன்னும் விரிவாகப் பரப்புவதற்கு, இத்தாலி, பிரான்ஸு, இங்கிலாந்து முதலிய நாடுகளில் சர்வ கலாசாலைகள் நிறுவினர். பாரிஸ் ஆக்ஸ் போர்டு, கேம்ப்ரிட்ஜு சர்வ கலாசாலைகள் இப்போதே எழுந்தன. பாரிஸ் சர்வகலாசாலையே அனைத்தினும் தலைமை

யானது. பிறகு ஜர்மனியில் ப்ரேக் (Prague), வியன்ன(Vienna) என்னுமிடங்களில் சர்வகலாசாலைகள் ஏற்பட்டன. கிறிஸ்து மத போதகர்களே கல்வி பரப்புவதில் கவனம் செலுத்திவந்தனர். இவ்வாறு சமயமும் கல்வியும் சேர்ந்து விளங்கிய பாடசாலைகள் பல மேதாவிகளை உண்டுபண்ணின. உதாரணமாக, (Porte Royale) போர்ட் ரோயல் என்னும் மடத்தில் கற்ற ஜான் ராஸீன் பெரிய கவியாகி, பிரெஞ்சு இலக்கியத்திற்குக் காளிதாஸன் போல விளங்கினன். இக்காலம் பாதிரிமார்கள் முயற்சியால் எண்ணிறந்த வியாகரண பாடசாலைகள் (Grammar Schools) ஏற்பட்டன. அங்கே கிரீக்கு, லத்தீன், அந்தந்த நாட்டிற்குரிய தாய்மொழி ஆகிய மூன்றையும் மாணவர் கற்றனர். கன்னி மடங்களில் (Nunneries) பெண்கள் கற்றனர். அஃது ஆண்மையை (Chivalry)ப் பெரிதும் மதித்த காலம். ஆண்மையுள்ள வீரரைப் பயிற்றி, சமயாசாரியர் குருஸேடுக்கு அனுப்பினர். வீரம், சமயவுறுதி, அஞ்சாமை, மரியாதை, ஒப்புரவு—இவ்வைந்தும் ஆண்மைக்குச் சிறந்த இலக்கணமாகக் கருதப்பட்டன. நமது நாட்டில் விளங்கிய ராஜபுத்திர க்ஷத்திரியர் போலவே மத்திம ஐரோப்பாவில் ஆண்மை வீரர் (Chivalrous Knights) விளங்கினர்.

கிழக்குலகுடன் செய்த வாணிபத்தால் இத்தாலி புதுப் புதுக் கலையறிவு பெற்றது. தாந்தே, பெத்ரார்க்கு, பொக்காஸியோ போன்ற புலவர் பதினன்காம் நூற்றுண்டில் புதியவுணர்ச்சியை உண்டுபண்ணினர். காவியம், ஓவியம், சிற்பம் முதலிய கலைகளிற் புலவர் புதிய வொளி வீசினர். இந்தியா, அமெரிக்கா வாணிபத்தால் ஐரோப்பாவின் செல்வம் மிகப் பெருகியது.

# 9. புதுமலர்ச்சி

மனித மூளை புதுப்புது வியன்களைக் க்ண்டது. அச்சுப் பொறி யேற்பட்டது. அதனால் அறிவும் கலையும் வேகமாகப் பரவின. ஐரோப்பா மற்றொரு புதுமலர்ச்சியைப் (Renaissan-ce) பெற்றது. மாந்தர் மனத்தில் சுதந்தர வுணர்ச்சி ததும்பியது; கலைகள் புதுப்புது அழகுடன்பொலிந்தன. மதத்திற்கும் அரசியலுக்கும் உள்ள தொடர்பு தளர்ந்தது; கலையும், இலக்கியமும், பௌதிக ஆராய்ச்சிகளும் பெருகின. சமுதாயத்தின் மேல் மதம் செலுத்திய ஆதிக்கம் குலைந்தது. இங்கிலாந்தில் விக்லிஃபும் (Wycliff), ஜர்மனியில் மார்டின் லூதரும் மத சுயேச்சாதிகாரத்தை வீழ்த்தினர். அதனால் இங்கிலாந்திலும், ஜர்மனியிலும், தன்னம்பிக்கையும், தன்னுறுதியும் வளர்ந்தன. சமுதாயப் பணியே மனிதன் கடமையானது. கலாசாலையின் பாடமுறைகள் மாறின. ஜர்மனியில் பள்ளிக்கூடங்கள் பெருகின. இங்கிலாந்தில் எலிஜபெத்தின் ஆட்சியில் பல புதிய கல்வி நிலயங்கள் தோன்றின. 16, 17-ஆம் நூற்றுண்டின் ஐரோப்பா, கத்தோலிக—புரோதஸ்தாந்தியப் போர்களுக்கிடையே இடர்ப்பட்டது. எனினும், புதிய வுணர்வும், புதிய கல்வி நிலயங்களும் மேன்மேலும் பெருகின. புதிய கலைவாணரும், ஆராய்ச்சியாளரும் தோன்றினர்; புரோதஸ்தாந்திய நாடுகள் லத்தீனையும் லௌகீகக் கலைகளையும் பெரிதும் போற்றின. எசூயப் பாதிரிகளால் (Jesuit Fathers) நடத்தப் பெற்ற கத்தோலிகக் கலாசாலைகள், லௌகிகக் கலைகளுடன் மதக் கல்வியையும் புகட்டின; லத்தீனைப் போற்றின.

ஆனால், லத்தீன் வழக்கற்றது; பள்ளிக்கூடங்களில் தாய் மொழியை வளர்க்கத் தொடங்கினர். நாட்டிற்கு நல்ல பிரஜைகளைத் தயாரிப்பதே கல்வியின் நோக்கமானது. நியூடன்

போன்ற புலவர் நூல்கள் ஸயன்ஸ் அறிவை ஊக்கின. கேம்பிரிட்ஜில் கணக்கும், பௌதிக சாத்திரமும், உலகியலறிவும், இலக்கியத்துடன் புகட்டினர். ஆனால், இந்தக் கல்வியால் பொதுஜனங்களுக்குப் பெரும்பயனில்லை. பணக்காரர்களுக்கே இக்கல்வி ஏற்றதாயிருந்தது. நாகரிகக் கனவான்களையே அக்காலக் கல்வி உண்டாக்கியது.

லாக், ரூசோ (Locke, Rousseau) போன்ற அறிஞர் தோன்றினர்; பொது ஜனங்களுக்குப் புதிய விழிப்பைத் தந்தனர்; கல்வியை உலக வாழ்விற்குப் பயனாகச் செய்தனர்; அனுபவ ஞானத்தைப் புகட்டினர். ரூஸோ எழுதிய எமில் (Emile) என்னும் நூல், கல்வியுலகிற்குப் புத்துணர் வீந்தது. அதில் மனிதன் இயல்பாக வளர்ந்து, சமுதாயத்திற்குப் பயனாகும் விதத்தை ஆசிரியர் விளக்குகிறார். காந்தே (Kante) என்னும் மேதாவி, வாழ்வை உயர்த்துவதே கல்வியென உபதேசித்தார்.

---

# 10. முன்னேற்றம்

**வ**ந்தது பிரெஞ்சுப் புரட்சி! அது பத்தொன்பதாம் நூற்றுண்டையே மாற்றியமைத்தது; பழைய கொடுமைகளை யெல்லாம் தூக்கு மேடையிலேற்றியது! எங்கும் ஜனநாயக முழக்கம்! பொதுஜனங்கள் சுதந்தர வுணர்வுடன் விழித்துக் கொண்டனர். ஏழை பணக்காரன் என்ற வேற்றுமை தகர்ந்தது. கல்வியின் பொறுப்பை ஜனநாயகமே ஏற்றது. ஒவ்வொரு குடிசையிலும் கல்வியொளி வீசத் தொடங்கியது. பொதுஜனக் கல்விக்கேற்ற பள்ளிக்கூடங்கள் தோன்றின. கல்வி முறையை வகுக்கப் பல மேதாவிகள் எழுந்தனர். அவர்களுள் முதன்மை பெற்றவர் பெஸ்தலோஜி (Pestallozi 1746—1827), ஃப்ரோபெல் (Froebel 1782—1852) முதலியோர். இவர்கள் ரூஸோவைப் போலவே குழந்தைகளின் இயல்பும், நோக்கமும் அறிந்து, அவர்கள் விரும்பிக் கற்கும் முறையில் கல்வி புகட்டினர். ஃப்ரோபெல் கல்வியை விளையாட்டாக்கினுர். குழந்தைக்கேற்ற தோட்டம், விளையாட்டுச் சாமான்கள், கதைகள், ஆடல், பாடல்களை அமைத்து, அவற்றின் மூலமாக உடலும், புலன்களும், மனமும், வளர்ச்சி பெறச் செய்தார். இவர் கல்வி முறைதான் இன்று குழந்தைகளுக்குப் பயனுகிறது. ஹெர்பர்ட் (Herbart—1776—1841(என்பவர் மனமும் மூளையும் வளர்ச்சி பெறக் கல்விமுறை வகுத்தார். பெஸ்தலோஜிதான் நவீனக் கல்வி முறையின் தந்தை. ஏழையெளியவருக்குக் கல்வி புகட்ட அவர் தமது வாழ்வையே பலியாக்கினுர்! இப்புலவரே ஒழுங்கான பள்ளிக்கூடங்களைப் பலருக்குப் பயனுகும்படி நடத்த வழிகாட்டினுர்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் உலகெங்கும் யந்திர நாகரிகம் பரவியது! யந்திரப் புலவர் பெருகினர்; செல்

வம் வளர்ந்தது. நாட்டுக்கு நாடு போட்டி போட்டு முன்னே றத் தொடங்கின. உணவு, உயிர்ப்பு போன்று கல்வியும் அவசியம் என்று அறிவாளர் உணர்ந்தனர். *14* வயது மட்டும் ஆணும் பெண்ணும் கற்றே தீரவேண்டும் எனச் சட்டமியற்றினர். மூலாதாரக் கல்வி மட்டுமின்றிப் பல கலையாராய்ச்சிகளுக்கும் வழிசெய்தனர். கல்வி பரப்புவதை அரசாங்கம் முதற் கடமையாக நினைத்தது. ஸ்வித்ஸர்லாந்து, பிரான்ஸ், ஜர்மனி இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளில் கல்வி பெரிய முன்னேற்ற மடைந்திருக்கிறது. அந்நாடுகளில் வழங்கும் கல்வி முறையைக் காண்போம். அது நம்மவருக்கு ஒரு புதிய எழுச்சியைத் தரும்.

# 11. ஸ்வித்ஸர்லாந்து

ஸ்வித்ஸர்லாந்து ஐரோப்பாவின் நடுவே சதுக்கமாக அமைந்ததொரு குடியரசு ; சுமார் 15,951 சதுர மைல் பரப்புள்ளது. அதன் வடக்கே ஜர்மனி, தெற்கே இத்தாலி, கிழக்கே ஆஸ்திரியா, மேற்கே பிரான்ஸு ஆகிய நாடுகள் உள்ளன. இதன் பரப்பில் வீசம் பங்கு ஆல்ப்ஸ் மலையாலும், பத்திலொரு பங்கு ஜுரா மலையாலும் அடைபட்டுள்ளன. இங்கு ஆல்ப்ஸின் சிகரம் 12,543 அடியுள்ளது. ரைன், ரோன், ஆர் எனும் மூன்று ஆறுகள் இந்நாட்டை வளஞ்செய்கின்றன. இங்கே பல நன்னீர் ஏரிகள் உள்ளன. அவற்றுள் ஜெனிவா (Geneva), கான்ஸ்டன்ஸ் (Constance) என்பவை முதன்மையானவை. இக்குறிஞ்சி நாட்டைப் பல நீர்வீழ்ச்சிகள் அழகு செய்கின்றன. இந்நாட்டில் 21·2 சதவிகிதக் காடுகள்; 11,927 சதுர மைல் விளைவிற்கேற்ற நிலம். இந்நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 89·7 அங்குலம் மழையும், கடுமையான பனியும் விழுகின்றன. சமுத்திர மட்டத்தினின்று 571 முதல் 15,217 அடி வரையில் உயர்ந்திருப்பதால், இதன் சீதோஷ்ண ஸ்திதி பலவாறு வேறுபடுகிறது. பொதுவாக இது குளிர்-பனி நாடு. இதில் ஆலிவ், திராட்சை, ஓக், பைன், பீச் (Peeches), ஃபர் (Firs), புகையிலை, பீட்ரூட், கனிகள், காய்கறிகள் முதலிய தாவரங்கள் ஓங்குகின்றன. இங்கே இரும்பு, செம்பு, ஈயச் சுரங்கங்கள் அதிகம். இதன் ஜனத்தொகை சுமார் 3,315,443. இதில் பல ஜாதியார் கலந்துள்ளனர்: மிகுதியாக ஜர்மானியர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர், ஐக்கியமாகாணத்தார். இவர்களிற் பெரும்பாலார் புரோதஸ்தாந்து கிறிஸ்தவர்; அடுத்தபடி கத்தோலிகர். ஜர்மன், பிரெஞ்சு, இத்தாலி மூன்றும் இங்குத் தேச பாஷை. 187 ஜில்லாக்கள் கொண்ட இந்

நாட்டில் பல ஜாதியார், பல மொழியினர் கூடியிருப்பினும், எல்லாரும் ஒரே நாட்டன்னையின் மைந்தரென உணர்ந்து, ஒன்றுபட்டு வாழுகின்றனர். இந்நாட்டுத் தலைநகர் பெர்ன் (Bern). ஜூரிச், லௌஸான் முதலியன இதன் பெரிய நகரங்கள். 1847-ல் தான் இந்நாட்டில் முதன்முதல் இருப்புப் பாதை போடப்பட்டது. இன்று நாடெங்கும் வியாபாரத்திற்கும், வாணிபத்திற்கும் எளிதாக இருப்புப் பாதைகள் போடப்பட்டுள்ளன. மலைமீதுகூட இருப்புப் பாதை ஓடுகிறது.

ஸ்விஸ் நாட்டார் தொழில் முயற்சியிற் சிறந்தவர். ஆடு மாடு வளர்த்தல், பெட்டிப் பால், வெண்ணெய் தயாரித்தல், பட்டு, பஞ்சு நூற்றல், நெசவு, செருப்புத் தொழில், கடிகாரம் செய்தல், அநிலைன் சாயம் காய்ச்சல், அலுமினியப் பாத்திரம் செய்தல் முதலிய பல தொழில்கள் இங்குச் செழிக்கின்றன.

ஸ்விஸ்மக்கள் மிகவும் சுறுசுறுப்பும், தீவிரமான தேசபக்தியும் கொண்டவர்; தமது தேவையை நாட்டிலேயே செய்து கொள்கின்றனர். பட்டு, சரிகை, கடிகாரம், யந்திரச் சாமான்கள் ஸ்வித்ஸர்லாந்தினின்று ஏற்றுமதியாகின்றன. ஆண்டுதோறும் சுமார் 5,250,000 பவுன் மதிப்புள்ள கடிகாரங்கள் இங்கிருந்து வெளிநாடுகளுக்குச் செல்கின்றன. வெளிநாடுகளினின்று தொழிலுக்கும், உணவிற்கும் வேண்டிய மூலாதாரப் பொருள்கள் வருகின்றன.

ஸ்வித்ஸர்லாந்து 22 அரசியல் மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கு (Cantons) காண்டன்ஸ் என்று பெயர். இந்தக் காண்டன்களில் சுமார் 3164 அரசியற் சங்கங்கள் (Political Communes) உள்ளன. 20 வயதிற்கு மேற்பட்ட ஸ்விஸ்மக்கள் இதன் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்படுவர். இவர்கள் பொதுக் கூட்டத்தார் (Assemblee generale). அங்கத்தினர்களெல்லாம் பொதுஜன சம்மதம் பெற்றவர்களே.

ஸ்விஸ் ஐக்கிய அரசாங்கம் அமெரிக்க ஐக்கிய மாகாணம் போல நடைபெறுகிறது. இரண்டு அரசியல் சபைகள் உள்

ளன: ஒன்று மாகாணச் சபை; இதில் மாகாணத்திற்கு இரு பிரதிநிதிகள் வீதம் அங்கம் வகிப்பர். மற்றொன்று தேசீய சபை; 20,000 பிரஜைகளுக்கு ஒருவர் வீதம் இதில் மூன்று ஆண்டுகள் அங்கம் வகிக்கலாம். ஒவ்வோராண்டும் ஐக்கிய மன்றம் (Federal Parliament) தலைநகரான பெர்னில் கூடும். இந்த மன்றமே குடியரசுத் தலைவரையும், துணைத்தலைவரை யும் தேர்ந்தெடுப்பது. ஒவ்வொரு மாகாணமும் ஸ்தல சுயாட்சி யனுபவிப்பதுடன், நாட்டுப் பொதுநலத்தையும் உயிரெனக் கருதுகிறது. பொருளாதாரம், பாங்கு, தபால்—தந்தி, போக்கு வரத்து சாதனங்கள், வாணிபம், கல்வி—அனைத்தையும் தேசீய ஐக்கிய மன்றமே திறமையுடன் நிர்வகிக்கிறது. இங்குப் பொதுநலத்திற்குப் பாதகமின்றி, அவரவர் மதக் கொள்கைகளை எவ்விதமான கட்டு மின்றிப் பின்பற்றலாம். எவ்விதமான மத வரியும் கிடையாது.

ஸ்வித்ஸர்லாந்தில் கல்வி தாராளமாகத் தரப்படுகிறது; அதற்கு ஐக்கிய சபை பெருந்தொகை செலவிடுகிறது. மூலாதாரக் கல்வி கட்டாயம், இனும்! 14 வயது வரையில் ஆண், பெண் குழந்தைகள் கல்வியிலேயே கருத்தூன்ற வேண்டும்; 15 வயதிற்கு மேலே தான் தொழில்முயற்சி செய்யலாம். ஒரு பள்ளிக்கூடத்தில் பெரும்பாலானவர்கள் எந்த மதத்தினரோ அந்த மதம், பிறர் மனம் புண்படாதபடி, போதிக்கப்படுகிறது. ஒரு மணி நேரம் மதபோதனையுடன் வகுப்புத் தொடங்குகிறது. பாதிரிமார்களும் அடிக்கடி பைபிள் பிரசங்கம் நடத்துவர். பிள்ளைகள் ஒழுங்காகப் பள்ளிக்கூடத்திற்கு வராவிடினும், பெற்றோர்கள் அனுப்பாவிடினும், உடனே சர்க்கார் கவனிக்கும். ஆசிரியர்களெல்லாம் பயிற்சி முறையில் தேர்ந்த தகுதியாளர். அவர்கள் நாட்டுக் கல்விக்கே தங்கள் வாழ்வை அர்ப்பணஞ் செய்தவர்கள். அவர்களுக்கு ஐக்கிய மன்றம் தக்க பொருளுதவி செய்கிறது. பத்து வயதிற்குமேல் மூலாதாரக் கல்வி தேர்ந்த மாணவர்கள் உயர்தரப் பள்ளிக்கூடத்திற் சேர்ந்து, கிரீக்கு, லத்தீன், இத்தாலி, பிரெஞ்சு, ஜர்மனி, ஆங்கிலம் முதலிய மொழிகள், கணிதம், பௌதிக சாத்திரம், சரித்திரம், பூகோளம் முதலியவற்றில் நான்கு

ஆண்டுகள் பயிற்சி பெறுவர். இங்கே கல்லூரிப் படிப்பிற்குத் தயாராக்கும் இலக்கிய, இலக்கணப் பள்ளிக்கூடங்கள் உள்ளன. விவசாயம், வாணிபம், வைத்தியம், சிற்பம், ஓவியம் ஆகிய தொழிற் பயிற்சிகளுக்குரிய பள்ளிக்கூடங்கள் உள்ளன. மாணவர் தமது விருப்பப்படி மொழிப் பயிற்சியும், தொழிற் பயிற்சியும் பெறுவர். பிற்காலம் சுயேச்சையாகப் பிழைப்பதற்கேற்ற தொழிற் கல்வி சிறுவர்களுக்குத் தரப்படுகிறது. ஜூரிச்சில் (Zurich) மிகப் பெரிய பலதொழிற் கலாசாலையுள்ளது. சிற்பம், யந்திரம், பல தொழிலறிவு, ரஸாயனம், பௌதிகம், விவசாயம், உவாத்திமை, ஸயன்ஸ், அரசியல், ராணுவம் முதலிய பல துறைக்கலைகள் இங்குப் பயிற்றப்படுகின்றன. இந்தப் பல்கலைக் கழகத்திற்கு ஆண்டுதோறும் 56,000 பவுனுக்கு மேல் செலவாகிறது. 20 முதல் 48 வயதிற்குள் ஸ்விஸ் மக்கள் தக்க ராணுவப்பயிற்சி பெறுகின்றனர். ராணுவப் பள்ளிக்கூடங்களில் காலத்திற்கேற்ற போர் முறை, ஐக்கிய மன்றத்தின் பொறுப்பிலேயே நடக்கிறது. உடுப்பும் ஆயுதமும் சர்க்கார் செலவு. போரில் இறந்த வீரர் குடும்பத்திற்குச் சர்க்கார் உதவி செய்யும்; அவ்வாறே நாட்டுப்பணி செய்து மெலிந்தவர்களுக்கும் சர்க்கார் உதவியுண்டு. ஒவ்வோர் ஆண்மகனுக்கும் 20 முதல் 40 வயது வரை நாட்டின் பாதுகாப்பிற்காக ராணுவச் சேவை கட்டாயமானது. இந்தச் சேவைக்கு லாயக்கில்லாதவர்கள் குறிப்பிட்ட வரி கொடுக்க வேண்டும்.

காண்டன் அதிகாரிகள், 20 வயதிற்கு மேற்பட்ட வாலிபர்களை ஓரிடத்தில் கூட்டி வைத்தியப் பரீட்சை செய்வர்; பிறகு எழுத்து, படிப்பு, கணிதங்களில் சோதனை செய்வர்; எட்டடி தாண்டுதல், 37 பவுண்டு கனத்தைத் தூக்கல், 14 செகண்டில் 80 கெஜமாவது ஓடுதல் முதலியவற்றால் சரீர பலத்தைச் சோதனை செய்வர்; இவ்வாறு அறிவு ஆற்றல்களைச் சோதித்துத் தகுதிப் பத்திரமளிப்பர். பிறகு அவரவர் தகுதிக்கேற்ற ராணுவப் பயிற்சியும் பதவியும் கிடைக்கும். நாட்டுப் பணிக்கு ஸ்விஸ் வாலிபர் வீரமுடன் வருவர். இந்நாட்டின் 22 மாகாணங்களும் மொழி, மதம், தொழில், நடைகளில் வேறுபட்டி

ருப்பினும், நாட்டுணர்ச்சியால் எப்போதும் ஒன்றுபட்டுள்ளன. நாட்டு நலத்திற்காக எல்லாரும் மனமொத்து அவரவர்க்கேற்ற பணிபுரிவர். ஸ்வித்ஸர்லாந்து இந்தியாவிற்கு அரிய உதாரணமாகும். பல மொழி, பல இனம், பல நாகரிகங்கள் கலந்தாலும் நாடு ஒன்று பட்டு வாழலாம்; கலை, தொழில், வீரம், செல்வம், ஒழுக்கம், சுயேச்சை முதலிய எல்லா வழிகளிலும் முன்னேறலாம் என்ற உண்மைகள் ஸ்வித்ஸர்லாந்தால் விளங்கும்.

# 12. இங்கிலாந்து

இங்கிலாந்தின் கல்விமுறை பெரும்பாலும் ஜர்மனி, பிரான்ஸைப் பின்பற்றியது. நெடுங்காலமாக அங்கு இலக்கணப் பள்ளிக்கூடங்களே (Grammar Schools) கல்வி புகட்டி வந்தன. செல்வர் சர்வகலாசாலையில் படித்தனர். எட்டாவது ஹென்ரி (Henry VIII) தான் முதலில் ஏழைகளுக்காக ஒரு சட்டம் செய்தார். 5 முதல் 13 வயதிற்குட்பட்ட குழந்தைகள் யாரும் சோம்பித் திரிந்தாலும், பிச்சையெடுக்கக் கண்டாலும், உடனே ஒரு தொழிலாளியிடம் சேர்த்துப் பிழைக்க வழி கற்பிக்கவேண்டியது என்பது அச்சட்டம். மற்ற நாடுகளைப் போலவே இங்கிலாந்திலும் மதஸ்தாபனங்களே கல்வியைக் கவனித்து வந்தன. இடையிடையே நல்லோர் சிலர் குழந்தைகளுக்காகத் தருமப் பள்ளிக்கூடம் போட்டனர்.

18-ஆம் நூற்றாண்டில் யந்திரத்தொழில் முன்னேறியது. கல்வியறிவில்லாது தொழிலாளர் ஒழுக்கம் பிசகினர். 1782-ல் ரெய்க்ஸ் (Raikes) என்பவர், தொழிலாளருக்காக ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடம் (Sunday Schools) வைத்து அறிவையும் ஒழுக்கத்தையும் கற்பித்தார். 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில், ஊழி வெள்ளம்போல எழுந்தன பிரெஞ்சுப் புரட்சியும், சமூகப் புரட்சியும், தொழிற் புரட்சியும். காலச் சக்கரம் பொதுஜனங்களுக்கு அனுகூலமாகத் திரும்பியது. பொதுஜன வாக்கிற்கு ஒரு சக்தி பிறந்தது. ஒவ்வொரு நாடும் தன் மக்களுக்குத் தாராளமான கல்விபுகட்ட மேற்கொண்டது. ஆந்துருபெல் என்பவரும், ஜோஸெஃப் லங்காஸ்டர் என்பவரும் பொதுஜனங்களுக்குக் கல்விப்பயிற்சி யளித்தனர். ஆந்துரு சென்னையிலிருந்தவர்; நம் திண்ணைப் பள்ளிக்கூடங்களிற் சட்டாம்பிள்ளைகளைக் கண்டவர். அதிலிருந்து

கெட்டிக்காரப் பையன், மிதமாயிருக்கும் மற்றைப் பையன் களுக்குப் பாடம் சொல்லும் முறையை அவர் தம் பள்ளிக் கூடங்களிற் பரப்பினர். 1832-ல் பொதுக் கல்விக்காகப் பார்லிமெண்டு தாராளமான உதவி செய்ய முன்வந்தது. அரசாங்க உதவியால் பள்ளிக்கூடங்கள் பெருகின. பாதிரி மார்களும், ஊக்கமுள்ள தனி மக்களும், அரசாங்கமும் சேர்ந்து கல்வி பரப்பப் பெரும் முயற்சி செய்தனர்; உபாத்தியாயர் களைத் தக்கபடி பயிற்ற ஆங்காங்குப் போதனுசாலைகள் (Training Schools) ஏற்படுத்தினர். பயிற்சி பெற்ற உபாத்தி யாயர்களைக் கொண்ட பள்ளிக்கூடங்களில் படிக்கும் பையன் களின் தொகைக்கும் கல்விக்கும் ஏற்றபடி சன்மானம்(Grant) அளித்தனர். இதற்கு விகிதவுதவி (Capitation Grant) என்று பெயர். இதன்படி 1853—ல் தலைக்கு 3½ ஷில்லிங் வந்தது. பரீட்சையில் தேறும் மாணவர் தொகைக்குத் தக்கபடியே இச் சன்மானம் என்று நியூகாஸில் கமிஷன் தீர்மானித்தது. தொழில், வியாபாரத் துறையில் நாடு முன்னேற முன் னேற, சமயக் கல்வி பின்னேற்றமடைந்தது. 'எத்தகைய தனிப்பட்ட மதபோதனையும் பள்ளிக்கூட நேரத்திற்கூடாது— (Cowper Temple Clause)' என்ற கட்டுப்பாடு வந்தது. ஏனெ னில், பெரும்பாலும் கிறிஸ்தவரேனும், கத்தோலிகருக்கும், புரோதஸ்தாந்தியர், பிரிஸ்பிதேரியர், ஆங்கிலிகர் முதலிய கிறிஸ்தவக் கிளையினருக்கும் பலமான மனவேறுபாடுகள்இருந் தன. இவர்களுடன் யூதப் பிள்ளைகளும் படித்தனர். நமது நாட் டில் அத்வைதம், த்வைதம், விசிஷ்டாத்வைதம், சைவம், மீமாம்சம், சாருவாகம் எதையும் பேசலாம்;மேனுட்டில் மூச்சு விடக்கூடாது. C—என்பவன் சிலுவையைக் கட்டிக் கழுத்தில் தொங்கவிட்டுக்கொள்ளுகிறுன்;ஏசுவின் உருவத்தைத் தொழு கிறுன்; மரியாளை வணங்குகிறுன். P—என்பவனுக்கு அது பிடிக்கவில்லையென்றுல் உடனே எதிரியை வேரொடொழிக்கக் கட்சி கட்டிக் கத்தி தீட்டுவான். இதை டியூடர், ஸ்டுவர்ட் மன்னர் நாட்களில் நடந்த மதப் போர்களாலும், மதக் கொலைகளாலும் அறியலாம். இந்த வம்பே வேண்டாமென்று தான் அதிகாரிகள் கல்வி முறையிலிருந்து மதத்தை ஒதுக்

கினர். பிரெஞ்சு இலக்கணத்தில் கடவுளைப் பற்றிய வாக்கியங்களை யெல்லாம் நீக்கிவிட்டனர். மதத்திற்குப் பதிலாக நீதி நெறி வகுப்பு (Moral Class) நடத்தினர்; தனது சமுதாயத்தைப் பெருமைப்படுத்த எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று கற்பித்தனர். 'நாட்டின் பெருமை'யே குறிப்பு.

1876–ல் மந்திரி தெஸ்ரேலி, மூலாதாரக் கல்வி பரவ அரியதொரு சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தார். அதன்படி, பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி, எழுதப் படிக்கக் கணக்குப்போடக் கற்பிக்க வேண்டும்; இக்கடமையைச் செய்யாதவர்கள் குற்றவாளிகளாவர்; 10 வயதிற்குக் குறைந்த குழந்தைகளை வயிற்றுப் பிழைப்பிற்காகக் கூலிவேலைக்கு அனுப்பக்கூடாது. மூலாதாரக் கல்விப் பத்திரம் இல்லாது பதினான்கு வயதிற்குட்பட்ட பையன்களை வேலைக்கு வைத்துக் கொண்டவரைச் சட்டம் தண்டிக்கும். பள்ளிக்கூடத்திற்குப் பையன்களை அனுப்பப் பெற்றோர்களைத் தூண்டுவதற்குச் சபைகள் ஏற்பட்டன. 1891-ல் இங்கிலாந்தில் பிறந்த ஒவ்வொரு குழந்தையும் 14 வயது மட்டும் பள்ளிக்கூடத்தில் படித்தே தீரவேண்டும்; படிப்பு இனும்; ஒரு காசு செலவில்லை என்று ஒரு மூலாதாரக் கல்விச் சட்டம் (Elementary Education Act) அமுலுக்கு வந்தது. அக்கறையுள்ள மாணவர் இலக்கண, இலக்கியத்துடன் பல கலைகளும் கற்று, சர்வகலாசாலையிற் படித்தனர். உயர்தரக் கலாசாலைகள் தோன்றின. எழுதப் படிக்கத் தெரிந்துகொண்டு, ஏதாயினும் ஒரு தொழில் செய்து பிழைப்போம் என்ற நோக்கமுடைய மாணவருக்குத் தனியாகத் தொழிற் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டன. இந்தத் தொழிற் பள்ளிக்கூடங்கள் பிரெஞ்சுக் கல்விமுறையைப் பார்த்து ஏற்பட்டன. கல்வியில் ஆர்வமுள்ள மாணவருக்கு உயர் கலாசாலைகளும், கல்லூரிகளும், சர்வகலாசாலைகளும் தாராளமான சௌகரியங்களைத் தருகின்றன. தக்க மாணவருக்குச் சன்மானம் தருகிறார்கள். ஏழை மாணவருக்கு உணவும், உடுப்பும் அளிக்கின்றனர். ஆங்கிலம், லத்தீன், கிரீக்கு, சரித்திரம், கணிதம், பூகோளம், ஸயன்ஸ் முதலிய பாடங்கள் தவிர, இயல்பிற்

கேற்றவாறு ஒரு கலை பயின்று மேதாவியாகலாம். கிராமங்களில் வேலை செய்து பிழைக்கும் குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வியானதும் தொழில், விவசாயம் பயிற்றுவர். பெண் குழந்தைகள் சமையல்,பின்னல், வீட்டுக் காரியம்,மருத்துவம் போன்ற தொழில்களைப் பயில்வர். இவ்வாறு இங்கிலாந்தில் கல்வி பரவுகிறது.

# 13. அமெரிக்கா

அமெரிக்கா நாகரிகத்திற்குத் தாயகமாக விளங்குகிறது. அமெரிக்காவில் கல்வியறிவும், கலையறிவும், தொழிலாற்றலும் மின்சார வேகத்தில் முன்னேறுகின்றன. குழந்தைகள் எளிதாக, விளையாட்டாகக் கல்வி பயிலப் புதுப்புது முறைகளை அங்கே கையாளுகின்றனர்; கல்விக்கு ஏராளமான பொருளைத் தாராளமாக அள்ளி விடுகின்றனர். நியூயார்க் மாகாணம் ஒன்றில் கல்விக்குச் செலவாவதில் மூன்றிலொரு பங்குகூட அகில இந்தியக் கல்விக்குச் செலவாவதில்லை. ஒரு காசு செலவின்றிக் கவலையற்று 14 வயது வரையில், எட்டாவது வகுப்பு வரையில், மாணவர் படிக்கலாம்; படித்தே தீரவேண்டும், கட்டாயம். கீழ்வகுப்பில் ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் சேர்ந்தே படிக்கிறார்கள். கல்வி பரப்பும் சங்கங்கள் கணக்கில. இவை மாணவர் மேற்கொண்டு படிக்கத் தக்க துணைபுரிகின்றன. ஊருக்கு ஊர் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி, ஆசிரியருடன் ஒத்துழைக்கச் செய்யவே பெற்றோர் சங்கங்கள் (Parents' Associations) உள்ளன. மாணவருக்குப் பால் இனும்; ஏழை மாணவருக்கு உணவும் உடையும் உதவுகின்றனர். குழந்தைகளின் சுகாதாரத்தைக் கவனிக்க வைத்தியர்கள் உள்ளனர். படிப்பதோடல்லால், சுகாதார விதிகளை மாணவருக்குப் பயிற்றுகின்றனர். அதனால் குழந்தைகள் உடல், உடை, உணவு, இருப்பிடங்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுகின்றனர். சிறு குழந்தைகளுக்குக் கிண்டர் கார்டன் பள்ளிக்கூடங்கள் உள்ளன. அங்குச் சிறுவர் உடலும், உள்ளமும், உணர்வும், அறிவும் நல்ல பயிற்சி பெறத் தக்க இனிய விளையாட்டு முறையில் கல்வி புகட்டுகின்றனர். 'பிரப்பம்பழம்' கிடையாது; வெடுக்குச் சிடுக்கென்ற

வார்த்தை கிடையாது! குழந்தைகள் முகம் புன்னகை குலுங்கும். உயர்ந்த கல்விப் பயிற்சியும், போதனைப் பயிற்சியும் பெற்ற ஆசிரியர்கள் தாயினும் அன்புடன் குழந்தைகளை ஆதரவாகப் பயிற்றுகின்றனர். கிண்டர்கார்டன் வகுப்புகளில் பெண் உபாத்தியாயர்களே அதிகம். குழந்தைகளின் அருமைதெரிந்து அவர்களை வழிக்குக் கொண்டுவரும் பொறுமை பெண்களுக்கு அதிகம்; ஆதலால் குழந்தைக் கல்வி அமெரிக்காவில் அற்புதமான முன்னேற்ற மடைந்துள்ளது. இங்கிலாந்திலும் அப்படியே. ஃப்ரோபெல், மோந்தெஸ்ஸோரி முதலிய மேதாவிகள் வகுத்த ஆடல் முறையைக் கண்டால், மீசை முளைத்தவர்கூடக் குழந்தையாகி, இந்த மாதிரிப் படிக்க ஆசைப்படுவர்! கிண்டர் கார்டன் பள்ளிக்கூடத்தில் பயின்றதும், மாணவ மாணவிகள் மூலாதாரப் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து இனமாகப் படிக்கின்றனர். அங்கு ஆங்கிலம், கணக்கு, பூகோளம், தேச சரித்திரம், ஸயன்ஸ், உடல் நூல், சுகாதாரம், பாட்டு, சித்திரம் முதலிய பாடங்களைக் கற்கலாம். ஒழுங்கு, கறுர், கவனமான நடையுடைகள்—இவை சிறு வயதிலேயே மாணவருக்குப் பழக்கமாகின்றன. ஆசிரியர் தக்க சம்பளமும், சௌகரியங்களும் பெருவதால், வேறு கவலையின்றி, தம் குழந்தைகளைப் போலவே மாணவரைக் கருத்துடன் வளர்க்கின்றனர். போதனுசாலைகள் ஆசிரியர்களைக் கருத்துடன் பயிற்றுகின்றன.

சரி, எட்டாவது வகுப்பை எட்டியாயிற்று; மேற்கொண்டு என்ன செய்வது? அமெரிக்கப் பையன் யோசிக்கிறுன்: ‘நாம் ஆங்கிலம், லத்தீன், சரித்திரம், கணிதம், ஸயன்ஸ் முதலியவற்றில் பெரும் புலமை பெற்று, வக்கீல், டாக்டர், உபாத்தியாயர் முதலிய உத்தியோகங்களை வகிக்க லாயக்கா?’ ஆம், என்றுல் மேலே கல்வியைக் கல்விக்காகவே கற்கிறுன். உயர்தரப் பள்ளிக்கூடத்தைத் தாண்டுகிறுன்; கல்லூரிப் படிப்பை முடிக்கிறுன்; சர்வகலாசாலையில் சேர்ந்து ஏதாவது ஒரு கலையில் புலவனுகி, அதனுல் நாட்டிற்குப் பணி செய்கிறுன். ‘நமக்கு எழுதப் படிக்கத் தெரியும், ஏழு வகுப்புப் படித்திருக்கிறேம்; வீட்டில் பெற்றேர் கஷ்டப்படுகிறுர்கள்; நமக்கு இன்ன

தொழில் வரும்' என்று பட்டால், உடனே அந்தத் தொழிற் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து தொழில் பழகி, வீட்டிற்கும் உதவி செய்கிருன். பெண்களுக்குத் தக்கபடி வீட்டு நிர்வாகம், சமையல், குழந்தை வளர்ப்பு, சுகாதாரம் முதலியவற்றைக் கற்பிக்கின்றனர். வேளாண்மை, கைத்தொழில், யந்திர நுட்பங்களுடன் அவரவர் இயல்பிற்கேற்ற கலைகளைப் பயில அமெரிக்க மாணவருக்கு ஏராளமான வசதிகள் உள்ளன. ஜப்பானும், இத்தாலியும் அமெரிக்கக் கல்வி முறையையே பின்பற்றி முன்னேறுகின்றன. இத்தகைய கல்விப் பயிற்சியாலேதான் இந் நாடுகள் உலகிற் சிறந்து விளங்குகின்றன. கல்வியால் செல்வம், செல்வத்தால் சீர்சிறப்போங்கும்.

# 14. ஜர்மனி

ஜர்மானியர் தேசவெறியுடன் பிறக்கின்றனர், நாட்டுணர்வுடன் கற்கின்றனர், நாட்டுணர்வுடன் உழைக்கின்றனர், நாட்டன்பே மூச்சாக வாழுகின்றனர்; 'உலகம் ஜர்மானியருக்கே' என்னும் உணர்ச்சியை வளர்த்து வருகின்றனர். ஒவ்வொரு குழந்தையும் உண்மையான ஜர்மானியனுகி உலகின்முன் வீரச் செருக்குடன் நிமிர்ந்து நடக்கவே பயிற்சி பெறுகிறது. இன்று ஜர்மனி அடைந்துள்ள வீர இறுமாப்பின் உயிர்நிலை பள்ளிக்கூடமே. மதாசாரியர் புகட்டிய கல்வியே கதியாயிருந்த ஜர்மனி, மார்டின் லூதருக்குப் பின் ஒரு புதிய விழிப்படைந்தது. லூதர் ஓர் உபாத்தியாயர். கல்வியின் அவசியத்தைப் பற்றி லூதர் அரசாங்கத்தாருக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினுர். 'குழந்தைகளுக்கு மூலாதாரக் கல்வி இனுமாக அளிக்கவேண்டும். பெற்ருேர் பிள்ளைகளைக் கட்டாயமாகப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப வேண்டும். கல்வி புகட்டுதல் அரசாங்கத்தார் கடமையும் பெருமையுமாகும்' என்பது அக்கடிதத்தின் கருத்து. அரசாங்கத்தர்ர் அன்று முதல் கல்வி பரப்புவதில் கருத்தூன்றினர். 1763-ல் பிரெடரிக் கோமான் (Frederic the Great) மூலாதாரக் கல்வியை ஊன்றவைத்தார். வந்தது நெப்போலியச் சண்டைகள்! ஜர்மனி மீசையை முறுக்கிக் கொண்டெழுந்தது; "இனி நாம் உறங்கினுல் அன்னியருக்கு ஆட்பட நேரிடும். ஆதலால், மற்ற நாடுகளுக்குச் சமானமாகத் தலை நிமிரவேண்டும்" என்று தேசாவேசத்துடன் ஒன்றுபட்டது; நாட்டின் ஆணிவேர் கல்விமுறையி லிருப்பதை யுணர்ந்தது. குழந்தைகளே வருங்கால வீரர் ஆதலால், அவர்களை ஆளாக்கும் தீவிரமான கல்விமுறையை வகுத்தது; ஆசிரியர்களுக்குத் தக்க பயிற்சி

யும் ஆதரவும் தந்தது. அவர்கள் வயிற்றுக் கவலையின்றி, நாட்டுக் குழந்தைகளின் முன்னேற்றமே தமது கடமை என்று கல்வி புகட்டினர். ஜர்மன் பள்ளிக்கூடங்களுக்கு ஜிம்னு சியம் என்று பெயர். ஜிம்னுசியம் என்ருல் உடற்பயிற்சி செய்யுமிடம்; கல்விச் சாலை என்பது மற்ருெரு பொருள். பழைய கிரேக்கரைப் போன்று ஜர்மானியர் உடலை உறுதி செய்து, வாழ்வுப் போருக்குத் தயாராவர். மூலாதாரக் கல்வியானதும் நடுத்தரப் பள்ளிக்கூடங்கள் உள்ளன. அவற்றில் எண்ணெழுத்து, அறிவுநூல்களுடன் அவரவர் இயல்பிற்கேற்ற தொழிற் பயிற்சியும் தருகின்றனர். கலை விரும்பும் மாணவருக்கு உயர்தரப் பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும், சர்வகலாசாலைகளும் உள்ளன. அந்தந்த மாணவருக் கேற்ற படியே கல்விப் பயிற்சி யளிக்கின்றனர். தாய்மொழியில்தான் பாடம். இலக்கியப் புலமை வேண்டுவோரே கிரீக்கு, லத்தீன் முதலிய பழைய மொழிகளைப் பயிலுவர். ''நம் குழந்தைகளை வீர ஜர்மானியராக்குவதே நமது நோக்கம்; நம் குழந்தைகளை ரோமர், கிரேக்கராக்கும் நோக்கமில்லை. ஆதலால் அவர்கள் தாய் மொழியே பயிலட்டும்'' என்று ஜர்மானியர் தீர்மான மாகக் கூறுகின்றனர். ஒரு பையனுக்கு யந்திர நுட்பம் கற்கும் ஆற்றலிருந்தால், அவனை இலக்கியத்திற் போட்டு வதைக்க மாட்டார்கள்; போதுமான பொதுக் கல்வி கற்றதும், நேராக யந்திர வித்துவான் வகுப்பில் (Mechanical Engineering) சேர்த்துப் பயிற்றுவார்கள். ஒருவனுக்குச் சங்கீதத்தில் ஆற்ற லிருந்தால், அவனை அந்தத் துறையில் மேதாவி யாக்குவர். ஆனுல், எல்லாருக்கும் உடற்பயிற்சி பொது. ஜர்மானியன் 'நேற்றை விட இன்று எவ்வளவு அதிக பலம் பெற்றிருக்கிறேன்' என்று தனது முண்டாவைப் பார்க்கிருன். நாட்டுக்கு எப்படிப் பணி செய்ய வேண்டுமென்று ஒவ்வொரு ஜர்மானியனும் அறிவான்; தலைவரைப் பணிவான்; இட்ட கட்டளையை நிறைவேற்றத் துணிவான். ஒவ்வொரு ஜர்மானியனும் ராணுவப் பயிற்சி பெறவேண்டியது கட்டாயம். ஒவ்வொரு ஜர்மானியன் உள்ளமும், 'என்னுயிர் நாட்டிற்கே' என்று துடிக்கும். ஹிட்லரின் ஜர்மனி இவ்வுணர்ச்சியின்

கரத்தை எட்டியுள்ளது. ஜர்மன் ஆரியர் மிகச் சிறந்த போர்வீரர். *1915—1919*-ம் ஆண்டில் ஜர்மனி கொடிய போர் செய்து அடங்கியது. இன்று மீண்டும், இடியும் புயலு மாகக் கிளம்பி உலகை நடுக்குகிறது. எதனுல்? தீவிரமான கல்விப் பயிற்சியால்.

---

# 15. பிரெஞ்சு கீதம்

கல்வி யறிவில் பிரான்ஸு[*] அபாரமான முன்னேற்ற மடைந்திருக்கிறது. கல்விமுறை யமைப்பிலும், அணிவகுப்பிலும் நெப்போலியன் காலம் முதல் பிரான்ஸு முதன்மை பெற்று வருகிறது. பிரெஞ்சுக் குடியரசு, சுதந்திரத்திற்கு அடுத்தபடி நாட்டின் கல்வியறிவை உயிர்போல மதிக்கிறது. சுதேசத்தைப் பழித்தால் பிரெஞ்சுக்காரன் சகியான். அவனுக்கு உயிரைவிட நாடே பெரிது. பிரெஞ்சுத் தேசிய கீதத்தை இங்கு மொழிபெயர்க்கிறேன். அதனின்று அந்நாட்டார் உணர்ச்சியைக் காண்க:—

La Malseillaise (லா மார்செய்யஸ்) ஒவ்வொரு பிரெஞ்சுப் பிரஜையும் பாடும் தேசீய கீதம்; Rouget De Lisle (ரூழே! த-லில்) என்னும் போர் வீரன் 1792-ல் பாடியது. இதைக் கேட்டாலும், பாடினாலும் பிரெஞ்சுக்காரன் உள்ளம் நாட்டன்பால் துள்ளியெழும்! தமிழர்களே கேளுங்கள்:—

*நாம் இசைபெறும் நாள் வந்தது! நாட்டுப் புதல்வர்களா, செல்வோம் போர்க்களம்! இரத்தக் கொடி விரித்து நம்மீது வருகிறது கொடுங்கோல்! அதன் முரட்டுப் படைவீரர் களத்தில் வீருப்புக் கூறி ஆர்கலிப்பதைக் கேட்டீர்களா-கொடிய பகைவர் வந்து நம் மைந்தர் கழுத்தை அறுக்கின்றனர்! ...ஹா!*

*எடுங்கள் துப்பாக்கி, பிரெஞ்சுப் பிரஜைகளே, படையணி சேருங்கள்! செல்லுங்கள் முன்னே! நமது தேசவாசலை அன்னியரின் அசுத்த ரத்தம் அழுக்காக்காது முன்சென்று போர் புரிவோம்!*

---

[*] இங்கே பெத்தானுக்குமுன் இருந்த பிரான்ஸைப் பற்றியே பேச்சு.

அடிமைக் கும்பல், துரோகக் கும்பல்,—யாருக்கு வேண்டும்? துச்ச அடிமைத் தளைகள் யாருக்கு வேண்டும்? ஹா நமக்கா? பிரெஞ்சுக்காரர்களே, என்ன அபாயம்! அடிமை, தளை—இவற்றைக் கேட்டதும் நமது இரத்தம் கொதிக்கவில்லையா? பிரெஞ்சுக் காரர்களே, நம்மையோ அன்னியர் அடிமைப்படுத்தத் துணிவது!

எடுங்கள் துப்பாக்கி......!

என்ன, இந்த அன்னியப் படைகளோ நம் வீட்டில் நமக்குச் சட்டம் செய்வது? என்ன, இந்தக் கூலிப் படையோ நமது படைச் செருக்கை வீழ்த்துவது? ஐயோ கடவுளே! விலங்கிட்ட கைகளுடன் நாமோ அவர் நுகத்தடிக்குக் குனிவது? இரக்க மற்ற கொடுங்கோலரசர்களோ நமது விதியை ஆளும் தலைவராவது?—ஹேய்!

எடுங்கள் துப்பாக்கி...!

நடுங்குங்கள் கொடுங்கோலரே! தீயர் நடுங்குங்கள்! எம்மை இழிவு செய்பவர் நடுங்குங்கள்! உங்கள் துரோகத்தின் பலன் கைமேல் கிடைக்கும், காண்பீர்! உங்களைப் பொருத நாடு முழுதும் வீர முடனெழுந்தோம்! ஒரு வீரன் விழுந்தால் எங்கள் பிரான்ஸு இன்னொரு இளம் வீரனைத் தரும்! துரோகிகளா, இதோ உங்களைப் பொருதத் தயாராக எழுந்தோம்!—ஹா!

எடுங்கள் துப்பாக்கியை...!

இந்த இரத்த வெறிகொண்ட கொடுங்கோலர், இந்தப் புலிகள் இரக்கமின்றி நம்மை வாள் கொண்டு தாக்குகின்றனர்; தாயின் மார்பைக் கிழிக்கின்றனர். அடி சுமப்பீரா? அடி கொடுப்பீரா?

புனிதமான தேசாபிமானமே, எம்மை நடத்து! எம்மைக் கொடுமை செய்வோரைப் பழிவாங்க இக்கைகளை உறுதியாக்கித் தாங்கு! சுதந்தரமே! அருமைச் சுதந்தரமே! உன்னைக் காக்கவே போர்புரிகிறோம்! துணை செய்! எங்கள் வீரக் கொடிக்கு வெற்றிமேல் வெற்றிவளரச்செய்! சுதந்தர

சக்தியே, நின் பகைவர் விழும்போது எமது வெற்றிப் பெருமையைக் காணச் செய்?

நமக்குமுன் சென்ற வீரரை நாம் காணேம்! அவர்களது மண்ணையே காண்போம்! அவர்கள் வீரப் பெருமையைக் கேட்போம்! அவர்கள் கொண்ட கொள்கையை நிறைவேற்று வோம்! அவர்கள் பொருதிய பகைவரை வீழ்த்தும் பெருமை யில் இறுமாப்போம்! இன்றேல், அவர்கள் வழியே நாமும் வீர சுவர்க்கம் புகுவோம்!

எடுங்கள் ஆயுதங்களை...!''

இவ்வாறு வீராவேசத்துடன் கிளம்பும் படை வீரர் உணர்ச்சியையும், அவர்களைத் தாய், தந்தை, தனயர், உடன் பிறந்தார் ஆசீர்வதித்து அனுப்புவதையும் Chenier (ஷேனியே) என்னும் ஒரு கவி வர்ணித்திருக்கிறார்; அதையும் கேட்டு விடுங்கள்!

## போர் வீரர்

''குடியரசு அழைக்கிறது! வெல்வோம்! இன்றேல் சாவோம்! ஒவ்வொரு பிரெஞ்சுக்காரனும் பிரெஞ்சுக் குடி யரசிற்காகவே வாழவேண்டும்! குடியரசிற்காகவே உயிர்விட வேண்டும்.''

## ஜனப்பிரதிநிதி

''வெற்றி, இசை முழங்கி நமக்கு வழி திறக்கிறது! சுதந் தர சக்தி நம் கால்களை நடத்துகிறது! போர் முரசு யுத்த சம யத்தை அறிவிக்கிறது! பிரெஞ்சின் பகைவர்களா, நடுங்குங் கள்! இரத்த வெறியும் செருக்கும் பிடித்த கொடுங்கோலர் காள், பாடையிலேறுங்கள்!"

## ஒரு தாய் (மைந்தருக்கு)

''கோழைத் துயர் ஒழிக! எமது கண்ணீரைக் கண்டு கலங்காதீர்! நீங்கள் தேசத்திற்காக ஆயுதங்களைத் தாங்கு வதே எமது வெற்றி! கண்ணீர் யாருக்கு? கொடுங்கோல ருக்கு! உங்களுக்கில்லை! எம் ஆருயிர் மைந்தர்காள், உங்கள்

வாணுள் முழுதும் நாட்டிற்கே அர்ப்பணமாகுக! எங்களுக்கு முன்பு, தேசமே உங்கள் தாய்! செல்லுங்கள் போர்க்களம், செல்வர்காள்!''

## இரண்டு கிழவர்

''நாங்கள் பிடித்த வாளைத் தைரியமுள்ள வீரர் தாங்குக! போர்க்களத்தில் எங்களை நினையுங்கள்! கிழவர்களான நாங்கள் ஆசீர்வதித்த வாளைப் பகைவன் இரத்தத்தில் முழுக்குங்கள்! ஆண்மையாகப் போர் புரிந்து நீங்கள் பரிசாகப் பெற்ற காயத்துடன் வாருங்கள்! நீங்கள் கொடுங்கோலரை வீழ்த்தி வந்தால்தான் நாங்கள் மகிழ்வுடன் கண் மூடுவோம்.''

## ஒரு குழந்தை

பாரா, வியலா(Para, Viala) என்ற இரண்டு சிறுவர் முன்பு தாய்நாட்டிற்காகப் போர்புரிந்தனர். பாரா 1779-ல் பிறந்தான். சின்னஞ் சிறுவயதில் குடியரசுப் படையைச் சேர்ந்தான்; பகைவரை வீரமாகத் தடுத்து நின்ருன்.பகைவர் பலர் சிறுவனைச் சூழ்ந்து சிறைப்பிடித்து, ''அரசன் வாழ்க'' என்று சொல்லச் சொன்ஞர்கள்! அவர்கள் சொல்லச் சொல்ல, ''குடியரசு வாழ்க ! குடியரசு வாழ்க!'' என்றே சிறுவன் தைரியமாகப் பாடினுன்! பகைவர் சுட்டனர்! குண்டுகள் பாயப் பாய, ''நாடு வாழ்க! குடியரசு வாழ்க!'' என்று கதறியே 1793-ல் அவன் உயிர் நீத்தான். அவனது சிலை இன்று ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் உள்ளது! வியலா என்னும் சிறுவன் 13-வயதில் முடியரசுப்படை ஓர் ஆற்றைத் தாண்டவிடாது பாலத்தை உடைத்துக் குடியரசிற்கு வெற்றி யுண்டாக்கினுன். அந்த முயற்சியில் பகைவரால் சுடப்பட்டு, ''குடியரசு வாழ்க!'' என்று கூவி யிறந்தான்.

''இந்த வீரச் சிறுவரைக் கண்டு நாங்கள் பொருமைப்படுகிருேம்! அவர்கள் சாவை வென்று புகழுடம்பில் வாழுகிருர்கள்! பொதுஜன நலத்திற்காக உயிர் தருவோரே நீடூழி உயிர் வாழ்பவராவர்! நீங்கள் சூரர்கள், நாங்களும் சூரர்கள்! கொடுங்கோலரை வீழ்த்த நாங்களும் புறப்படுகிருேம்!

எம்மை நடத்துங்கள்! குழந்தைகளானாலும், நாங்கள் அடிமை வாழ்வை விரும்பமாட்டோம்! உங்களைப்போல எங்களுக்கும் ஆண்மையுள்ளது!''

## மனைவிமார்

''வீரக் கணவர்காள், செல்லுங்கள்! போரே உங்கள் விருந்து! உண்மையான போர் வீரர்காள், விடைபெற்றுக் கொள்ளுங்கள்! உங்கள் தலைகளிற் சூட்ட நாங்கள் மலர்களைச் சேர்ப்போம்! உங்களுக்கு வாகை மாலை கட்டிக்கொண்டிருப் போம்! பகைவரை வீழ்த்தி இறந்தால், உங்கள் ஆவியின் புகழைப் பாடுவோம்!''

## கன்னியர்

''வீரருடன் பிறந்த நாம் விரும்பும், திருமணத்தை மறந்திருப்போம்; நம் காதலர்கள் சென்று சுதந்தரத்திற்காகவும் சமத்துவத்திற்காகவும் போர் புரிந்து வரட்டும். பிறகே நாம் அவர்களைக் கூடுவோம்!''

## வீர இளைஞர்

கடவுள் சாக்ஷியாக, வாளின்மேல் சத்தியம் செய்து சபதம் கூறுகிறோம்:—

''தாய் தந்தையர்களே, தங்கை தமக்கையரே, இளம் மனைவியரே, பொதுஜனப் பிரதிநிதிகளே! பகைவரை வீழ்த்துவோம்! இரவும், பகலும், எங்கும் கொடுமையைக் குமைப் போம்! பிரெஞ்சுக்காரராகிய நாங்கள் உலகிற்கு அமைதியும், விடுதலையும் தருவோம்!''

இந்தப் பாட்டே ஐரோப்பிய உள்ளத்தின் புகைப்படம்; முதன்மையாகத் தற்போது ஒவ்வொரு நாட்டிலும் இந்த உணர்ச்சியே கொழுந்துவிட்டெரிகிறது. இந்த உணர்ச்சி கல்வியறிவென்னும் அகண்ட தீபத்தில் எரிகிறது.

# 16. பிரெஞ்சுக் கல்வி வளர்ச்சி

பிரெஞ்சுக் கல்வி முறையை நன்குயறிந்தால், மேனுட்டுக் கல்விமுறை யனைத்தும் அறிந்ததாகும். ஒவ்வொரு பிரஜைக்கும் கல்வி பரவும்படி கல்வி முறையையும், கல்வி யிலாகாவையும் பிரெஞ்சுக் குடியரசு ஒழுங்காக அணிவகுத்துள்ளது. முதலில் மற்ற நாடுகளைப் போலவே, கிறிஸ்தவ மடங்கள் கல்வி புகட்டி வந்தன. 'கிறிஸ்து சகோதரர்' என்னும் பொதுநலத் தொண்டர் ஒழுங்கு முறையாக மூலாதார நடுத்தரக் கல்விகளைத் தந்தனர். 14-ஆம் லூயி புலவர்களைப் பெரிதும் ஆதரித்தான். மோலியர், ராஸீன், பாலு, கொர்நெய், லாஃபோந்தன் முதலிய புலவர்மணிகள் நாட்டிற்கு நல்லிலக்கியங்களைத் தந்தனர். 1635-ல் ரிஷுலு(Richelieu)என்னும் அறிவிற் சிறந்த மந்திரி உயர்கல்வி யறிவைப் பரப்ப பிரெஞ்சுக் கழகம் (Academie Francaise) ஏற்படுத்தினர். அகாதமஸ் (Acadumus) என்ற தோட்டத்தில் ப்ளாத்தன் (Plato) நடத்திய குருகுலத்திற்கு அகதெமீ (Academie) என்று பெயர். அப்பெயரே கலா நிலயங்களுக்கும், கல்விக் கழகங்களுக்கும் வழங்குகிறது. முதல்முதலில் தகுந்த முறையில் ஒரு பிரெஞ்சுப் பேரகராதியைத் தயார் செய்ய இந்த அகாதமி 40 புலவர்களுடன் தொடங்கியது.

## பிரெஞ்சு நிலயம்

தாய் மொழியையும், கலைகளையும் உலகளாவப் பரப்பிப் பல கலைப் புலவர்மணிகளையும் ஆதரிக்க பிரெஞ்சு நிலயம் (Institute De France) உள்ளது. இஃது ஐந்து கழகங்களாகப் (Academie) பிரிக்கப்பட்டுள்ளது. இந்த ஐந்து கழகங்களிலும்

நாட்டிற் சிறந்த புலவர் அங்கம் வகித்து. இலக்கியத்தையும் கலைகளையும் வளர்க்கின்றனர்.

(*1*) **பிரெஞ்சு இலக்கியக் கழகம்**(Academie Francaise): இதில் 40 புலவர் சங்கம் வீற்றிருக்கின்றனர். இப்புலவர் நாட்டிலுள்ள அறிவாளிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பிரெஞ்சுக்கழகம் பிரெஞ்சு மொழியை மேம்படுத்தவே வேலை செய்கிறது. இக்கழகத்தார் அற்புதமான பிரெஞ்சு அகராதியும், இலக்கணமும், இலக்கியங்களும் வெளியிட்டிருக்கின்றனர்.

(*2*) **ஸயன்ஸ் கழகம்**(Academy of Sciences): இக் கழகம் அபாரமான வேலை செய்கிறது. இதில் கோட்டுக் கணித (Geometry) ஆராய்ச்சிக்கு 6 புலவர்; யந்திர நுட்பம் (Mechanics) ஆராயஆறுபேர்; வான சாத்திரம்(Astronomy) ஆராய 6பேர்; பூகோளமும், கப்பற்போக்கு வரத்தும்(Geography and Navigation) ஆராய 6 பேர்; பௌதிக நூல்(Physics)ஆராய்ச்சிக்கு 6 பேர்; ரசாயன ஆராய்ச்சிக்கு (Chemical Research)6 பேர்; உலோக வகை ஆராய்ச்சிக்கு (Mineralogy) 6 பேர்; தாவர நூலாராய்ச்சிக்கு (Botany) 6 பேர்; கிராமப் பொருளாதார ஆராய்ச்சிக்கு(Rural Economy)6 பேர்; உடற்கூறு(Anatomy), உயிர்நூல்(Zoology)ஆராய்ச்சிகளுக்கு 6 பேர்; வைத்தியம் சத்திர சிகிச்சை ஆராய்ச்சிக்கு 6 பேர் உள்ளனர்; இவர்கள் தலைமையில் பல புலவர் ஆராய்ச்சி செய்கின்றனர். அத்தனை ஆராய்ச்சிகளும் பொதுஜனங்களுக்குப் பயனுகும்படி நூல் வடிவாக வெளியிடுகின்றனர். **ஸயன்ஸ் கழகம்** (Academie of Sciences) மிகப் பெரிது. அது செய்திருக்கும் அறிவாராய்ச்சிப் பணிகளும் மிகப் பெரியன.

(*3*) **சரித்திரக் கழகம்** (Academy of Inscriptions and Historical literature): இதில் 40 புலவர் சங்கம் வீற்றிருக்கின்றனர். பிரெஞ்சுச் சரித்திரமும், பிறநாடுகளின் சரித்திரங்களும் இங்கு ஆராயப்படும். பழைய கல்வெட்டுகள், சரித்திர சம்பந்தமான பொருள்களை எல்லாம் இங்கு ஆராய்ந்து நாட்டிற்குப் புதுப்புது சரித்திர ஞானத்தை யளிக்கின்றனர்.

இன்று ஒவ்வொரு பிரெஞ்சுக்காரனுக்கும் சுதேச சரித்திரம் தெரியுமென்றால், அப்பெருமை இக்கழகத்தைச் சேர்ந்தது. இன்று பிரெஞ்சில் உலக சரித்திரங்கள் நிலவுகின்றன என்றால் அப்பெருமை இக்கழகத்தையே சேர்ந்தது. நம் பள்ளிக்கூடங்களில் மாணவர் படிக்கும் இந்திய சரித்திரத்தைவிட பிரெஞ்சில் உணர்ச்சியுடன் எழுதப்பெற்ற இந்திய சரித்திரங்கள் உள்ளன; அவ்வாறே பிறநாட்டுச் சரித்திரங்களும். பிரெஞ்சுப் புலவர் உண்மையை ஒளிக்காமல் எழுதுவர்.

(4) **தத்துவ—அரசியல்கழகம்** (Academy of Morals and Politics) இதில் தத்துவம் (Philosophy), நீதிநெறி (Morals), சட்டம் (Legislation), அரசியற் பொருளாதாரம் (Political Economy), பொதுவாக மனித வரலாறு (General History of Man) முதலிய சாத்திரங்களை ஆராய்கின்றனர். ஒவ்வொரு சாத்திரத்திற்கும் எட்டுப் புலவர் வீதம் 40 புலவர் தலைமை வகித்து இக்கழகத்தை நடத்துகின்றனர். இவர்களுக்கு ஏராளமான புலவர்கள் துணை செய்கின்றனர்.

(5) **கலைக்கழகம்** (Academy of Fine Arts) இதில் சித்திரக் கலைக்கு (Painting) 14 புலவர், சிற்பத்திற்கு (Sculpture) எண்மர், கட்டிடக் கலைக்கு (Architecture)எண்மர், செதுக்குக் கலைக்கு (கல், மரம், உலோகங்களில் பல வடிவங்களைச் செதுக்கல்) நால்வர், சங்கீதத்திற்கு எண்மர் அங்கம் வகிக்கின்றனர். இவ்வாறு பிரெஞ்சு நிலயம் அபாரமான கலைப்பணி புரிந்து நாட்டில் அறிவைப் பரப்புகிறது. மேற்சொன்ன தலைவரைத் தவிர உத்தியோக முறையில்லாது இன்னும் பல புலவர்கள் இக்கழகத்திற்குத் தேசாபிமானத்துடன் துணைசெய்கின்றனர். நாட்டில் உள்ள நல்ல புலவருக்கு பிரெஞ்சு நிலயத்தில் இடம் கிடைக்கும்; அவருடைய ஆராய்ச்சிகளை நிலயம் ஏற்றுப் போற்றி வெளியிட்டு நாடறியச் செய்யும். உதாரணமாக, பிரான்ஸில் பெர்க்ஸன்(Bergson)என்னும் பெரிய வேதாந்தி இருந்தார். இவர் எல்லாம் ஒரு சக்தியின் ஆக்கம் என்னும் உண்மையைக் கண்டார். இவரைப் போற்றாத தத்துவஞானிகள் இலர். இவருக்குத் தத்துவ கலையாராய்ச்சிக் கழகத்தில்

உயர்ந்த இடம் தந்தார்கள். தள்ளாத வயதிலும் இப்புலவர் தம் ஆராய்ச்சிகளை விடாது நடத்திப் புதுப்புது நூல்களை உலகிற்களித்தார். மேற்சொன்ன பிரெஞ்சு நிலயமும், அதைச் சேர்ந்த ஐந்து கழகங்களும் கலை வளர்ச்சிக்காகவே ஏற்பட்ட ஸ்தாபனங்கள்.

# 17. எத்தனைக் கலாசாலைகள்!

பிரான்ஸில் ஒவ்வொரு வீட்டிலும் கல்வி ஒளி வீச அற்புதமான ஏற்பாடுகள் உண்டு. 1806-ல் நெப்போலியன் மூலாதாரக் கல்வியைக் கட்டாயப்படுத்தினான்; கல்வி இலாகாவை ஒழுங்காக அணிவகுத்தான்; தக்க ஆசிரியர்களைக் கொண்டு நாட்டில் கல்வி பரவும்படி செய்தான். அவன் காலத்திலிருந்து பொது ஜனங்களுக்கு நல்ல கல்வியறிவு வளர்ந்து வருகிறது. இப்போது கல்விக்காக பிரெஞ்சு தேசம் 17 வட்டாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்குப் 17 கல்விக் கழகங்கள் (Academies) என்று பெயர். ஒவ்வொரு கழகத்திற்கும் கல்வி கேள்விகளில் தேர்ந்து டாக்டர் பட்டம் பெற்ற அறிஞரொருவர் தலைவரார்வர். குடியரசுத் தலைவர் சம்மதத்தின் மேல் அவர் நியமிக்கப்படுவார். ஒவ்வொரு கல்விக் கழகத்திலும் பல கலைப் பிரிவுகள் உண்டு. ஒவ்வொன்றிற்கும் மேற்பார்த்து நிர்வகிக்கும் ஒரு பரிசோதகர் (Inspector) உண்டு. ஒவ்வொரு கல்விக் கழகத்திற்கும் ஒரு பல்கலைக் கழகம் (University) இருக்கிறது. அதனின்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு புலவர் சங்கம் (Academic Council)) கழகத் தலைவருக்கு யோசனை சொல்லும். இப்புலவர் சங்கத்தில் பெரும்பாலும் உபாத்தியாயர்களே இருப்பர். இது தவிர, குடியரசுச் சபையில் கல்வி மந்திரி இருக்கிறார். அவருக்கு 57 அங்கத்தினர் கொண்ட ஒரு கல்விச் சபை துணை செய்கிறது. இந்த அங்கத்தினரில் பெரும்பான்மையோர் பொதுஜன வாக்கால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள். ஒன்பது பேர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பெறுவர். ஆறுபேர் கல்வி மந்திரியால் தேர்ந்தெடுக்கப்பெறுவர். போதனை முறையில் பயின்று தகுதி

பெற்ற ஆசிரியரே பள்ளிக்கூடங்களில் அமர்வர். பரிசோதகர்கள் (Inspectors) கண்ணுங் கருத்துமாகக் கல்வியிலாகாவைக் கவனித்து, குற்றந்திருத்திக் குணத்தைப் போற்றி ஆசிரியர்களை உற்சாகப்படுத்துவார்கள். மூலாதாரக் கல்வி முற்றிலும் இனும். ஏழைப் பிள்ளைகளுக்கு உணவும், உடைகளும் இனுமாகத் தர ஏற்பாடு செய்திருக்கின்றனர். ஆண் குழந்தைகளையும், பெண் குழந்தைகளையும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும்படி பெற்றோரைத் தூண்ட ஒருசபையுண்டு. நாட்டில்பிறந்த குழந்தைகள் 14-வயது மட்டும் கவலையற்றுப் படிக்கலாம். அதன் பிறகு மேலேபடிக்கும் ஆர்வமுள்ள மாணவருக்கு உயர் தரப் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் (Colleges), சங்கங்கள் இவை உள்ளன. பிழைப்பிற்கு ஒரு தொழிற் பயிற்சி பெற வேண்டுமானால் ஏராளமான கலைப் பள்ளிக்கூடங்கள் உள்ளன. ஒருவனுக்கு சித்திரம் வருமானல், சித்திரப் பள்ளிக்கூடத்திற் சேர்ந்து படிக்கலாம். பிரெஞ்சுக் கலாசாலைகள் மிகவும் நுட்பமாக அணிவகுக்கப்பட்டுள்ளன. இலாகா மந்திரியின் பார்வையில் அந்தந்த இலாகாவிற்குரிய பள்ளிக்கூடங்கள் நிர்வகிக்கப் படுகின்றன. அவற்றின் பெயரை ஆங்கிலப்படுத்தி யெழுதுகிறேன்.

## விவசாயக் கலாசாலைகள்

(*1*) National Institute of Agronomy: இது *1876*-ஆம்ஆண்டு முதல், சாஸ்திர முறைப்படி விவசாயத் தொழிலாராய்ச்சி செய்து வருகிறது; உலகில் எங்கே புதிய விவசாய முறைகள் தோன்றினுலும், அதை உடனே கற்று இந்த நிலயம் நாட்டிற்குப் பயனுக்கும். இந்நிலயத்தில் விவசாயப் புலவர்களுக்குப் பயிற்சி தரப்படும். இதில் 2 வருஷம் பயின்றவர்களே விவசாயக்கல்லூரிகளில் போதிப்பர். இப்படிப் பயின்றவர்கள் 'Agronomic Engineer' என்னும் பட்டம் பெறுவர்.

(2) National Agricultural School: இதில் இரண்டாண்டுகள் பயின்ற மாணவர் விவசாய எஞ்சிநீயர் பட்டம் பெறுவர். விவசாய முறைகள், கருவிகள், நாட்டிற்கும் காலத்திற்கும் ஏற்ற பயிர்கள், மாடு வளர்த்தல், பால் பண்ணை வைத்தல், எல்லாம் இவர்களுக்குத் தெரியும்.

(3) National School of Irrigation & Forestry: நீர்ப்பாசனம் காடு பாதுகாப்பு—இவ்விரண்டின் நுட்பங்களை இப்பள்ளிக்கூடம் இரண்டாண்டுகளில் பயிற்றுகிறது. 23-வயதிற்கு மேற்பட்ட வாலிபரே இதிற் சேரலாம். காட்டாராய்ச்சிக்கும் (Forest Research), நீர்ப்பாசன ஆராய்ச்சிக்கும் வேண்டிய எல்லாக் கருவிகளும், சாதனங்களும் இங்கே அமைந்திருக்கின்றன. இதிலேயே ஓர் உயர்தரப் பள்ளிக்கூடம் உள்ளது. அஃது இந்த இலாகா உத்தியோகஸ்தர்களைத் தயாரிக்கிறது.

(4) School of Rural Engineering: இது கிராம விவசாய வேலைக்கு மாணவரைப் பயிற்றுகிறது. கிராம நிர்மாண நுட்பங்களெல்லாம் இதிற் கற்கலாம்.

(5) National Veterinary School Civil and Military: 25 வயதிற்கு மேற்பட்டு B. A. பட்டம் பெற்றவர் இதில் நான்கு ஆண்டுகள் படித்துப் பிராணி வைத்தியத்தில் தேர்ச்சி பெறுவர்.

(6) School of Breeding—Stud: இங்கு பொலிக்காளைகள் குதிரைகள், ஆடுகள் முதலானவற்றை உற்பத்தி செய்து வளர்க்கும் பயிற்சி தரப்படுகிறது.

(7) Agricultural School: விவசாயத் தொழிலாளர் புதல்வருக்கு நவீன விவசாய முறைகளையெல்லாம் இங்குப் பயிற்றுகிறார்கள். இங்கே சேருகிறவர்களுக்கு நிலம் இருக்கவேண்டும். இதில் 13-முதல் 19 வயதுள்ள மாணவர்களே சேரலாம். அவர்கள் எட்டாவது வகுப்பு மட்டும் படித்திருக்கவேண்டும். மூன்று ஆண்டுகள் பயின்றதும் அவரவர் நிலத்தில் விவசாயம் நடத்துவார்கள். இப்படிப்பட்ட விவசாயப் பள்ளிக்கூடங்கள் மிகப் பல.

## குடியேற்றக் கலாசாலைகள்

### இவை குடியேற்ற மந்திரி நிர்வாகத்திலுள்ளவை

(1) Colonial School: பிரெஞ்சுக் காலனிகளுக்கு உத்தியோகஸ்தரைப் பயிற்றும் கலாசாலை. இங்கே 20 வயதிற்குட்பட்ட இந்தியர், சீனர், ஆப்பிரிக்கருக்கும், காலனிகளை நிர்வ

கிக்கும் 20-23 வயதுள்ள பிரெஞ்சு உத்தியோகஸ்தருக்கும் இரண்டாண்டுகள் பயிற்சியளிப்பர். மாணவர் பி. ஏ. பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(2) Practical Colonial Institution: இங்குக் காலனிகளைச் சேர்ந்த தொழில், வியாபார முறைகளைப் பயிற்றுவர்.

(3) Colonial Agronomic Institution: இங்கே காலனிக்கு ஏற்ற விவசாயம், தொழில் முறைகளைப் பயிற்றுவர். இதில் தேறினவர் Colonial Engineer of Agriculture என்னும் பட்டம் பெறுவர்.

(4) Colonial Military Sanitation Institute: இங்கே காலனி ராணுவப்படையின் சுகாதாரத்தைக் கவனிக்கும் வைத்தியர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும். இந்தக் காலனி உத்யோகஸ்தர் ஆங்காங்கு வழங்கும் தாய்மொழிகளையும் கற்பர்.

## வியாபாரக் கலாசாலை

வியாபார மந்திரிக்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களுக்குப் பயிற்சி தர வியாபாரக் கலாசாலைகள் ஏராளமாக உள்ளன. அவை கல்வி யிலாகா மந்திரியின் நிர்வாகத்தில் உள்ளன.

## தபால் தந்திப் பயிற்சி

தபால் தந்தி யிலாகாப் பயிற்சிக்குத் தனித் தனியே தபால்-தந்திப் பள்ளிக்கூடங்கள் (Postal and Telegraphic Institutions) உள்ளன.

## பொருளாதாரக் கலாசாலை

நாட்டின் விளைவு, வாணிபம், வரவு செலவுகளைக் கவனிக்கும் உத்தியோகஸ்தரைப் பயிற்ற ஒரு பள்ளிக்கூடம் உள்ளது.

## இராணுவக் கலாசாலை

போர் மந்திரியின்கீழ் பல ராணுவக் கலாசாலைகள் உள்ளன:

(1) **உயர்தர யுத்தக் கல்லூரி**(Higher Military School): இங்கே உயர்ந்த போர்க்கலை பயிற்றுவர்; போர்க் கருவிகளின்

நுட்பமும் பழக்கமும் கற்பிப்பர். இங்குச் சேருகிறவர்கள் 28—லிருந்து 38 வயதிற்குட்பட்டிருக்க வேண்டும்; மூன்றுண்டு ராணுவ சேவை செய்திருக்க வேண்டும். நான்கு வருஷம் இங்குப் பயின்றவர்கள் காப்டன் லெப்டினண்ட் முதலிய உத்தியோகங்கள் வகிக்கலாம்.

(2) பல கலைச்சாலை (Ecole Polytechnique): இது முக்கியமான போர்ப் பயிற்சி நிலயம். இங்கே எஞ்சிநீயர்களும், பீரங்கி உத்தியோகஸ்தரும்(Artillery Officers)பயிற்றப் பெறுவர். இங்கே இரண்டாண்டுகள் பயின்றவர் வெடிமருந்து செய்தல், தரைப்படை, கப்பற்படைச் சேவகம், பாலம் கட்டுதல், பாதை போடுதல், தபால் தந்தி நிர்வாகம், நீர்ப்பாசனம், காடு பாதுகாப்பு முதலிய பல தொழில்களைச் செய்யலாம்.

(3) Special Military School: இங்கே படைத் தொழிலும், போர் நுட்பமும், ஆயுதப் பயிற்சியும் தருவர். 18-22 வயதுள்ள திடசாலிகள் இங்கே சேரலாம்; தேர்ந்த மாணவர் குடியரசுப் படையிற் சேருவர்.

(4) School of Artillery and Military Engineering: இதில் ராணுவ உத்தியோகஸ்தர்கள் பயிற்சி பெறுவர்.

(5) Cavalry School: இப்பள்ளிக்கூடம் குதிரைப் படை வீரரைப் பயிற்றும். இவ்வாறே காலாட்படைக்கும் பயிற்சிச் சாலைகளுண்டு.

(6) ராணுவ நிர்வாகப் பள்ளிக்கூடம் (School of Mili-tary Administration): ராணுவ நிர்வாக இலாகா உத்தியோகஸ்தரைப் பயிற்றும்.

(7) ராணுவ சுகாதாரப் பள்ளிக்கூடம்(School of Military Health Service) : ராணுவ வைத்தியர்களையும், மருந்து தயாரிப்போரையும் இரண்டாண்டுகளிற் பயிற்றும்.

(8) வெடி மருந்துப் பள்ளிக்கூடம் (School of Powder): எல்லா விதமான குண்டு பீரங்கி மருந்துகளும் செய்யப் பயிற்றும்.

(9) ஊர்காவற் பள்ளிக்கூடம் (Police School): ஊர் காவலுக்காகப் போலீஸ்காரரைப் பயிற்றும்.

(10) உடற்பயிற்சிச் சாலை (Physical Culture Institute): இதில் மாணவர் எல்லாத் தேகப் பயிற்சிகளும் செய்வர். ஆயுதப் பயிற்சியும் உண்டு.

(11) சிறுவர் ராணுவப் பள்ளி (Prytaneum): 9-10 வயதுள்ள ராணுவ உத்தியோகஸ்தர் மைந்தருக்கு இங்குக் கல்விப் பயிற்சி தருவர்.

(12) தனிப் பள்ளிக்கூடம் (Special School): இங்குச் சிறப்பாக பூகோளம், நாடுகளின் பரப்பு, இயல்பு, படை நுணுக்கங்கள் ஆகியவை கற்பிக்கப்படும்.

(13) ஆரம்ப ராணுவப் பள்ளிக்கூடம்: 13 வயதிற்கு மேற்பட்ட சிறுவருக்கு, பீரங்கி, குதிரை, காலாட் படைப் பயிற்சி தருவர்.

(14) குழந்தை இராணுவப் பள்ளிக்கூடம் (Infant Military School): இங்கு 5 வயதிற்கு மேற்பட்ட அநாதைக் குழந்தைகளையும், ராணுவச் சேவகர் குழந்தைகளையும், மேற்சொன்ன ராணுவக் கலாசாலைகளுக்குத் தயாரிப்பர்.

## பொதுக் கல்வி

பொதுக் கல்வி மந்திரிக்கே பொறுப்பதிகம். இவர் நிர்வாகத்தில் பல பல கலாசாலைகள் உள்ளன.

### மூலாதாரக் கல்வி—(Primary Education)

(1) (Maternal School: இதில் 2 முதல் 6 வயது மட்டும் உள்ள சின்னஞ் சிறு சேய்களை விளையாட்டு முறையாகக் கல்வி புகட்டி, மூலாதாரப் பள்ளிக்கூடத்திற்குத் தயாராக்குகின்றனர். பெரும்பாலும் பயிற்சி பெற்ற பெண்களே குழந்தைகளைக் கவனிக்கின்றனர். பகலெல்லாம் வேலை செய்யும் தொழிலாளிகள் தங்கள் குழந்தைகளை இங்கே விட்டுச் செல்வர்.

(2) பாலர்சாலை (Infant School): 4 முதல் 7 வயதுள்ள ஆண் பெண் குழந்தைகளை ஆடல் முறையில் பயிற்றும் பள்ளிக்கூடம்.

(3) **தொடக்கப் பள்ளிக்கூடம்** (Elementary Primary School): 6 வயது முதல் 13 வயது மட்டுமுள்ள ஆண், பெண், குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வி யளிக்கிறது. ஆணுக்குத் தனி, பெண்ணுக்குத் தனியான பள்ளிக்கூடங்களும் உள்ளன. இருபாலாரும் சேர்ந்து கற்கும் பள்ளிக்கூடங்களும் அதிகமா யுள்ளன.

(4) **உயர் தொடக்கப் பள்ளிக்கூடம்** (Higher Primary School): இஃது ஆரம்பக் கல்வியை 3, 2, ஆண்டுகளுக்குள் முடிக்கிறது; பிறகு பொதுவாகப் பிரஜைகள் அறியவேண்டிய இலக்கியம், கணக்கு, ஸயன்ஸ், சரித்திரம், பூகோளப் பாடங் களைக் கற்பிக்கிறது; அத்துடன் கைத்தொழில், விவசாயம், வியாபாரம் முதலிய பிழைப்புத் துறைகளில் மாணவரைப் பயிற்றுகிறது; மாணவிகளுக்கு வீட்டு நிர்வாகம், குழந்தை வளர்த்தல் முதலியவை பயிற்றப்படும். இந்தப் பள்ளிக்கூடம் பொது ஜனங்களுக்கு அளவற்ற நன்மை செய்கிறது. கிராம வாசிகளும், தொழிலாளரும் இதனுல் பெரும் பயனடைகின் றனர்.

(5) **மூலாதாரப்பள்ளி ஆசிரியர் போதனு சாலை** (Normal School for Elementary Teachers and Mistresses): ஆரம்ப ஆசிரியர்களுக்கும், ஆசிரியைகளுக்கும், போதனு முறைகளைப் பயிற்றும் பள்ளிக்கூடம். இதிற் சேரும் மாணவ மாணவிகள் 16-18 வயதிருக்கவேண்டும். படித்த பிறகு 10 ஆண்டுகள் உபாத்தியாயர் வேலை பார்ப்பதாக வாக்களிக்க வேண்டும். படிப்பு இனும்; இருக்கை சாப்பாட்டு வசதிக ளெல்லாம் பள்ளிக்கூடத்திலேயே.

(6) **உயர் போதனு சாலைகள்**(Superior Normal Schools): மேற் சொன்ன போதனு கலாசாலையிற் பயின்றவர்கள் இதிற் சேரலாம். 4-ஆம் பத்தியிற் குறிப்பிட்ட உயர்தரத் தொடக்கப் பள்ளிப் படிப்பு முடிந்தவர்களும் இதிற் சேர லாம். அவர்கள் ஆசிரியத் தொழிலுக்கு ஏற்றவர்களாயிருக்க வேண்டும். வயது 19-25. 10 ஆண்டுகள் உபாத்தியாயர்வேலை பார்ப்பதாக எழுதிக் கொடுக்கவேண்டும். படிப்பு இனும்; சாப்பாடு-இருக்கை யெல்லாம் பள்ளிக் கூடத்திலேயே.

நடுத்தரப் பள்ளிக்கூடங்கள்—(Secondary Schools)

Lycee, College (லிஸே, கொலேழ்) என்னும் இரண்டு வகையான கல்வி நிலயங்கள் உயர்தரப் படிப்பைத் தருகின்றன. அது மெட்ரிகுலேஷன் எஃப். ஏ.க்குச் சமானம்.

## உயர்தரக் கலாசாலைகள்

(1) உயர்தர ஆசிரியர் பள்ளிக்கூடங்கள் (Higher Normal Schools): இங்கே எல்லாக் கலைகளையும் கற்பிக்க உயர்தர ஆசிரியர்களைப் பயிற்றுகின்றனர். உயர்தரப் பள்ளிக்கூடப் பத்திரம் பெற்றவர்கள் இங்கு 3 ஆண்டுகள் பயின்று போதனு முறை தேறுவதுடன் தாம் கற்பிக்கவேண்டிய பாடங்களிலும் உயர்ந்த அறிவைப் பெறுகின்றனர்.

(2) நடுத்தர ஆசிரியைப் பள்ளிக்கூடம் (Normal Secondary School for Ladies): எஃப். ஏ. மெட்ரிகுலேஷனுக்குச் சமானமான படிப்புடன், 18-24 வயதுள்ள பெண்கள் 3 ஆண்டுகள் பயின்று இங்கே ஆசிரியைப் பட்டம் பெறுவர்.

(3) Faculty of Letters and Sciences: இஃது ஒவ்வொரு சர்வ கலாசாலையிலும் உள்ளது; பல கலைப் புலவரைப் பயிற்றுகிறது. பி. ஏ., எல். டி., டாக்டர் போன்ற பட்டங்களைத் தருகிறது.

(4) Faculty of Medicine: இயற்கை, உடற்கூறு, பௌதிக ரசாயன, மருத்துவ சாத்திரங்களில் உயர்ந்த அறிவைப் புகட்டுகிறது.

(5) School of Medicine and Pharmacy: இது வைத்தியக் கல்லூரி. பக்கா வைத்தியரைத் தயாராக்குகிறது.

(6) Dentist's School: பல் வைத்தியரைப் பயிற்றுகிறது.

(7) Faculties of Law: சட்டம் பயிற்றுகிறது. படிப்பு 3 வருஷம்.

(8) Superior School of Pharmacy: உயர்ந்த மருத்துவப் பயிற்சி தருகிறது.

(9) Chemical Institute: மருத்துவத்திற்கும், பல வகைத் தொழில்களுக்கும் வேண்டிய ரசாயன ஞானத்தை யளிக்

கிறது. இதில் கற்றுத்தேறினோர்(Chemical Engineer) ரசாயன நிபுணர் என்னும் பட்டம் பெறுவர்.

(*10*) Preparatory Medical School: இஃது ஆரம்ப வைத்தியப் பள்ளிக்கூடம். பெரிய வைத்தியப் பள்ளிக்கூடத்தில் சேர மாணவரைத் தயாராக்குகிறது.

(*11*) Law College: சட்டக் கல்லூரி, குடியரசின் சட்ட திட்டங்கள், அரசியல் முறை முதலியவற்றைப் புகட்டும். இதில் பி. ஏ—க்குச் சமானமான யோக்கியதையுள்ளவர் சேரலாம். படிப்பு *3* ஆண்டுகள்.

(*12*) Practical School of Higher Studies: உயர்ந்த படிப்பில் அக்கறையுள்ளவர்கள் எல்லாரும் இதில் சேரலாம். இதில் கணக்கு, பௌதிகம், ரசாயனம், இயற்கை சாத்திரம், உடலறிவு, சரித்திரம், பல மொழிகள், சமய ஞானம் எல்லாம் தகுந்த புலவர் கற்பிப்பர். நாட்டின் அறிவு வளர்ச்சிக்காகவே இஃது உழைக்கிறது.

இது தவிர, வக்கீல் குமாஸ்தாக்கள், பத்திரம் எழுதுவோர் (Notaries) முதலியவர்களுக்கும் பள்ளிக்கூடங்கள் உள்ளன.

## தொழிற் கல்வி

தொழில், வியாபாரக் கல்வி ஐரோப்பாவில் மிகவும் முன்னேறி யிருக்கிறது. அதனால் எளிதாகப் பிழைக்க வழி ஏற்படுகிறது. *1919*-ஆம் ஆண்டு முதல் பிரெஞ்சுத் தொழிற் கல்விக்கு ஒரு புதிய ஆக்கம் உண்டாயிற்று. சுதேசம் சுதந்தரமாக வாழ்வதற்கு வேண்டிய தொழில்களையெல்லாம் முறை வகுத்து, ஒவ்வொன்றிற்கும் தக்க புலவரைக் கொண்டு வகுப்புகள் ஏற்படுத்தியுள்ளனர். தொழில் முறை படித்ததும் அதை அனுபவத்தில் கொண்டு வரவும், இப் பள்ளிக்கூடங்களில் வழியுண்டு. சில தொழில் வாணிபப் பள்ளிக் கூடங்களை யறிவாம்.

(1) National Conservatory of Arts and Industries: நாட்டிற்கு வேண்டிய தொழில்கள், அத்தொழில்களுக்கு அனு

கூலமான கணக்கு, பௌதிகம், ரசாயனம், பொருளாதாரம், சட்டதிட்டங்களெல்லாம் புகட்டும் கலாசாலை. இது மிகவும் உயர்தரத் தொழிற் கலாசாலை.

(2) Normal Technical School: தொழிற் கலாசாலையில் மாணவரைப் பயிற்றும் எல்லா ஆசிரியர்களையும் இக் கலாசாலை பயிற்றுகிறது. படிப்பு இரண்டு வருஷம்.

(3) The Central Institution of Arts and Manufactures: இங்கே ஸிவில் எஞ்சிநீயரிங் முதல் அரசாங்கத்திற்கு இன்றியமையாத தொழில்கள் எல்லாம் கற்பிக்கப்படுகின்றன. 17 வயதிற்கு மேற்பட்ட மாணவர் இதிற் சேரலாம்.

(4) National Institute of Arts and Works: இதில் தொழிற்சாலைக்குரிய எஞ்சிநீயர்கள், அருமையான யந்திரத் தொழில்கள், கைத்தொழில்கள், மின்சாரத் தொழில்கள், மோடார், ரயில் தொழில்களெல்லாம் கற்பிக்கின்றனர். 15-18 வயதுள்ள மாணவர் சேரலாம்.

(5) National School of Professions:: இங்கே ஆலைகளையும் தொழிற்சாலைகளையும், யந்திரங்களையும் பாதுகாத்து நடத்தும் வகையும், யந்திர நுட்பங்களும் கற்பிக்கின்றனர். 12-15 வயதுள்ள சிறுவர் இந்தத் தொழிற் பள்ளிக்கூடத்தில் 4 ஆண்டுகள் பயிற்சி பெறுகின்றனர்.

(6) School of Horologery: இதில் கடிகாரம் செய்தல், பழுது பார்த்தல் முதலிய வேலைகளைக் கற்கலாம்.

(7) School of Practical Commerce and Industry: உள் நாட்டிற்கு வேண்டிய தொழில்களும், வெளி நாட்டுத் தொழில்களும், அவற்றை விற்கும் வாணிபத் தந்திரங்களும், இந்த வாணிபத் தொழிற் கலாசாலையில் 4 ஆண்டுகள் கற்கின்றனர்.

(8) **உயர்தர வாணிபக் கலாசாலை** (School of Higher Commercial Studies) :— இங்கு 17-வயதிற்குட்பட்ட மாணவர்களைப் பரீட்சை செய்து சேர்த்துக் கொண்டு, இரண்டாண்டுகள் தரை, கப்பல், வியாபார நுட்பங்கள், அதற்

குரிய கணக்கு வழக்குகளெல்லாம் பயிற்றுகின்றனர். இவ்வாறு வியாபாரம், தொழில்களுக்காக மிகப் பல கலாசாலைகள் உள்ளன.

(*9*) **பாரிஸ் தொழில் முறைக் கலாசாலை** (Professional Schools, Paris): இதில் நகர வாழ்விற்கு வேண்டிய எல்லாத் தொழில்களும் பயிற்றுகின்றனர். இரும்புத்தொழில், மரத் தொழில், குலாலத்தொழில், எடுபிடி சாமான்கள் செய்தல், அச்சுத்தொழில், சிற்பம், துணிகளில் அச்சிடல், சாயம் போடல், அலங்காரத்தொழில், மில் தொழில் (Mill Industry), யந்திர நுட்பம் முதலிய பல தொழில்கள் பயிற்றுகின்றனர். இதிற் பயின்ற மாணவர் சுயேச்சையாகத் தொழிற்சாலை நடத்திப் பிழைக்க முடியும்.

(*10*) **பௌதிக ரஸாயனத் தொழிற்சாலை** (Physical and Chemical Industrial Institution): *16—19* வயதுள்ள மாணவரை மூன்றுண்டுகள் பயிற்றி, பௌதிக ரசாயனக் கலைகளால் ஆகும் தொழில்களில் நல்ல தேர்ச்சி பெறச் செய்து பட்டம் தருகிறது.

(*11*) **ரசாயனச் சாலை** (Chemical Institute): இங்குத் தொழில் விவசாயத்திற்கேற்ற ரசாயனப் பயிற்சி தருகிறார்கள்.

(*12*) Central Institute (Lyon): இதில் மிகவும் உயர்ந்த தொழிற் பயிற்சி தந்து, மாணவரை டாக்டர், எஞ்சிநீயர் பட்டங்களுக்குத் தகுதியாக்குகின்றனர்.

## நுண் கலை

(*1*) **உன்னத நுண்கலாசாலை** (Superior Institute of Fine Arts): *15-30* வயதுள்ள மாணவரைப் பரீட்சை பண்ணிச் சேர்த்துக் கொண்டு ஓவியம், சிற்பம், கட்டிடம், சிலைவெட்டு முதலிய எல்லா நுண்கலைகளையும் அவரவர் திறமைக்கேற்றபடி பயிற்றுகிறது.

(*2*) **அலங்காரக் கலாசாலை** (School of Decorative Arts): *13-20* வயதுள்ள ஆண்களுக்கும் *13-25* வயதுள்ள பெண்

களுக்கும், இங்கே எல்லாவிதமான அலங்காரக் கலைகளும் இனமாகப் பயிற்றுகின்றனர்.

(3) நுண்கலைப் பள்ளிக்கூடம் (School of Fine Arts): சிறந்த சித்திர சிற்பப் புலவரைத் தயாரிக்கிறது.

(4) நுண்கலைப் பள்ளி (Institute of Decorative Arts: இதில் அழகுக் கலைக்கு வேண்டிய பொருள்களெல்லாம் செய்யும் வகை கற்பிக்கின்றனர். ஊருக்குத் தக்க நுண்கலை பயிலலாம். ஒரு ஊரில் ஆடுகள் அதிகமானால், ஆங்குக் கம்பளத் தொழில் பயிற்றுவர்.

(5) சங்கீத நாடகக் கலாசாலை (School of Music and Declamation): இங்கே பரீட்சையின் மேல் சேர்த்துக் கொண்டு, மாணவருக்கு இனமாக வாய்ப்பாட்டு, வாத்தியப் பயிற்சி, நடனம், நாடகம், வேடம் கட்டல் முதலிய கலைகளைப் பயிற்றுகின்றனர்.

(6) French School of Athens: இங்கே கிரேக்க இலக்கணம், இலக்கியம், கலை, தத்துவம், சரித்திரம், சிற்பம், ஓவிய நுட்பங்களெல்லாம் 30 வயதிற்கு மேற்பட்ட புலவர்களுக்குக் கற்பிக்கின்றனர்.

(7) உரோமப் புதைபொருளாராய்ச்சிச் சாலை (School of Roman Archæology): மேற்சொன்ன கலாசாலை கிரேக்கக் கலை பயிற்றுவது போல இக்கலாசாலை ரோம் கலைகளைப் பயிற்றுகிறது.

இவற்றைத் தவிர ஆசியக் கலைகள் பயிலும் பள்ளிக்கூடங்களும் உள்ளன. உலகில் எங்கே எந்தக் கலைக்குப் பெருமையும் பயனும் உள்ளதோ, அதைத் தக்க புலவர் கற்கச் செய்து, அவரால் பிரெஞ்சுப் பிரஜைகளுக்கு அக்கலாஞானம் எய்தச் செய்கிறது குடியரசு.

## சுகாதாரம்

சுகாதார மந்திரியின் பார்வையில் சுகாதாரப் பள்ளிக்கூடங்களும், ஊமர் குருடர் பள்ளிக்கூடங்களும் நடக்கின்றன. ஊமருக்கும், குருடர்களுக்கும் எண்ணெழுத்துடன், பிழைக்க ஒரு தொழிலும் கற்பிக்கின்றனர்.

நீதி மந்திரியின் கீழ், போர்வீரர்களின் பிள்ளைகளும், ஏழை, அநாதைக் குழந்தைகளும், கவலையற்று உண்டுடுத்துக் கற்று ஆளாகப் பல பள்ளிக்கூடங்கள் நடக்கின்றன.

## கப்பல் கலாசாலைகள்

கடலிலாகா மந்திரியின் பாதுகாப்பில் பல கலாசாலைகள் நடக்கின்றன.

(1) Superior Marine Institute: இந்த உன்னதக் கடற் கலாசாலை, கப்பல் படையை நிர்வகிக்கும் தலைமை உத்தியோகஸ்தரைப் பயிற்றுகிறது.

(2) Naval Institute: இது கப்பல் வேலைக்கு மாணவரைத் தயாராக்குகிறது.

(3) கடல் எஞ்சிநீயர் கலாசாலை (Maritime Engineering Institute): கப்பல் கட்டுவது, நடத்துவது, பழுது பார்ப்பது முதலிய எல்லா நுட்பங்களையும் பயிற்றுகிறது.

(4) சிறுவர் கடற் பள்ளிக்கூடம் (School of Maritime-Pupils): இங்கே கப்பற் சேவகர் பிள்ளைகளும், அநாதைக் குழந்தைகளும், மற்றும் விரும்பிச் சேரும் குழந்தைகளும், கப்பற்படை, கப்பலோட்டல், கப்பல் செய்தல், பழுது பார்த்தல், முதலிய வகுப்புகளுக்குத் தயாராக்கப்படுகின்றனர். இது போலவே கப்பல் தொழில் பழகவும், கப்பல் படைப் பயிற்சிக்கும், கப்பல் சண்டைக்கு வேண்டிய ஆயுதப் பயிற்சிக்கும், ஆகாசக் கப்பல் பயிற்சிக்கும் கலாசாலைகள் உள்ளன.

(5) Institute of Ship-mechanism: கப்பல் யந்திர நுட்பங்களை இங்குப் பயிற்றுகின்றனர்.

கப்பற் பிரயாணம், ஒவ்வொரு நாடுகளின் தன்மை, விளைவு, தொழில், வியாபாரம், முதலியவற்றைப் புகட்டவும் பள்ளிக்கூடங்கள் உள்ளன.

இன்னும் தர்மஸ்தாபன மந்திரியின் பார்வையில் பல தர்மப் பள்ளிக்கூடங்கள் உள்ளன. 1917-ஆம் ஆண்டு ஜர்மன் போரில் ஆயிரக்கணக்கான பிரெஞ்சு வீரர் காயம்பட்டு,

கைகாலிழந்து வருந்தினுர்களல்லவா? அவர்களுக்கென்று உணவுடை இருக்கை சௌகரியங்களைத் தந்து, கல்வியும் தொழிலும் கற்பிக்கத் தருமப் பள்ளிக்கூடங்கள் உள்ளன. அப்படிப்பட்ட வீரர் குழந்தைகளுக்குத் தனியாக ராணுவப் பள்ளிக்கூடங்கள் உள்ளன.

## சுரங்கக் கலாசாலை

பொதுப் பணி மந்திரியின் பார்வையில், பாலம் போடுதல், பாதை போடுதல், சுரங்க வேலை, சுரங்க நிர்வாகம் முதலியவற்றிற்குப் பயிற்சிச் சாலைகள் உள்ளன. உலகில் எந்த நாட்டில் என்ன உலோகம் கிடைக்கும்—தங்கம், வெள்ளி, வைரம், செம்பு, ஈயம், நிலக்கரி, மண்ணெண்ணெய் முதலிய பயனுள்ள கனிப்பொருள்கள் எங்குக் கிடைக்கும்—அவற்றை எவ்வாறு அடைவது என்றெல்லாம் சுரங்கப் பள்ளிக்கூட (National Institute of Mines) மாணவர் நன்கறிவர்.

மேற்சொன்னவை யெல்லாம் குடியரசு மந்திரிகளின் பார்வையில் நடக்கின்றன. இவற்றைத் தவிர தேசாபிமானிகள், கலாபிமானிகள், அருந்தொழிற் புலவர்கள் தனிமுயற்சியால் கணக்கற்ற கலாசாலைகள் நடக்கின்றன. விவசாயம், வைத்தியம், கலைகள், அனுபவ பௌதிக, ரசாயன, தாவர, தேகசாத்திரங்கள் (Practical Sciences), சமூக சாத்திரம் (Social Science), தத்துவம், சொற்புலமை, கவிதை, பத்திரிகை, இலக்கியம், பொருளாதாரம், அரசியல், சரித்திரம், சிலாசாசனம், சிற்பம், மின்சாரக் கலை, பஞ்சலோகத் தொழில்கள், யந்திர வித்தை, எஞ்சினீரிங், ஆகாசக் கப்பல் செய்தல், நடத்தல், சங்கீதம், நடனம், சமயக் கல்வி முதலிய பல பயனுள்ள அறிவைப் புகட்டும் பள்ளிக்கூடங்கள் ஆங்காங்குள்ளன. அவற்றின் தகுதி பார்த்துக் குடியரசு பணவுதவி செய்கிறது.

போதும்! ஜாப்தா பெருகிவிட்டது! இம்மாதிரியே ஒவ்வொரு ஐரோப்பிய, அமெரிக்க நாடும், தன் குடிகளுக்கு முறையான அறிவும் தொழிலும் அளிக்கிறது! மூளை, மனம்,

பொறி, புலன்கள், உடல், எல்லாம் ஒருங்கே வளர்ச்சி பெற்றுச் சமுதாயத்திற்குப் பயனுகும்படியான கல்வி கற்பிக்கின்றனர் மேனுட்டில். அதனுல்தான் அங்கு உலகை வென்று ஆளக்கூடிய சூரர்கள் நிரம்பியிருக்கின்றனர்! வென்ருளும் ஆசையுடன் கொன்ருளும் வெறியும் கலந்திருப்பது கொடுமைதான்! பசுப்போல சாதுவாயிருக்க அங்கு வாலிபர் பயிற்சி பெறவில்லை; புலிபோலே, வேங்கைபோலே, சிம்மம் போலே பாய்ந்து, அறிவாலும், கலையாலும், ஆற்றலாலும், வீரத்தாலும், ஆயுதத் திறனுலும் உலகை வெல்லவே பயிற்சி பெறுகின்றனர். ஒவ்வொரு கலைக்கும் எண்ணிறந்த ஆராய்ச்சிக் கூடங்கள், சாத்திரங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் கண்டால் யாரும் திகைத்துப்போவர். அவற்றை மொழிபெயர்க்கக்கூட நம்மவர் வார்த்தை கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது! எவ்வளவு சிறப்புச் சொற்கள் புதிதாகக் கோத்தாலும் ஐரோப்பிய சாத்திரங்கள் முற்றிலும் மொழிபெயர்க்க முடியுமென்று தோன்றவில்லை. ஏதோ சாத்திரங்களின் தன்மையறிய ஆரம்ப நூல்கள் எழுதலாமேயொழிய, ஆழ்ந்து கற்று அனுபவத்திற்குக் கொண்டுவர வேண்டுமானுல், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜர்மன், இம்மூன்றில் ஒரு மொழியைப் பயின்றே தீரவேண்டும்; வேறு வழியில்லை.

ஆனுல், இவ்வளவு அற்புதமாக வகுக்கப்பெற்ற கல்வி, தொழிற் பயிற்சிகளெல்லாம் மாந்தரைப் போர் முனைக்கே நடத்துகின்றன. ஏன், ஐரோப்பாவின் நிலைமை போர்ப் பயிற்சி வேண்டுகிறது. புலிக்காட்டில் வசிப்பவனுக்குத் துப்பாக்கி வேண்டியதுதானே. அடுத்த வீட்டுக்காரன் ராவணனுனுல், இந்த வீட்டில் ஒரு கோதண்டபாணி வேண்டியவனுகத்தானிருக்கிருன்! A - முஸோலினியானுல், B-ஹிட்லராகவும், C-நெப்போலியனுகவும், D-அலெக்சாந்தராகவும் ஆகின்றனர்! A நூறுபேரைத் தீர்க்கும் குண்டு கண்டுபிடித்தால், B ஆயிரம் பேரைத் தீர்க்கும் குண்டு கண்டுபிடிக்கிருன். வாழ்வின் அடிப்படையில் அருளுணர்ச்சி யில்லாததால், அத்யாத்ம ஞானமில்லாததால், மனிதனிடமுள்ள

அரக்கன் அகங்கரித்தெழுகின்ருன். பாரதநாட்டின் அத்யாத்ம ஞானமே அந்த அரக்கனைத் திருத்த வல்லது. இனிப் பெண் கல்வியைப் பார்ப்போம். ஜப்பானை அதற்கு உதாரணமாக எடுத்துக்கொள்வோம்.

# 18. ஜப்பானில் பெண்கல்வி

ஐரோப்பியர் கல்வி பௌதிக—வாணிப—போர்க் கல்வி (Scientific—Commercial and War Culture) என்னலாம். சமயமும் கடவுளும் பாட முறையினின்று விலக்கு; அமெரிக்காவில் பைபிள் பாட்டுகளுடன் வகுப்புத் தொடங்குகின்றனர்; ஜர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம் முதலிய நாடுகளில் பள்ளிக்கூடத்திற்கு வெளியே பாதிரிகளால் பைபிள் உபதேசம் நடக்கிறது. நாட்டிற்கு உயிர் தரும் வீரரையே மேனுடுகள் விரும்புகின்றன. ரஷ்யா, சமயம் கடவுள் என்ற பேச்செல்லாம் கஞ்சா, அபின், மதுபோன்று பாமரஜனங்களை மயக்கும் அபத்தப் பேச்சுகள் என்கிறது. மேனுட்டில் வரவரப் போருணர்வும், போர்க் கல்வியுமே வளர்கின்றன. ஆண்களைப்போலவே பெண்களும் போர்வெறி கொள்கின்றனர். கணவருக்கு அன்பாக ஊட்டி, இல்லறங் காத்து, நன்மக்களை வளர்க்கும் மென்கரங்கள், அருளூற்றுன பெண் மனங்கள், துப்பாக்கி யேந்திப் போர்முனை சென்று இரத்தம் வடிக்கப் புகுந்துள்ளன! ஐரோப்பாவில் பெண்களுக்குத் தரும் கல்வி நமது நாட்டிற்கு ஒருபோதும் ஒத்துவராது. ஆதலால், நமது ஆசியாவிற் சிறந்து விளங்கும் சாம்ராஜ்யமான ஜப்பானைக் காண்போம்.

மேனுடு உலகை ஆளும் இரகசியம் ஜப்பானுக்குத் தெரியும். ஜப்பானியர் மேனுட்டுக் கலைகளைக் கற்று, அறிவு, தொழில்,வாணிபம், பொருளாதாரம், அரசியல் அனைத்திலும் உலகம் மதிக்கும்படியான புகழ் பெற்றிருக்கின்றனர். எனினும், ஜப்பானியர் ஜப்பானியராகவே யிருக்கிறுர்கள்; ஆங்கிலம் கற்றுலும் தாய்மொழியையே முதன்மையாகப் போற்றுகின்றனர். ஐரோப்பியக் கலைகளைத் தாய்மொழியிலேயே

கற்கின்றனர். தமக்குரிய சமயவொழுக்கங்களையும், தேசீய ஐதிகங்களையும் ஐப்பானியர் கருத்துடன் பாதுகாக்கின்றனர். ஐப்பானில் எழுதப் படிக்கத் தெரியாதவரைக் காண்பதரிது. குப்பைகூட்டி கூடப் பத்திரிகை படித்து, தினசரிச் செய்தியைச் சொல்லுவான். அடிமைப்படாது, அந்நியக் கலையின் நலத்தைத் தனதாக்கி, தனது நாகரிகக் கொடி வானளாவச் செய்த பெருமையே ஐப்பானின் முன்னேற்றத்திற்குக் காரணம். நாட்டிற்கேற்ற ஆண் சிங்கங்களைப் பள்ளிக்கூடத்தில் தயாரிப்பது போலவே, வீட்டிற்கேற்ற வீர மனைவியரையும் ஐப்பானியர் பள்ளிக்கூடத்திற் பயிற்றுகின்றனர். தோகியோ மகளிர் சர்வகலாசாலையின் அமைப்பு நடப்பு விவரங்களை இங்குத் தருகிறேன்.

---

# 19. ஜினோ நருசு

1875-ல், ஜினே நருசு (Jino Narusu) என்னும் அறிவாளி, கோப் (Kobe) நகர ஓட்டலில் தங்கியிருந்தான்; இரவு மாடியில் பாட்டும், நடனமும், கேளிக்கையும் அமளிபடுகின்றன. கீழேயுள்ள வீர இளைஞன் சிந்தையில் ஆழ்ந்திருக்கிறான்:— ''ஆ! நம் சமுதாயப் பெண்டிர் எவ்வளவு கேவலமான நிலையிலிருக்கின்றர்! பெண்மையின் நாணமெங்கே! மானமெங்கே! கல்வியறிவில்லாததனாலன்றோ இப்படி நம்பெண்டிர் மடமையிருளில் ஆழ்ந்தனர்! மேனாடுகளிற் பெண்கள் கல்வியறிவில் முன்னேறிச் சமவுரிமை கொண்டு வாழுகின்றனர். ஏன் நம் பெண்களையும் அவ்வாறு முன்னேற்றக்கூடாது? ஆம்! எனது வாழ்வைப் பெண்கல்விக்காகவே அர்ப்பணம் செய்கிறேன்!'' என்று சிந்தித்து உறுதி பூண்டான் நருசு.

இடர்கள் பல; அதைரியப்படவில்லை; 1876-ல் நண்பர் சிலர் துணையால், ஒசாகாவில் ஒரு பெண் பாடசாலையை நிலைநாட்டினான் நருசு; தானே அதன் தலைவனாயிருந்து கல்வி புகட்டினான்; அந்தப் பள்ளிக்கூடத்தை நன்கு நிலைநாட்டி, தக்க ஆசிரியரிடம் விடுத்து, நிகாடா என்னும் ஊரில் மற்றொரு பெண் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தி நடத்தினான்; ஊருக்கு ஊர் சென்று, பெண்கள் கல்வியின் அவசியத்தைப் பிரசாரஞ் செய்து, நண்பரைக்கொண்டு ஆங்காங்குப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தச் செய்தான். பெண்கல்விக்கு எதிர்ப்புகள் பலமாயிருந்தன. சுதேச தருமத்திற் பற்றுள்ளவர்கள் ஐரோப்பிய முறையிற் பெண்களுக்குக் கல்வி தருவதை ஆட்சேபித்தனர். ''ஆண்களே மேனாட்டுக் கல்வி கற்று, சுதேச தருமத்தை யிழந்துவருகிறார்களென்றால், பெண்களுமா அப்படிக் கெடவேண்டும்? அவர்களாலேதான் நம்

பழைய பழக்க வழக்கங்கள் சிறிது ஒட்டிக்கொண்டிருக்கின்றன. பௌத்தப் பெரியார் வகுத்த ஆசார சீலங்களெல்லாம் அந்நியக் கல்வி முறையால் பாழாகி வருகின்றன. சீ, இது கூடாது! பெண்கள் குலதருமத்தை வளர்க்க உண்மையான பத்தினிகளாயிருக்கவேண்டும். நம் பழைய ஐதிகம், ஆசாரம், அனுஷ்டானங்களைப் பாழ்படுத்தக்கூடாது; பெண்களுக்கு எழுதப் படிக்கவும், வீட்டுவேலை பார்க்கவும் தெரிந்தால் போதும். ஆண்களைப் போல அவர்களுக்குக் கல்லூரிப் படிப்பு வேண்டா,'' என்று மாமூல் பேர்வழிகள் பலமாகக் கட்சிகட்டி ஆட்சேபித்தார்கள்.

''ஐயா, நான் உம் பழைய நன்மைகளை அழிக்க விரும்பவில்லை; மேனாடு எல்லா வழிகளிலும் முன்னேற்றமடைந்து வருகிறது. மேனாட்டாரைக் கண்டால் உலகில் மதிக்கின்றனர். அவர்களுக்கு உலகை வென்று ஆளும் சக்தியுள்ளது. அந்தச் சக்தி எதனால் வந்தது? திறமான கல்வி, தொழிலறிவாலல்லவா மேனாட்டார் இவ்வளவு மேன்மை பெற்றனர்? அவர்களிடமிருக்கும் நன்மைகளையும், அவர்களைச் சிறப்பிக்கும் தன்மைகளையும் நாமும் பயில்வோம். நமது பழைய நாகரிகத்தால் வரும் பக்தி, சிரத்தை, ஒழுக்கம், சமயப்பற்று முதலியவற்றையும் காப்பாற்றுவோம். மேனாட்டுப் படிப்பினால் நாம் மேனாட்டாராகப் போவதில்லை. நாம் ஜப்பானியராகவேயிருப்போம்; மற்ற நாடுகளுக்கிடையே ஒரு கௌரவமான ஸ்தானத்தை வகிக்கும் வீர ஜப்பானியராயிருப்போம். மேனாட்டு லௌகிக ஞானத்தால் வாழ்வை விரிவாக்குவோம். நமது பழைய ஆத்மிக ஒழுக்கங்களால் வாழ்வைப் புனிதமாக்குவோம். உலகில் முன்னேறும் நாடுகளுக்கு முன்னணியிலிருப்போம். அதுவே எனது விருப்பம், கல்வி, தொழில், ஒழுக்கம், வீரம்,—இவற்றாலேதான் நாடு சிறந்து விளங்கும். நமது நாடு மேலோங்க வேண்டுமானால், நமக்கு வீரதீரர்களான சந்ததிகள் வேண்டுமானால், நமது பெண்களுக்கு நல்லறிவும், உயர்ந்த எண்ணங்களும் புகட்ட வேண்டும். அவர்களே குழந்தைகளை வளர்க்கும் காமதேனுக்கள். மேனாட்டுக் கலையை நம்மதாக்கி, சுதேச தருமங்களுடன் பெண்கல்வி பரப்புவோம்.

காலத்தோடொத்து வாழுவோம்'' என்று நருசு சமாதானம் சொல்லவே, எதிர்ப்புகள் சிறிது அடங்கின.

1890-ல் நருசு அமெரிக்காவிற்குச் சென்ருர்; மூன்ருண்டு கள் அங்கிருந்து, அங்குத் தரும் பெண் கல்வி முறையைப் பயின்று, பெரிய எண்ணங்களுடன் தாய்நாட்டிற்குத் திரும்பினுர். சில மாதங்கள் ஒசாகாப் பள்ளிக்கூடத் தலைமை பூண்டார். தம் கொள்கைகளை அங்கு நிறைவேற்ற முடியவில்லை. 1895-ல் 'பெண் கல்வி' என்ற ஓர் அரிய நூலை வெளியிட்டார். அதில் தம் கல்வி யனுபவங்களையும் மேனுட்டில் பெண் கல்வி முன்னேற்றத்தையும், ஐப்பானியருக்கேற்ற பெண் கல்வி முறையையும், பெண்களுக்கு உயர்தரக் கல்வியின் அவசியத்தையும் தெளிவாக்கினுர். பெண்களுக்காக ஒரு சர்வகலாசாலையை சிருட்டிக்கவேண்டு மென்று உறுதி பூண்டார். தம் கொள்கைகளை நாடெங்கும் பிரசாரஞ் செய்தார்.

''நாட்டிற் பாதி பெண்கள்; நம் கண்களில் ஒன்று குருடாயிருக்க விரும்புவோமா? உத்தமத் தாய்களாலேதான் உத்தம மைந்தர் உண்டாவர். எதிரிகள் சில நொண்டிச் சாக்குச் சொல்லுகின்றனர்:—'உயர்ந்த கல்வி கற்ருல், செருக்கும் தன் மதிப்பும் அதிகமாகிப் பெண்டிர் கணவருக்கு வணங்க மாட்டார்கள்; பெண்பாலுக்குள்ள அச்சம், நாணம், மடமை பயிர்ப்பு என்னுங் குணங்களை இழந்து, கட்டுக்கடங்காமல் திரிவர்; மென்மை யிழப்பர்; கலியாணம் செய்துகொண்டு ஒரு கணவனுக்கு அடங்கி வாழக் கருதாமல், தான்ருேன்றிகளாவர்; ஒழுங்கான் குல தருமம் போய்விடும். கற்புள்ள பெண்கள் அரியராவர். அதிகப் படிப்பால் பெண்கள் உடல்நலம் கெடும்; நல்ல சந்ததிகள் உண்டாகா; நாட்டிற்குப் பெரிய நஷ்டமாகும். பெண்கள் பெண்மை யிழப்பர்; ஆண்களுடன் எல்லாத் துறைகளிலும் போட்டி போடுவர்' என்றெல்லாம் சிலர் பலமாக வாதாடிக் காரியத்திற்குத் தடை செய்கிருர்கள். அவர்கள் பெண்களைச் சமைக்கவும், குழந்தை பெறவுமே தக்க ஒரு கருவியாக எண்ணுகிருர்கள்.

''கல்வியால் பெண்ணின் பெருமை பெரிதாகும்; பெண் ஆணுக்கு வாழ்வுத் துணை; மனைக்கரசி; நாட்டிற்கு நன்

மக்களைத் தரும் தாய். பெண் ஆணின் அடிமையல்லள்;வீட்டிலேயே சிறைப்பட்டிருக்கும் உணர்வற்ற பொம்மையல்லள். ஆணைப்போலவே பெண்ணும் அறிவு, ஆற்றல், உணர்வு, திறமை பெறவேண்டும். தற்போது பெண்களை அடிமைபோல் நடத்தும் சமூகக் கொடுமையை நாங்கள் எதிர்க்கிறோம். ஆண்களைப்போலவே பெண்களும் தம் அறிவாற்றல்களை விசாலப் படுத்த வேண்டுமென்கிறோம்; பெண்கள் தங்கள் பெருமையையுணர்ந்து தலை நிமிரவேண்டும்; வீட்டிற்கும், நாட்டிற்கும், உலகிற்கும் நற்பயனுள்ள பிரஜைகளாக வேண்டும். அவர்களுக்கும் மூளை மனம், இதயம், உடல், நரம்புகள் உள்ளன. அவையெல்லாம், பூரண வளர்ச்சி பெறவேண்டும். மேனாட்டின் முன்னேற்றத்திற்குக் காரணமான நன்மைகளை நாமும் நமது நாட்டின் முன்னேற்றத்திற்காகச் செய்யவேண்டும். உலகின்முன் நமது ஜப்பான் தலைநிமிர்ந்து நிற்கவேண்டும். நாங்கள் வகுத்த கல்வி முறையால் பெண்கள் குலதருமத்தை யிழக்க மாட்டார்கள்; மனையறத்தில் இன்னும் சிறந்து விளங்குவார்கள். நாகரிக வுலகம் போற்றும் படியான கலை வளர்ச்சியை அவர்களுக்குத் தருகிறோம்; அவர்கள் நல்ல பத்தினிகளாகவும், தாய்மார்களாகவும், மனையரசியராகவும் விளங்கத்தக்க இல்லற வொழுக்கங்களையும், குலதருமத்தையும், குழந்தைகளை வளர்க்கும் விதத்தையும் கலாசாலையிலேயே புகட்டுகிறோம். கலாசாலை வாழ்வையே ஓர் ஒற்றுமையான குடும்ப வாழ்வு போலாக்கியிருக்கிறோம். அங்குப் பெண்களுக்குச் சிறப்பான எல்லாப் பயிற்சிகளையும் அவர்கள் பெறுவார்கள். அத்துடன் நமது நாட்டிற்குரிய தருமங்களையும், நல்ல பழக்க வழக்கங்களையும், சமய வுணர்வையும் அவர்களுக்குக் கருத்துடன் பயிற்றுகிறோம்; வாழ்வுப் போருக்கு அவர்களைத் தயார் செய்கிறோம். வீட்டை மட்டு மன்று; தங்கள் அறிவாற்றலால் நாட்டைப் பெருமைப்படுத்தும் திறமையும் அவர்களுக் கெய்தும். வீட்டுப் பொறுப்பை நன்கு நிர்வகிப்பதுடன், நாட்டின் நன்மையும் அவர்கள் உள்ளத்தில் துடிக்கும். மனித சமுதாயத்திற்குத் தாங்கள் செய்ய வேண்டிய கடமையை அவர்

கள் நிறைவேற்றுவர்; உலகமறிந்து, காலத்திற்கேற்ற செயலறிந்து, மனையைப் பாதுகாப்பர். மனித சமுதாயத்தின் முன்னேற்றத்தில் அவர்களும் பங்கு கொள்வர். ஆதலால் பெண்களுக்கு உயர்ந்த கல்வியறிவுதர நாமெல்லாரும் ஒத்துழைப்போம்.''

நருசும் அவர் நண்பரும் ஜப்பானில் சுற்றுப் பிரயாணம் செய்து, இவ்வாறு பெண் கல்வியின் அவசியத்தை விளக்கவே, நாட்டில் ஒரு புதிய வுணர்ச்சி பிறந்தது. 1904-ல் ரஷ்ய ஜப்பானியப் போரால் நாடெங்கும் பணமுடையும், வியாபார மந்தமும் ஏற்பட்டிருந்தன. எனினும், மனோதைரியத்துடன் நருசு தோகியோவில் சர்வகலாசாலை ஆரம்பித்தார்.

# 20. தோகியோச் சர்வகலாசாலை

சுமார் 16,108 சுபோ (Tsubo) நிலத்தில் தோகியோச் சர்வகலாசாலை விளங்குகிறது. இடம் நகரச் சந்தடியினின்று விலகி, நல்ல காற்று உலவும் மலைப்பாங்கில் அமைந்துள்ளது. அருகே மலையருவி பாய்கிறது; அழகான மலர் வனங்கள் உள்ளன. செர்ரி (Cherry) மாபிள் (Maple) மரங்கள் ஏராளம். அத்துடன் மாணவிகள் முயற்சியால் விசாலமான மலர் வனங்களும், கனி மரங்களும், காய்கறித் தோட்டங்களும் ஏற்பட்டுக் கலாசாலைக்கு நல்ல வருமானமளிக்கின்றன. கலை வளர்ச்சிக்கும், பயிற்சிக்கும் வேண்டிய எல்லாச் சௌகரியங்களும், இந்த நிலத்திலேயே அமைந்திருக்கின்றன. குழந்தைப் பள்ளிக்கூடம் (Kindergarten), ஆரம்பப் பள்ளிக்கூடம் (Primary School), உயர் பள்ளிக்கூடம் (High School) முதலிய கல்லூரிகளின் கட்டிடங்கள் அழகாக அமைந்துள்ளன. மாணவர் விடுதிகளும், ஆசிரியர்களுக்கு வீடுகளும் ஆங்கே அமைந்துள்ளன. பெரிய புத்தகசாலை, பிரசங்கக் கூடங்கள், ரசாயனச்சாலை (Chemical Hall), ரசாயனப் பயிற்சிக்கூடம் (Chemical Laboratory), பௌதிகச்சாலை (Physical Science Laboratory), உயிர் நூற்சாலை (Zoological Laboratory), செடி நூற்சாலை (Botanical Hall), இயல் நூற்சாலை (Nature Study Hall), கணக்கு, பூகோளம், ஆங்கிலம், ஜப்பானியம் முதலிய பாடங்களுக்குத் தனித் தனிக் கட்டிடங்கள். சுகாதாரப் பயிற்சி, சமயப் பயிற்சி, தையல், பின்னல், பூவலங்காரம், தேயிலைச் சடங்கு (Tea Ceremony), ஜப்பானிய நாகரிகப் பயிற்சி, உடற் பயிற்சி, மண் வேலை, வயல் வேலை, தோட்ட வேலை முதலியவற்றிற்கெல்லாம் தனி இடங்கள் உள்ளன. சாப்பாட்டு விடுதிகள் மாணவிகளாலேயே முற்றும் நிர்வகிக்-

கப்படுகின்றன. அதற்கு வேண்டிய காய்கறித் தோட்டமும் மாணவிகளாலேயே பயிரிடப்படுகிறது. உண்ண, உடுக்க, படிக்க வேண்டிய சாமான்களெல்லாம் அங்கேயே கிடைக்கும். அதற்காக ஒரு பெரிய கூட்டுறவுச்சாலை (Co-operative Stores) மாணவரால் நடத்தப்படுகிறது. மாணவர் பணங்களைப் போட்டுவைக்க ஒரு கூட்டுறவு பாங்கி (Co-operative Bank) உள்ளது. பாலுக்காக ஒரு பசுமடம் தனியாயிருக்கிறது. அதைச் சார்ந்து ஒரு பால்பண்ணையும் உள்ளது.

## பாடங்கள்

இக்கலாசாலையின் நிர்வாகிகள் பெண்களுக்குத் திறமையான கல்விப் பயிற்சி தருகிறார்கள்; உயர்ந்த சம்பளமும் சௌகரியங்களும் கொடுத்துத் தகுந்த உபாத்தியாயர்களை நியமித்துள்ளனர். தொடக்கத்தில் 15 உயர் பள்ளிக்கூடங்களே இச்சர்வகலாசாலையைச் சார்ந்திருந்தன. இப்போது 200-க்கு மேற்பட்ட உயர் பள்ளிக்கூடங்கள் இதன் பார்வையில் உள்ளன.

மானத நூல் (Psychology), அற வழி (Ethics), பௌத்த கொன்பூசிய மதங்கள், ஜப்பானிய இலக்கண இலக்கியங்கள், ஜப்பானியக் கவிதை, ஜப்பானிய சரித்திரம், பூகோளம், ஜப்பானியச் சித்திர சிற்பக் கலைகள் முதலியன, சீன இலக்கண இலக்கியங்கள், ஆங்கில இலக்கண இலக்கியங்கள் (ஜப்பான் மொழி முதன்மை; அடுத்தது ஆங்கிலம்); பூத-பௌதிக, பூகோள, நில, வான, ரசாயன, தாவர, ஜீவ மானிட சாத்திரங்கள் (Physics, Geography, Geology, Astronomy, Chemistry, Botany, Zoology, Physiology etc.), சுகாதார சாத்திரம், வைத்தியம், ரசாயனத் தொழில்கள், கணக்கு, பொருளாதாரம், வீட்டுநிர்வாகம், சமையல், மலரணி, பிள்ளை வளர்த்தல், மருத்துவம், உலக நாகரிகம், உலக சரித்திரம், தோட்டக் கலை, தேனீ வளர்த்தல், ஆடு மாடு கோழி முதலிய பிராணிகளை வளர்த்தல், ஐரோப்பியக் கலை விளக்கம், உபாத்திமை, சுதேச சங்கீதம், பிடில் பியானோ கின்னரம் முதலிய வாத்திய கீதங்கள்—இவையெல்லாம் கலாசாலையில்

T
N60

எளிய இனிய முறையில் கற்பிக்கப்படுகின்றன. பெரும்பாலும் அமெரிக்கக் கல்வி முறையைத் தழுவியே பாடங்கள் நடக்கின்றன.

இக்கலாசாலையின் விசேஷம் என்னவென்ருல் மாணவிகளும், உபாத்தியாயர்களும் ஒற்றுமையாக அதை நிர்வகிப்பதே. இங்குப் பெண்கள் உயர்ந்த கல்வி கற்பதுடன், கற்ற வழி நின்று பயன் பெறலாம். நம் நாட்டில் ஒரு மாணவன் ரசாயனத்தில் பி. ஏ. பட்டம் பெற்று வருகிருன். வீட்டுக்கு ஒரு தீக்குச்சி செய்யக்கூடத் தெரிவதில்லே. வெறும் புத்தகப் பூச்சியாயில்லாமல், ஜப்பானிய மாணவர், ரசாயனம் கற்கும் போதே அதைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய தொழில் களேயும் கற்கின்றனர். நமது நாட்டில் கல்லூரியினின்று வெளிவரும் மாணவர் எல்லேயற்ற வாழ்வுலகைக் கண்டு மலேத்து நிற்கின்றனர். ஜப்பானிய மாணவ மாணவிகள் வாழ்வுலகில் தலே நிமிர்ந்து, செல்வக் கரம் வீசி நடக்கின்றனர். ஏனெனில் படிப்பும், தொழிலும், நடத்தையும், வாழ்வும் கல்விப் பயிற்சியில் இணேக்கப்பெற்றுள்ளன. இக்கலாசாலேயில் பரீட்சைக்காகவும், வெகுமதிக்காகவுமே மாணவர் கற்பதில்லே. இங்கு யாருக்கும் பரீட்சை தேறியதற்காக வெகுமதியளிப்பதில்லே. அறிவாற்றல்களிற் சிறந்து, நாட்டைச் சிறப்பிக்கவே இங்கு அனுபவக் கல்வி பயில்கின்றனர். நீதி நெறியைக் கற்பது மட்டுமின்றி, அதன்படி வாழுகின்றனர். தேசீய நாகரிக சரித்திரத்தைப் படிப்பதுடன், பயிலுகின்றனர். அதற்காகப் பல சந்தர்ப்பங்கள் மாணவிகளுக்கு உள்ளன. மாணவருக்கும், உபாத்தியாயருக்கும் நல்ல ஒற்றுமையுள்ளது. தேசாவேச மின்சாரத்திற்குப் பள்ளிக்கூடங்களே மின்பொறிகளாயிருக்கின்றன.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 106213
EGMORE, MADRAS-600 008

# 21. கல்வி முறை

பிள்ளைகள் மூன்று வயதில் படிக்கத் தொடங்குகின்றனர். முதலில் குழந்தைப் பள்ளிக்கூடத்தில் (Kindergarten)சேர்ந்து 5 வயது மட்டும் விளையாட்டாகவே, எண் எழுத்து, தாய் மொழியிற் சம்பாஷணை, பாட்டு, இயற்கைப் பொருட்பாடம், சிறு சிறு தொழில்கள், உடற்பயிற்சி, கதைகள் எல்லாம் கற்கின்றனர். குழந்தைப் படிப்பானதும் மூலாதாரப் பள்ளிக் கூடத்தில் மாணவிகள் சேருகின்றனர். அங்கே அறவழி, ஐப்பான் பாஷை, கணக்கு, ஐப்பான் சரித்திரம், பூகோளம், பௌதிகம் (Physics), ஓவியம் (Painting), பாட்டு, தொழிற் பயிற்சி இவ்வளவும் ஆறு ஆண்டுகள் பயிலுகின்றனர். இப் பயிற்சியானதும், மேலே படிக்க விரும்பாது ஜீவனோபாயந் தேடுவோர், தொழிற்பள்ளிக்கூடத்திற் சேர்ந்து, விருப்பத்திற் கேற்ற தொழிற் பயிற்சி பெறுகின்றனர். கலை வளர்க்கவே விரும்பும் மாணவிகள் உயர் பள்ளிக்கூடத்தில் ஐந்தாண்டுகள் பயிலுகின்றர். இங்கே சன்மார்க்கம், ஐப்பானிய இலக்கியம், கவிதை, ஆங்கிலம், சரித்திரம், பூகோளம், கணக்கு பௌதிக ரசாயன சாத்திரங்கள், வீட்டுக் கலை (Domestic Science), சித்திரம், பாட்டு, உடற்பயிற்சி முதலியன கற்றுத் தேர்ச்சி பெறலாம். பிறகு பிரவேச வகுப்பு (Preparatory Course equal to our Intermediate) களில்சேர்ந்து அறநெறி, ஐப்பானிய, சீன இலக்கியங்கள், ஆங்கில இலக்கியம், ஐரோப்பிய சரித்திரம், ரசாயனம், வான சாத்திரம், பூமி சாத்திரம், இயற் கணிதம் (Algebra), உடற் பயிற்சி முதலியன விரிவாகக் கற்கின்றனர். இவற்றில் தேர்ந்த மாணவர் கல்லூரி வகுப்புகளிற் சேருகின்றனர்.

கல்லூரியில் மாணவர் இயல்பிற் கேற்ற புலமை வளர்த்துத் தம்மை வாழ்விற்குத் தயாராக்கிக் கொள்ளுகின்றனர். வீட்டு நிர்வாகம், அறவழி, தத்துவம், ஆங்கிலம், உடற் பயிற்சி, இலக்கியம் இவற்றை அனைவரும் கற்கின்றனர். அத்துடன் சிறப்பாக உடலறிவு (Physiology), சுகாதாரம் (Hygiene), அனுபவ பௌதிக, ரசாயனம் (Applied Physics and Chemistry), அழகுக் கலைகள், ஆங்கில-ஜப்பானிய இலக்கியம், ஐரோப்பிய சரித்திரம், நாட்டுச் சட்டம் (Civil Law) விவசாயம், தோட்டப் பயிற்சி, நுண்கலைகள் (Fine Arts), சீன இலக்கியம், சங்கீதம், சிற்பம், சித்திரம், மருத்துவம், கணிதம், தாவரம், உயிர் நூல், தாதுநூல் (Mineralogy) முதலியவற்றில் 3 ஆண்டுகள் ஆழ்ந்த பயிற்சி பெறுகின்றனர்.

இவ்வாறு கலைப் பயிற்சியளிப்பதுடன், மாணவிகளுக்கு ஒழுக்கமும், கூட்டுறவுடன் வாழும் பழக்கமும், வீட்டு நிர்வாகமும், நாட்டன்பும் பயிற்றுகின்றனர். சர்வகலாசாலை மாணவிகள் கூட்டமே ஒரு சுயாட்சிச் சங்கமாயிருக்கிறது.

---

# ௨௨. சபைகள்

**மா**ணவருக்கு ஒழுக்கமும் நன்னடத்தையும் பயிற்றப் பல சபைகள் உள்ளன. இவற்றில் ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்துழைக்கின்றனர்.

(*1*) **நன்னெறிச் சபை** (The Moral tendency Committee): இது மாணவிகளின் ஆசாரம், சீலம், அனுஷ்டானம், ஒழுக்கம், நன்னடையுடை பாவனைகளைக் கவனித்துத் திருத்துகிறது. ஒரு மாணவியை மற்றொருத்தி பொருமையால் அவமதித்தால், உடனே இச்சங்கத்தார் இருவரையும் அழைத்து நேசமுண்டாக்குவர். படிக்க வேண்டிய நேரத்தில் ஒரு மாணவி வீண்வம்பு பேசினல், உடனே இச்சங்கத்தார் கவனிப்பர். ஒவ்வொரு வகுப்பிலும் இச்சங்கப் பிரதிநிதிகள் உண்டு.

(*2*) **கூட்டச் சபை** (Meetings Committee): இது மாணவர் கூட்டங்களைக் கூட்டி நடத்தி, அதனல் அவர்கள் பல வழிகளிற் பயன்பெறச் செய்யும். ஒரு தேசீய நாளைக் (National Day) கொண்டாட வேண்டுமென்று வைத்துக்கொள்வோம். இச்சபைக்கு அறிவித்தால் போதும். அன்று மாலையே கலாசாலை முழுதும் பிரசங்க சபையிற் கூடிவிடும்.

(*3*) **ஆராய்ச்சிச் சபை** (Experiment Committee): இச்சபை மாணவர் கற்றவழி நிற்கச் செய்யும். பிற்காலம் பெண்களுக்குரிய வீட்டு நிர்வாகங்களைப் பயிற்றும். உதாரணமாக, ரசாயனம் கற்கும் மாணவிகள் பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய பல நிற மைகள், வர்ணங்கள், சாயங்கள், பற்பொடி, தீக்குச்சி, உலோகங்களைச் சுத்தம் செய்யும் சாதனங்கள், சோப்பு முதலியவற்றைத் தயாரிக்க இச்சபை உற்சாகப்படுத்தும். மாணவிகள் ஆராய்ச்சிகளுக்கு ரசாயனசாலையில் ஏராளமான

சௌகரியங்கள் உள்ளன. மாணவிகள் மதிநுட்பத்தால் புதிதாக ஏதாயினும் கண்டுபிடித்தால், இச்சபை அதை மெச்சி விளம்பரப்படுத்தும்.

(4) **உடற்பயிற்சிச் சபை** (Gymnastic Committee): ஒவ்வொரு மாணவியும் ஏதாவதொரு தேகப்பயிற்சி செய்து, உடலை உறுதியாக வைத்துக்கொள்ளும்படி இச்சபை கவனிக்கும். ஏராளமான உடலுறுதி நூல்களும், கருவிகளும் இங்குள்ளன. மாணவிகள் திறந்த வெளியில் கூடிக் கவாத்து (Drill) பழகுவதுமன்றித் தங்கள் அறையில் தனியாகவும் உடற்பயிற்சி செய்கின்றனர். தவிர, காற்பந்து (Foot ball), மட்டைப் பந்து (Tennis), நடனம், ஜியுஜித்ஸு முதலிய பலவிதப் பயிற்சிகள் தனித்தனியே யுள்ளன. உணவைப் போலவே உடற்பயிற்சியும் அவசியம் என்று ஜப்பானியர் உணருகின்றனர்.

(5) **சுகாதாரச் சபை** (Health Committee): இது மாணவர் சுகாதார விதிப்படி நடக்கத் தூண்டும். அறைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுதல், ஆடைகளைத் துவைத்துச் சுத்தமாக வைத்துக்கொள்ளுதல், காற்றோட்டமாக வசித்தல், படிக்கும்போது படித்தல், விளையாடும்போது விளையாடல், நோய் வந்தால் உடனே வைத்தியரிடம் சொல்லிச் சிகிச்சை செய்துகொள்ளல், காலநிலைக்குத் தக்க பாதுகாப்புடன் வசித்தல்—முதலிய ஒழுங்குகளை இச்சபை வற்புறுத்தும். மாணவிகள் தினசரிக் குறிப்புகள் எழுதுவர்; அதில் உடல் நிலையைப் பற்றியும் குறிப்பெழுதவேண்டும். இக்குறிப்புகளை இச்சபையார் வாரந்தோறும் பார்ப்பர்.

(6) **காட்சிச் சபை**(Museum Committee): இச்சபை ஒரு பெரிய காட்சி சாலையை நடத்துகிறது. அதில் மாணவர் செய்த பொருள்கள், எழுதிய உயர் நூல்கள், மற்ற நாட்டு மாணவர் அறிவு வளர்ச்சிக்காகப் பயன்படுத்தும் பொருள்களெல்லாம் வைத்திருப்பர். இக்காட்சிசாலையைச் சுற்றிப் பார்ப்பதே ஒரு கல்விப் பயிற்சியாகும். ஆண்டிற்கு இரண்டு முறை பெற்றோர்களும், பொதுஜனங்களும், காட்சிசாலையையும் கலாசாலையை

யும் வந்து பார்ப்பர். அந்நாட்களில் மாணவிகள் தம் திறமைகளைக் காட்டுவர்.

(7) **ஒழுங்குச் சபை** (Order Committee): ஒழுங்கு முறையாக நடக்க இச்சபை மாணவரைக் கவனிக்கும். குறித்த காலத்தில் குறித்த வேலையைக் கருத்துடன் செய்தல், வீண் போது போக்காமை, பாடங்களை ஒழுங்காகப் படித்தல், ஒவ்வொருவருக்கும் உரிய சாமான்களை அததற்கு உரிய இடத்தில் ஒழுங்காக வைத்தல், மட்டு மரியாதை, அடக்க வொடுக்கத்துடன் நடந்துகொள்ளல், வகுப்புகளில் துஷ்டத்தனம் செய்யாது, உபாத்தியாயருக்குப் பணிந்து நடத்தல், சாப்பிடும் போது கலத்தைக் கவனித்தல், வீண் பேச்சின்மை—முதலியவற்றை இச்சபை வற்புறுத்தும்.

(8) **சிக்கனச் சபை** (Economy Committee): அளவாகப் பொருளை மாணவிகள் கையாளும்படி இச்சபை கவனிக்கும். ஒவ்வொரு மாணவிக்கும் தட்டில்லாது, இடம்பமில்லாது வாழ இவ்வளவுதான் வேண்டும் என்று திட்டம் போடும்; கலாசாலைச் செலவுகளை முறைவகுத்துச் சீராக்கும்; மாணவிகள் செய்யக்கூடிய தொழில் முயற்சிகளை அணிவகுத்து நடத்தும். அத்தொழிலால் வரும் வரும்படியைக் கல்லூரி பாங்கில் போட்டுவைக்கும். உதாரணமாக, மாணவிகள் பூந்தோட்டமும், காய்கனித் தோட்டமும் போடுகின்றனர். பூக்களும், காய்கனிகளும் உடனே கல்லூரியிலுள்ள கூட்டுறவுக் கடைக்கு வரும். அங்கிருந்து போஜனசாலைக்கு வேண்டியதை மாணவிகள் வாங்கிக்கொள்வர்; மீதியை ஊரில் விற்பர்; எல்லா வரும்படியையும் கூட்டுறவு பாங்கில் போட்டுவைப்பர். காகிதம், சோப்புத்துண்டு, மெழுகுவர்த்திக் கழிவு—எதுவும் இங்கு வீணாகாது. கழிந்த சாமான்களைச் சேர்த்துப் புதியன செய்வர் (Waste paper Industry). உதாரணமாக, கழிந்த காகிதங்களை அரைத்துக் காகிதச் செப்புகள் செய்வர். சோப்புத் துணுக்குகளைச் சேர்த்து, வெந்நீரில் கரைத்துத் துணி வெளுப்பர். பொருட் கவனம் இங்கதிகம்.

(9) **இலக்கியச் சபை** (Literary Committee): மாணவர் தெளிவாகப்பேச, உயர்ந்தது சிந்திக்க, சபைகள்கூடிச் சொற்

பொழிவுகள் செய்ய, புதிய புதிய நூலாராய்ச்சிகளைச் செய்ய, கல்லூரிப் புத்தக சாலையை நன்கு பயனுக்க இச்சபைஉதவும்.

(*10*) **விவசாயச் சபை** (Agricultural Committee): இயற்கையறிவு, தொழில் முயற்சி, தோட்டம் வளர்த்தல், பயிர்களைக் காத்தல், கனியும் மலரும் உண்டாக்கிக் கலா சாலையை அழகு செய்தல், கலாசாலையை யடுத்த வயல்களில் பருவப் பயிர் செய்தல், தேனீ வளர்த்தல், தேன் சேர்த்தல், கோழி வளர்த்தல், புறு வளர்த்தல், ரசாயன உரங்களைச் சேர்த்தல், தாம் விளைத்த பொருள்களை விற்றல், காட்சி சாலையில் வைத்தல், விவசாய அறிக்கைகள் வெளியிடல்—முதலியவற்றில் இச்சபை மாணவருக்கு பயிற்சி யளிக்கிறது.

(*11*) **சமையல் சபை** (Cooking Committee): இச்சபை பெண்களுக்கு வீட்டு நிர்வாகப் பயிற்சி தருகிறது. சுகாதார முறைப்படி சமைத்தல், செட்டுக் கட்டாகக் குடித்தனஞ் செய்தல், சமையலறை, சாப்பாட்டறைகளைச் சுத்தஞ் செய்தல், சாப்பாட்டிற்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கணக்கெழுதல், பருவத்திற்கேற்ற உணவுப் பொருட்களைச் சேர்த்தல், அதற்கான களஞ்சியம், உக்கிராணங்களைப் பாது காத்தல், இன்ன நாளில் இன்ன உணவுவகை என்று திட்டம் போட்டு அளவாகச் சமைத்தல், 3-வயதுக் குழந்தை முதல் கல்லூரி மாணவர் வரையில் அவரவருக்குத் தகுந்த உணவைத் தயாரித்துக் கொடுத்தல், சமையல் சாமான் சாப்பாட்டு மேஜைகளைப் பளபளவென்று வைத்திருத்தல், புகார் வராதபடி மாணவருக்குத் திருப்தியாக உணவீதல், விசேஷ நாட்களில் வரும் சீமான்கள் சீமாட்டிகளுக்குச் சுவை யான உணவு தருதல் முதலிய பொறுப்புகள் இச்சபைக்கு உள்ளன. 10,000 பேர் வந்தாலும் இச்சபையால் சமாளிக்க முடியும். வீட்டிலிருந்து சாப்பிட்டு வரும் உள்ளூர் மாணவி களைத் தவிர மற்ற மாணவிகளெல்லாரும் கலாசாலையிலேயே உண்டு, வசிக்கின்றனர். 3 வயதுக் குழந்தைகள் முதல் 30 வயதுப் பெண்கள்வரை சுமார் 2500 பேர் உண்ண இருக்க கல்லூரியில் இடமிருக்கிறது. உணவு விடுதிகளை மாணவிகளே நடத்துகின்றனர். பண்டம் சமைப்பது முதல் பாத்திரம்

கழுவுவதுமட்டும் எல்லாம் மாணவிகளே. சமையல்—சாப்பாட்டு இலாகா 25 குடும்பங்களாக (25 Family Groups) பிரிக்கப் பெற்றுள்ளது. ஒவ்வொரு குடும்பத்தையும் 30 பெண்மணிகள் நிர்வகிக்கின்றனர். அவர்களுள் மேற்பார்க்கும் ஒரு பெண்மணி யுண்டு; அவளுடன் மற்றப் பெண்களும் ஒத்துக் காரியம் செய்வர். உணவு விடுதியைப் பற்றிய சகல ஏற்பாடுகளும் இப்பெண்களே செய்வர். சிறு குழந்தைகள் இவர்கள் பாதுகாப்பில் வளர்வர்.

இது தவிர, ஆராய்ச்சிக் கழகங்கள் பல உள்ளன. இச் சபைகள் அடிக்கடிக் கூடிக் கலந்து, கலாசாலையை முறையாக நிர்வகிக்கின்றன. தேசீய நாட்கள், நாடக நாட்கள், ஜப்பானிய உற்சவ நாட்கள், பௌத்த சமயத் திருநாட்கள், பள்ளிக்கூட விருந்துகள், பெற்றோர் நாட்கள், பழைய மாணவர் நாட்கள், கண்காட்சி நாட்கள், வெளியிலிருந்து, புதிதாகப் புலவர் மணிகள் வந்து பிரசங்கம் புரியும் நாட்களிலெல்லாம் இச்சபைகள் தங்கள் தங்கள் வேலைத் திறனையும் பயனையும் விளக்கும். கல்லூரிப்பட்டம் பெற்றுத் தக்க யோக்கியதையுள்ள மாணவிகள், தங்கள் கலையில் மேலும் புலமையும் பயிற்சியும் பெற உபகாரச் சம்பளம் பெற்று, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸு, ஜர்மனி செல்லுகின்றனர்.

இவ்வாறு பெண்கல்வி ஜப்பானில் நடக்கிறது. ஆண் கல்வியைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. கலாசாலையிலிருந்து வெளிவரும் ஆண்கள் ஜப்பானிய சாம்ராஜ்யத்தைத் தாங்கும் வைரத்தூண்களாயிருக்கின்றனர்.

துருக்கியிலும் கமால்பாஷாவின் முயற்சியால் 1920-முதல் ஆண் பெண் இரு பாலரும் தகுந்த கல்விப் பயிற்சி பெறுகின்றனர். அப்ப! இந்நாடுகளின் கல்வி முன்னேற்றத்தையும், நமது நாட்டின் அரைக்கஞ்சி அடிமைப் படிப்பையும் பார்த்தால், இன்ப மலையிலிருந்து துன்ப மடுவைப் பார்ப்பது போலிருக்கிறது!

இனி நம் நாட்டுக் கல்விமுறையை ஆராய்வோம்:

# 23. பாரத சமுதாயம்

அரிச்சந்திர நாடகம் பார்த்தவனுக்கு மயான காண்டக் கதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. நாலெழுத்துப் படித்தும் நம் வாலிபர்கள் துடுப்பில்லாத் தோணிபோல வாழ்வுக் கடலில் தத்தளிப்பதை ஐம்புலன்களாலும் காண்கிறோம். உடலுக்கேற்ற உணவும், ஊருக்கேற்ற வுறவும்போல நாட்டிற்கேற்ற கல்வி வேண்டும். உடல், உள்ளம் பொறி புலன்கள், மனம், ஆகிய கருவிகளைப் பூரணப்படுத்துவதே கல்வி. மூளையில் புத்தக மூட்டை யேற்றுவது மட்டும் கல்வியாகாது. எண்ணும் எழுத்தும் கல்வியின் கண்ணுகும்; கண் மட்டும் மானிடமாகாது; மானிடத்தில் எத்தனையோ பிற வுறுப்புக்கள் உள்ளன. அனைத்தும் பூரண வளர்ச்சி பெற்றுத் தனி வாழ்விற்கும் (Individual life), சமுதாய வாழ்விற்கும், (Communal life) பயனுகும் பயிற்சி யளிப்பதே உண்மைக் கல்விமுறை. எழுத்து வாசனை யின்றியே எத்தனையோ பெரியார்கள் உலகிற் சிறந்து விளங்கினர் — உதாரணம் சிவாஜி, பரமஹம்ஸர். அறிவு, தொழில், ஒழுக்கம், ஆற்றல், அழகுணர்வு (Aesthetics)—இவ்வைந்தும் கல்வியின் ஐந்துயிர்களாம். எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகும் ; ஒழுக்கம் உளமெனத்தகும்; தொழில் புயமெனத்தகும்; ஆற்றல், பலம், வலிமை நரம்பெனத் தகும்; அழகுணர்வு உடலெனத்தகும். ஜப்பானியர் பள்ளிக்கூடத்தில் அழகுக் கலைகளைப் பயில்வதால், வீட்டை மலர் மணக்கப் போற்றுகின்றனர். ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளின் கல்வி முறையில் உடற்பயிற்சியும், நாட்டுணர்ச்சியும், தொழிலாற்றலும் கட்டாயமாயிருக்கின்றன.

தாயன்பில்லாப் பிள்ளை யில்லை, நாட்டன்பில்லா வுள்ள மில்லை. இருந்தால் அஃது உளுத்த இலவங்கட்டைக்கே சமானம். தாயன்பு துடிக்கும் உள்ளம், ''உலகின்முன் தலை நிமிர்ந்து முன்னேற வேண்டும்'' என்ற ஆர்வங்கொள்ளும். எதனுல் முன்னேறலாம்? அறம், அருள், அறிவு, ஆற்றல், ஆண்மை, வளமை, தொழில் முயற்சி, வாணிபம், ஈகை, வீரம், கற்பு, மனவுறுதி — இவையே முன்னேற்ற சக்தியின் பன்னிரு கரங்கள், இவற்றுள் முதற் கலம் (அறம்) பூஜ்யமாயிருந்தால் அந்நாட்டின் ஆற்றல், அறிவாற்றல் அசுரத் தன்மை பெறும். உதாரணம்வேண்டுமானுல் மேற்கே திரும்பிப் பார்த்துக் கொள்ளுங்கள்! அங்கே உடலுக்கும் மூளைக்கும் அற்புதமான பயிற்சி தருகின்றனர். ஆனுல், உள்ளம் பயிற்சியற்று அருளற்று வறண்டிருக்கிறது. வித்தையெல்லாம் வெடிகுண்டுச் சாலையில் வந்து முடிகிறது. அறிவு ஆகாசக் குண்டு போடுகிறது. ஆற்றல் அதம் பண்ணுகிறது. கலை கொலை செய்கிறது! வேதம் படித்தாலும் இராவணன் இராவணனே!

தற்கால அரக்கர், தசைவலி, மதிவலி, படைவலியில் உலகம் அஞ்சப் பெருத்தவரே; ஆனுல் அன்பில்லை, அறமில்லை, உள்ளமில்லை, இரக்கமில்லை; நமனும் திகைக்க உயிர்களை மடித்து மண்ணுள வெறி பிடித்துப் பாய்கின்றனர். அரக்கரியல்பை பகவான் கீதையிலே சொல்லுகிருர் :— '' நூற்றுக் கணக்கான ஆசாபாசங்களாற் கட்டுண்டவர்; காமக்குரோதத்திற்கு ஆட்பட்டவர்; தங்கள் ஆசையை நிறைவேற்றவே அநியாயமான வழிகளில் பொருள் குவிக்க விரும்புவோர்; இடம்பமும் செருக்கும் மமதையும் கொண்ட பொய்யர்; அசுத்தமான காரியங்களே விரதமாகச் செய்வோர்; 'ஆண், பெண் காமத்தால் உலகுண்டாகிறது; கடவுள் இல்லை' யென்னும் நாஸ்திகர்; கொலைகாரர்; 'நானே உலகிற் கிறைவன்; நானே உலகை அனுபவிப்பவன்; நான் பலவான், செல்வன், சுகி; யார் எனக்கு நிகர்?' என்னும் அகங்காரிகள்; முரடர் தற்செருக்காளர், சர்வாந்தர்யாமியான கடவுளைப் பகைப்பவர்—இவர்கள் அசுரப் பிறவியடைந்து, அதோகதியில் விழுகின்றனர்.'' கண்ணன் வாக்குடன் தற்காலத்தில் மண்வெறி

கொண்ட ஆகாச குண்டரை ஒப்பிட்டுப் பாருங்கள்! உலகில் அசுர பலங்கள் அட்டூழியம் செய்கின்றன! இந்த அசுர பலங்களுக்கு ஏற்றபடி கல்விமுறையும் கடவுளுணர்ச்சி யில்லாதிருக்கிறது.

இருளை ஒழிக்க விளக்கேற்றவேண்டும்; அது போல அதர்ம பலங்களை ஒழிக்க தர்ம பலத்தை வளர்க்கவேண்டும்! இந்த அசுர பலங்களை யொழிக்க அமரத்தன்மை பெறவேண்டும். அமரத்தன்மை யாவதென்ன? கண்ணன் அருளுகிறான்:—"அச்சமின்மை, அந்தக்கரண சுத்தி, எல்லாம் இறைவன் என்னும் அறிவில் உறுதி; ஈகை, தன்னடக்கம், வாழ்வை இறைவனிச்சைக்கே வேள்வியாக்கல், வேதப் பயிற்சி, தவம், நேர்மை, அஹிம்சை, வாய்மை, வெகுளாமை, தியாகம், சாந்தம், வண்மை, உயிரிரக்கம், பேராசையின்மை, மென்மை, நாண், நல்ல காரியங்களிற் சலியா வூக்கம், ஜபதப விரதங்களால் வரும் தேஜஸ், பொறுமை, மனவுறுதி, உட்புறத் தூய்மை, துரோகம் செய்யாமை, இறுமாப்பின்மை—இவையே தெய்வத் தன்மைகள்.'' இவற்றை வளர்ப்பதே அறிவு. இந்த அறிவை வளர்க்க மனோ வாக்குக்காயத்தால் சிரத்தையாகச் செய்யத் தகும் சாதனங்களையும் கண்ணன் அருளுகிறான்:—

''தேவர், அந்தணர், குருமார், மெய்யறிவாளிகளைப் போற்றிப் பணிதல், உட்புறத் தூய்மை; நேர்மையான ஒழுக்கம், பிரமசரியம், அஹிம்சை, உயிர்க்கருணை இவை உடம்பால் செய்யத்தக்க தவமாகும். படபடப்பில்லாது, பிறரைப் புண்படுத்தாது, வாய்மையான, நலமான இன்சொல், நல்ல கல்விப்பயிற்சி இவை வாக்கினாற் செய்யத்தக்க தவமாகும்.

மனச்சாந்தம், உட்களிப்பு, மனமடங்கிய மௌனம், புலன்கள் வழியே சென்றலையாது மனத்தை உள்ளே திருப்பியடக்கல், தூய நினைப்புக்கள்—இவை மனத்தால் செய்யத்தக்க தவமாகும். இத்தகைய முத்தவத்தால் வரும் அறிவுச் செல்வத்தையும் விளக்குகிறான் கண்ணபிரான்:—

''தியானத்தால், ஆத்ம விசாரத்தால், ஞான யோகத்தால், நிஷ்காம்ய கர்மத்தால் ஒருவன் ஆத்ம தர்சனம் பெறுகி

ருன்; இவனே உண்மையான அறிவாளி;இவன் இயற்கையுட லில் அறிவாய் விளங்கும் ஆத்மாவை அறிகிருன். இயற்கை யுடலாவது யாது? வான், காற்று, தீ, நீர், மண் ஆகிய ஐம் பூதங்கள்; உடல், நாக்கு, மூக்கு, காது, கண் ஆகிய ஞானேந் திரியங்கள்; வாய், கை, கால், குதம், குறி, ஆகிய கர்மேந்திரி யங்கள்; ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் ஆகிய தன்மாத் திரைகள்; மனம், புத்தி, சித்தம், அகங்காரம், ஆகிய உட்கர ணம்; சத்வ, ராஜஸ், தாமஸவுணர்வுகளை யுண்டுபண்ணும் முக்குண மாயையான — இந்த இருபத்து நான்கு தத்துவங் களும் இயற்கையுடல் அல்லது க்ஷேத்ரமாகும். இதில் விருப்பு வெறுப்பு, இன்பதுன்பம், ஊனுடலுணர்வு, உள்ளுறுதி முத லிய வேறுபாடுகள் உண்டு. இந்த இயற்கையுடல் ஜடம்;இஃது ஒரு வீடுபோன்றது. இந்த இயற்கை வீட்டில் ஓர் ஆள் இருக் கிருன். அவனே இவ்வீட்டின் புருஷன். அவனில்லாவிட்டால் இந்த இயற்கை யுடல் பிணமாகும். அவனையறிவதே அறிவு. அந்த அறிவின் தன்மைகளென்ன? தற்புகழ்ச்சியின்மை, இடம்பமின்மை, எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமை (அஹிம்சை), பொறுமை, நேர்மை, ஆசாரியரைப் போற்றிப் பணிதல், உட்புறத் தூய்மை, சித்தவுறுதி, தன்னடக்கம் மனத்தை மயக்கும் இந்திரிய சுகங்களுக்கு அடிமைப் படாது வைராக்கியமாயிருத்தல், அகந்தையின்மை, இவ்வுடல் பிறக் கும் இறக்கும், முதிரும் தளரும்,நோயுறும் துன்புறும், என்று சிந்தித்து, அதனுள் நிலைகொண்ட நித்தியப் பொருளான சுத்தான்மாவே நான் என்றறிதல்; மனைவி மக்கள், வீடு வாசல், எனது நான் என்னும் அகங்காரப்பற்றின்மை; விரும் பியது வந்தாலும் சரி, விரும்பாத வொன்று வந்தாலுஞ் சரி, சித்தம் மாருது சமநிலை வகித்தல், தியான யோகத்தால் கட வுளிடம் அன்புறவு கொள்ளல், உள்ளத்தனிமை, ஜனக் கும் பலை விரும்பாமை, அறிவே ஆன்மா என்னும் அத்யாத்ம ஞானத்தில் நிலைத்து நிற்றல், அனைத்தும் தானுன தத்துவமா கிய ஆத்ம தரிசனம்—இவையே ஞானம், அறிவு; இவற்றிற்கு மாருனவையெல்லாம் அஞ்ஞானம், மடமை. இதுவே பாரத தருமம்.

இந்த அத்யாத்ம ஞானமே நமது பாரத சமுதாயத்தின் அஸ்திவாரம். இயற்கை விவகாரங்களுக்கெல்லாம் அப்புறம் சாட்சியாய், ஆதாரமாய், தலைவனாய், அறிவாய், அனைத்து மாயிருக்கும் ஒரு பரம்பொருளை பரம சுகப்பொருளை உள் ளாழ்ந்து கண்டனர் நம் தெய்வப் புலவர் — ஆத்ம ஞானத் தால் வாழ்க்கை வெள்ளத்தில் பற்றற்ற படகுபோல தாமும் மிதந்தனர்; தம்மையண்டிய ஆன்மாக்களையும் கரையேற்றி னர். அத்தகைய உள்ளறிவின்மேல் எழுந்த பாரதசமுதாயம் ஒப்பற்ற மேன்மை பெற்றிருந்தது. இச்சமுதாயம் வேத ரிஷி கள், வியாசர், சுகர், வால்மீகி போன்ற தெய்வப் புலவர்களை யீன்றது; இச்சமுதாயமே இராமன், கண்ணன், புத்தன் போன்ற அவதார புருஷர்களைத் தந்தது; இச்சமுதாயமே அர்ஜுனன், பீமன், ஹனுமான், பீஷ்மன் போன்ற தீரர்களை யீன்றது. திருவும் செல்வமும், தொழிலும், வளமையும் நாட் டிற் பொலியவைத்த தனவணிகர் இச்சமுதாயத்தில் இருந்த னர். சமுதாய நலமே தமது நலமாகக் காத்த தொண்டர் பலர் இருந்தனர். அவரவர் இயல்பிற்கேற்றபடி கல்வியும் தொழிலும் அமைந்தன. குணகர்ம விபாகங்களால் போட்டி பொருமையின்றி ஒருவர் உணவை ஒருவர் பறித்துண்ணாது, அனைவரும் சமுதாய வுடலின் தலையும் புயமும், வயிறும், கைகால்களும் போலச்சேர்ந்து வாழ்ந்தனர். ஒரு பலா மரத்தின் வேர்முதல் கிளைவரையில் கனிந்த கனிகள்போன்று, அந்தணரும் வீரரும் வணிகரும் தொண்டரும் சமுதாயத்தில் மனமொத்திருந்தனர்.

அக்காலத்து அந்தணர் தமக்கென எதுவு மின்றி, பொறி புலன்களை யடக்கி, மனித சமுதாயத்தின் நலத்திற்கே தவம் புரிந்த மாசற்ற தூயர்; அளவற்ற பொறுமையாளர்; தமது தேவைக்கு மேலே எதுவும் கொள்ளார்; எவ்வுயிர்க்கும் தீங் கிழையார்; தம்மையறிந்து தாமாகவே அனைத்தையும் அறிந்த தீரர்; அருள் வல்லமையால் அறிவைப் பெருக்கி, சமு தாயத்திற்குத் தகுந்த கல்வியறிவீந்தவர். ஆத்ம ஞானமும், வீரமும், கலையும், தொழிலும், நீதிநெறியும் தந்த மஹான்கள் இந்த அந்தண் முனிவரே; அவர் தாம் கண்ட உண்மையை

மாந்தருக்கும் விளக்கினர். உயர்ந்த தன்மைகளைத் தமக்கு இயல்பாகக் கொண்டு வாழ்ந்த அந்தணரைச் சமுதாயம் தனது சிரத்தில் வைத்துக் கொண்டாடியது தகும்.

இந்த மஹான்கள் பயிற்றிய வீரர் மஹா பலசாலிகள்; எத்தகைய புறப்பகைவரும் உட்பகைவரும் அறஞ் சிதைத்து, குடிகளின் அமைதியைக் கெடுக்காது நாட்டிற்குக் காவலாக நின்ற வீரரை இவர்கள் படைத்தனர். அந்தத் தருமவீரரின் பலத்தினாலேதான் பாரத தேசம் முன்னே எந்த அன்னியருக்கும் அடிமைப்படாது சிங்கம்போலத் தலை நிமிர்ந்திருந்தது. முனிவர் தீர்க்க தரிசனத்தால் கண்ட தர்மத்தை நிலைகுலையாது காத்தவர் இந்த வீரக்காவலர். சௌரியம், சக்தியொளி, மனவுறுதி, வலிமை, போர்த்திறல், ஈகை, ஆட்சித் திறன் முதலிய இயல்புள்ள இந்த வீரரே பாரத சமுதாயத்தின் திண்ணிய புயங்களாயிருந்தனர்.

கல்வியை ஒருவகுப்பினர் பரப்பினர்; நாட்டுக் காவலை ஒரு வகுப்பினர் வகித்தனர்; எனில், சமுதாயத்திற்கு வேண்டிய எல்லையற்ற செல்வத் தொழில்களையும், உள்நாட்டு வாணிபத்தையும், கப்பல் வாணிபத்தையும் யார்செய்வது? அதற்கே வைசியர் ஏற்பட்டனர். இவர்கள், அமைதியாக நிலத்தைத் திருத்தி, கனியும் கிழங்கும் தானியங்களும் விளைத்து, சமுதாயத்தை ஊட்டினர். நாட்டின் பால் வளம் பெருகப் பசு வளர்த்தனர்; செல்வம் பொங்கும் கைத்தொழில்களைச் செய்தனர். நாட்டிற்குக் கண்டது போக மீதியைத் தேக்குமரக் கப்பலில் ஏற்றிப் பல நாடுகளுக்கும் கொண்டுபோய் விற்றனர். இவர்களைச்சமுதாயத்தின்கைகால்களெனப்போற்றினர் நாட்டார்.

அறிவு, வீரம், தொழில் மூன்றுமட்டும் போதுமா? இவை நிறைவேற எவ்வளவோ சிறுசிறுபணிகள் செய்யவேண்டுமே! ஒரு சங்கத்திற்குத் தலைவர் மட்டும் போதுமா? தொண்டரும் வேண்டுமன்றோ? இத்தொண்டர் சமுதாயத்தின் பணியே தமது வாழ்வெனக் கருதினர். இவர்களைச் சமுதாயத்தின் நரம்புகளாகக் கருதுவோம்!

இவ்வாறு அணி வகுக்கப்பட்ட சமுதாயத்தில் சண்டையும் பூசலுமுண்டோ? ஒரு வீட்டில் மனைவி அடுப்புக் காரியம்

பார்க்கிருள்; கணவன் உபாத்தியாயர் வேலை பார்க்கிருன்; அவன் தம்பி வேண்டியதை வாங்கிப் போட்டு, பழுதில்லாது வீட்டைக் காக்கிருன்: மற்ெருரு தம்பி வீட்டு நிலத்தைப் பயிர் செய்து உணவுப் பொருள்களைத் தருகிருன்; இன்ெனுரு தம்பி வீட்டுக்கு வேண்டிய தொண்டுகளைச் செய்து, எல்லாருக்கும் உபகாரமாக வாழ்கிருன். அதுபோலத்தான் முற்காலம் நம் முனிவர், சமுதாய காரியம் எளிதாக நடக்க வர்ண தர்மத்தைக் கண்டனர். அதை கீதை குணகர்மவிபாகம் என்றே சொல்லுகிறது. கீதை சர்வாத்ம ஸமரஸ வேதம். ''வீழும் உடலில் வாழுவதொருவன்; அவன் சேதனன்; நித்தியன்; அவனே அனைத்தும்; தம்முள் அவனையும், அவனுள் தம்மையும், அனைத்தும் அவன் மயமாகவும் காணும் அறிவாளிகளே எனக்குகந்த அன்பர்'' என்கிருன் கண்ணன். நான்கு குண கர்ம விபாகங்களாகப் பிரிந்திருப்பினும் அனைவருக்கும் பொது நெறியையும் கீதை உபதேசிக்கிறது:—''என்னில் சித்தம் நிலை நிறுத்தி, என் வழிபாடாக உனக்குரிய தொழிலைச் செய்! ஞானத்தைக் காட்டிலும் தியானம் மேல்; தியானத்தைக் காட்டிலும் கர்ம பலனைத் துறப்பது மேல்; அதைக்காட்டிலும் மனச் சாந்தம் மேல். ஆதலால், உனது தொழில் ஞானமாயினும், கர்மமாயினும் உள்ளமைதியுடன் பரமாத்மாவிற்கே அர்ப்பணமாகச் செய்! எவ்வுயிரையும் பகைக்காதே! எல்லாரிடமும் நட்பும் கருணையுங் காட்டு; யான் எனதென்னும் செருக்கற்றிரு! வாழ்வு என்பது இன்ப துன்பம் என்னும் இரு கரைவழியே செல்லும் ஜீவநதி. இன்பத்தில் மகிழ்ந்து போகாதே; துன்பத்தில் துன்புருதே! சம நிலையில் இரு; கவலைப்படாதே! எப்போதும் மனமகிழ்ந்திரு; கண்டதில் புலன்களை அலையவிடாது உள்ளிழுத்தடக்கு; மனத்தை என்னிடம் ஊன்றி, உறுதியாயிரு; என்னையே எல்லாமாகக் காண்; எனக்கே தொண்டு செய்; உலகை வெறுக்காதே! நானே எனது மூலப்பிரகிருதியின் மூலம் உலகாக விரிந்துள்ளேன்; உலகம் வெறுக்கும்படி நடக்காதே, அஞ்சாதே; சினவாதே! மனக் கொதிப்பை அடக்கி அமைதியாயிரு; எதையும் தன்னலத்துடன் விரும்பாதே! பரிசுத்தமாயிரு; கவலையொழி;

நன்மையும் தீமையும் சமமெனக் காண்; பகை நட்பு, மானவ மானம், குளிர் வெப்பம், இன்ப துன்பம், புகழ்ச்சி இகழ்ச்சி களில் பற்றுது முக்குணங் கடந்து, உன் இதயத்தில் ஆத்ம ஸ்வரூபமாயுள்ள கடவுளைப் பற்றியிரு! சித்தத்தை அலைய விடாதே; உள்ளே உறுதி பெறு; அன்பு செய்! அந்தணர், வீரர், வைசியர், தொண்டர் எல்லாரையும் சமமாக நான் ஈடேற்றுகிறேன். என்னன்பர் அழிவுறார்; என்னன்பரைக் கை விடேன். கவலைப்படாது என்னையே தஞ்சமெனக் கொள்! உனது மாசைக்கழுவி, விடுதலை தந்து, உன்னை என் மயமாக்கு கிறேன்!''

## தருமம்

இதுவே பாரத தரும முழக்கம்! இதுவே பாரத ஜாதியின் வாழ்க்கை! இதுவே முப்பத்துமுக்கோடி மைந்தரையும் பாரத மாதாவின் திருவுடலாக்கியது. ஆத்ம சக்தியே பாரத சமுதா யத்தின் ஆணிவேர்; வீரமே அடி மரம்; கலையும் தொழிலும் கிளைகள்; ஒவ்வொருவரும் சமுதாயத்திற்குச் செய்யும் தன் னலமற்ற பணியே நன்னீர்; அருள் மணமே பூக்கள்; மனித வாழ்வு அவரவர் இயல்பின்படி அமர வாழ்வாகப் பழுப்பதே கனிகள். இந்த ஏற்பாட்டில் யாரும் தேவைக்குமேலே துய்க்க இடமில்லை; அந்தணர் சேர்த்து வைப்பதில்லை; தாம் கற்பிக் கும் மாணவரைத் தம் குல மைந்தராகவே அவர் கருதினர். மாணவர் எதுவும் தருவதில்லை. பிச்சையெடுத்தே உண்டனர். நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்துநான்கு கலைகளைப் பயிற்றும் ஆசிரியர்கள் தமது கடமையை ஒரு தருமமாகச் செய்தனர்; தமது வாழ்வைத் தவவேள்வியாக்கினர். அந் தணர் உத்தியோக வேட்டையாடியதில்லை. அரசர் இளம் பரு வத்தில் கற்றனர்; வாலிபத்தில் உலக வாழ்வில் ஈடுபட்டனர்; சமூக தர்மத்தை நிலைநிறுத்தச் செங்கோல் பிடித்தனர்; தீயரை ஒடுக்கி நல்லவரைக் காக்கப் போர் புரிந்தனர்; நாட் டிற்காகத் தியாகம் செய்தனர்; முதுமையில் மைந்தருக்குப் பட்டங் கட்டி, மனைவியும் தாமுமாக வானப் பிரத்தாசிர மத்தை மேற்கொண்டனர்; இறுதியில் யோகம் புரிந்தனர்.

கடல் முகந்த மேகம் உலகிற்கே மழை தருவதுபோல் மன்னர், குடிகளிடம் வரி வாங்கிக் குடிகளுக்கே ஏராளமான நன்மைகளைச் செய்தனர். நாட்டில் பெரும்பாலான தொழில்களும் ஊழியமும் வணிகருக்கும் தொண்டருக்குமே வாய்த்தன. அவர்கள் போட்டியில்லாது தமக்கேற்ற துறைகளில் உழைத்துப் பிழைக்க சௌகரியமாயிருந்தது. எவரும் இடம்பக் கூத்தாடாமல், எவரும் பட்டினியால் வருந்தாமல், அனைவருக்கும் தத்தம் இயல்பிற்கேற்ற உழைப்பும் பிழைப்பும் கிடைத்தன. அறம், பொருள், இன்பம், வீடு இந்த நான்கும் வாழ்வின் குறிப்பு. இந்நான்கின் நடைமுறைகளை அறிந்த வாலிபர் இல்லறம் புகுந்து இகபர சுகங்களை அனுபவித்தனர்.

---

# 24. பிரமசரியக் கல்வி

அறம்பொருளின்பம் வீடு ஆகிய நான்கு புருஷார்த்தங்களை நன்கு விளக்கி, மனிதன் பிறந்தது முதல் இறுதிமட்டும் செய்யவேண்டிய கடமைகளை நம் சாத்திரங்கள் சொல்லுகின்றன. அவற்றினின்று முற்காலத்தில் நமது நாட்டில் பரவியிருந்த கல்விமுறை தெளிவாகிறது.

குழந்தை பிறக்கிறது; தொப்புட்கொடி யறுக்கு முன்பே ஜாதகர்மம் (Birthright—தேனும் நெய்யும் தங்கப் பொடியும் புகட்டல்) நடக்கிறது; 10 நாளைக்குப் பின் நாமகர்மம் (பெயரிடல்) நடக்கிறது; தெய்வங்களின் பெயர், தருமங்களின் பெயர், சக்திகளின் பெயர் வைக்கின்றனர். தருமன் என்று பெயரிட்டால் அந்தப் பெயரே அவனுக்கு ஓர் ஆதர்சமாகி அவனைத் தருமவானுக்குகிறது. நான்காம் மாதம் நிஷ்க்ரமணம்; அதாவது குழந்தையை வெளியிலே கொண்டு வருகிறார்கள். தாய்ப்பாலே உண்ட குழந்தைக்கு ஆறுவது மாதம் சோறூட்டுகிறார்கள். இந்தக் கடனுக்கு அன்னப்ராசனம் என்பர். ஓராண்டானதும் சூடாகர்மம் (குடுமி வைத்தல்); சிலர் மூன்றுவதாண்டிலும் நடத்துவர்.

குழந்தை தவழ்ந்து, எழுந்து, நடந்து, ஆடி, ஓடி, பேசி வளருகிறது. 5 முதல் 8 வயதிற்குள் அந்தணக் குழந்தைக்கு உபநயனம் செய்து, குருகுலத்திற் கனுப்புவர்; வீரர் புதல்வருக்கு 6-முதல் பதினொரு வயதிற்குள் கல்வி தொடங்குவர்; வைசியர் சேய்களுக்கு 8-முதல் 12-வயதிற்குள் கல்வி தொடங்குவர். அவரவர் அத்யாத்ம வித்தையுடன், தமது குலத் தொழிலை முதன்மையாகப் பயில்வர்.

பிரமசரிய விரதம் பூண்டு மாணவர் குருகுலத்தில் கலை பயில்வர். சுசிருசி ஆசாரமற்றுக் கண்டதைக் கண்டபடி யுண்டு, பேச்சிலும், நடையிலும், சேர்க்கை, பார்வை, படுக்கை, உடுக்கைகளிலும் கண்டபடி திரியமுடியாது பிரம சாரிகள். பிரமசாரி நியமம் மகா கடினம். பிரமசாரிகள் குரு வின் குறிப்பறிந்து நடக்கவேண்டும். உடை, நடை, உணவு, பார்வை, படுக்கை, பேச்சு, பழக்கங்களெல்லாம் இன்னமாதி ரிதான் இருக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டுள்ளன. அரை யில் முஞ்சி யணிந்து, முழங்காலுக்குமேலே ஆடை யுடுத்தி, சந்தி ஜபம் ஹவனங்களைக் காலாகாலத்தில் செய்து, பிரம சாரிகள் பிச்சைக்குச் செல்லவேண்டும். வேத மந்திரங்களைச் சொல்லிக்கொண்டே, ''பவதி பிக்ஷாந் தேஹி!'' என்று கூவ வேண்டும். இக்காலத்திலும் உபநயனத்தின் போது,பிச்சை வாங்கும் கடமை நடக்கிறது. ஆனால், அதன் பொருள் போயிற்று; எல்லாம் பொம்மை விளையாட்டா யிருக்கிறது. பிரமசாரி போதுமான உணவைப் பிச்சை யெடுத்து வந்து, குருவின் முன் வைத்து வணங்கி, அவர் உத்தரவின் மேல் உண்ணவேண்டும். கிழக்கே அல்லது வடக்கே பார்த்தமர்ந்து, காயத்ரியால் உணவைத் தூய்மை செய்து, ஸ்ப்ருஷ, ஆசமன் யம் செய்து, பிராணாஹுதி போட்டுக் கொண்டு, உள்ளிருக் கும் அந்தராத்மாவிற்கு வழி பாடாக உண்ணவேண்டும். உண்ட பின் வாயைச் சரியானபடி கொப்புளிக்கவேண்டும். முகம் கைகால்களை ஒழுங்காகக் கழுவவேண்டும். உணவை வணக்கமுடன், சுசி ருசி ஆசார சீலத்துடன், சிதறாமல் பதறா மல் உண்ணவேண்டும். இடையில் எழுந்திருக்கக் கூடாது. அளவிற்கு அதிகமானால் உடல் கெடும், ஆயுள் குறையும். உண்டபின் அடிக்கடி ஆசமன்யம் செய்யவேண்டும்.

ஆசிரியர் பிரமசாரிக்கு முதலில் சுத்தமான நடையுடை, நன்னெறி யொழுக்கம், ஆசார நியமங்களைப் பயிற்றவேண் டும். சூரிய நமஸ்காரம், ஸமிதாதானம், சந்தி ஜபங்களைச் சரிவரச் செய்விக்க வேண்டும். அதனால் சித்த சுத்தியும், புத்திக் கூர்மையும் உண்டாகும். மாணவன் பிரம்மாஞ்சலி செய்தே, வேதங் கற்கவேண்டும். பிராணாயாம காயத்ரி

செய்து "ஹரி: ஓம்" என்று பாடந் தொடங்கவேண்டும். பிரணவ மந்திர ஜபத்தின் பெருமை அளவற்றது. மனத்தில் பிரணவத்யானம் செய்தால் எல்லா சக்திகளும் உண்டாகும்.

இரதசாரதி குதிரைகளை அடக்குவது போல மனத்தேரில் பூட்டிய ஐம்புலக் குதிரைகளைப் பிரமசாரி அடக்கியாள வேண்டும்; மனத்தையும் ஞான கர்மேந்திரியங்களையும் தன் வசப் படுத்த வேண்டும்; ஆசைக்கு இடந்தரக்கூடாது. அனுபவித்து ஆசையைப் போக்கிவிடுவோம் என்பது 'நெய்விட்டுத் தீயணைப்போம்' என்பது போலாகும். அறிவால் புலன்களை அடக்குக! சித்தமலைந்து தீய எண்ணங்களில் திரிந்தால் வேதம், தியாகம், வேள்வி, அடக்கம், ஆசாரம், தவம், பிரமசரியம் எவையும் பலிக்கா. மனத்தை அடக்கினவனுக்குச் சுகதுக்கங்களில் பற்றிராது. ஓர் ஓட்டை யிருந்தாலும் பானையிலிருந்து தண்ணீர் வழிந்தோடுவது போல, ஒரு புலன் மாசுற்ருலும் மனம் புறஞ்செல்லும், அறிவு கலங்கும். பிரமசாரி மனவுறுதியுடன் உடலுறுதியும் பெறவேண்டும்.

அதிகாலையிலெழுந்து குடலைச் சுத்தி செய்து, துவைத்துக் குளித்து, பிரமசாரி சூரியன் உதிக்கு மட்டும் காயத்ரி ஜபம் செய்யவேண்டும். அந்தியில் அதேமாதிரி ஆசாரத்துடன், வானில் நட்சத்திரம் தோன்றுமட்டும் ஜபம் செய்யவேண்டும். மனங் குவிந்து அமைதியாக, சிரத்தையாக ஜபம் செய்ய வேண்டும். நித்திய கர்மானுஷ்டானங்களைத் தவருமற் செய்ய வேண்டும். உண்பது எவ்வளவு அவசியமோ அவ்வளவு நித்திய கர்மானுஷ்டானங்களும் அவசியம். ஒருவருக்கொருவர் சந்திக்கும்போது மரியாதையாக "நமஸ்தே" என்று வணக்கம் கூறி, "க்ஷேமமா, சௌக்கியமா, நலமா?" என்று விசாரிக்கவேண்டும். பெயர் சொல்லி "அடா" என்று யாரையும் அவமரியாதையாக அழைக்கக் கூடாது. ஆள், அறிவு, வயதிற்குத் தகுந்த மரியாதை காட்டவேண்டும். தாய், தந்தை, குருமார்களைத் தெய்வத்திற்குச் சமானமாக வணங்க வேண்டும்.

வேத வித்தையை விளக்குவோன் ஆசாரியன். ஊதியம் பெற்று வேதம், சாத்திரம், கலைகளைப் புகட்டுவோன் உபாத்தி

யாயன். மாணவனுக்கு உபநயனம் செய்வித்து, தனது வீட்டிலேயே வைத்து, உடையுணவு தந்து, வேதக் கல்வி புகட்டுவோன் குரு. அவ்வாறு கல்வி தருவோனை அன்னையும் பிதாவும்போலக் கருதி, மாணவன் அன்பு செய்யக் கடவன். எழுத்தறிவித்தவன் இறைவனுகும். வயதைப் பற்றிக் கவலையில்லை. கவி என்னும் பாலன் தந்தையரான ஆங்கீரஸ்—முனிவர்களுக்கு ஞானம் புகட்டினுன்; கல்வி முடிந்ததும் அவர்களைப் ''பையன்களா!'' என்றழைத்தான். 'பெரியவர்களான எங்களை அப்படி உதாசீனமாக அழைப்பதா இச்சிறுவன்?' என்று ஆங்கிரஸ் முனிவர் தேவர்களிடம் முறையிட்டனர். ''கவி அழைத்தது சரி!'' என்றனர் தேவர். முருகன் தகப்பன்சாமியாஞன். அறிவைப்பார்த்துக் குருவை மதிக்கவேண்டும். தர்ம வீரத்தால் க்ஷத்ரியனை மதிக்க வேண்டும். விளைபயிர் செல்வங்களால் வைசியரை மதிக்க வேண்டும். பணியால் தொண்டரை மதிக்க வேண்டும். கல்வியில்லாத பார்ப்பான் மர யானை, தோல்மான் மாதிரிப் போலியாவான்; வேதமில்லாத வேதியன் மலட்டுப் பெண்போலாவான். குரு மாணவரை இன்சொல்லால், இனிது நடத்த வேண்டும்.

குருகுல வாசம் செய்து மாணவன் பரிசுத்தமாகக் கற்க வேண்டும். எதைக் கற்பது? ஆசார அனுஷ்டானம், தவம் விரதங்களை முறையே போற்றி விரிவுரையுடன் முறையாக ஆசிரியனிடம் வேதம், உபநிடதங்களை ஓத வேண்டும். ருக், யஜுஸ், சாமம் ஆகிய மூன்று வேதங்களையும் கற்கவேண்டும்; ஒன்றையேனும் அந்தணன் முழுவதும் கற்கக் கடவன். அதர்வண வேதத்தில் பகைவரை வென்று உலகை வசப்படுத்தும் சூழ்ச்சிகளெல்லாம் உள்ளன. அவற்றைச் சிறப்பாகச் சிலர் கற்று அரசர்க்குதவினர். குருகுல வாசம் செய்யும் பிரமசாரி, தேன், ஊன், வாசனைத் திரவியங்கள், பூமாலை, லாகிரி வஸ்துக்களைத் தொடக்கூடாது; பெண்ணுசை பிரமசாரிக்குக் கட்டோடு இருக்கக்கூடாது. தலையில் பூச்செருகக் கூடாது இந்திரியத்தைக் காக்கவேண்டும். எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யக்கூடாது. கண்ணிற்கு மையிடக் கூடாது; சதிர், நடனங்கள் சிற்றின்பப் பாட்டுகளை விலக்க வேண்டும்; பேராசை,

பொறுமை, கோபம், சூதாட்டம், சண்டை, சச்சரவு, கோள், பொய், பெண்களைத் தொடுதல், உற்றுப்பார்த்தல் கூடா. பிரமசாரி தனியே உறங்கவேண்டும். இருட் சேட்டைகளால் விந்தை வெளியேற்றக் கூடாது. தானாக உறக்கத்தில் விந்து நஷ்டமானால், பிரமசாரி எழுந்து வேத மந்திரம் சொல்லி, குளித்து, சூரிய நமஸ்காரம் செய்யவேண்டும்; பிரமசாரி தூய இல்லங்களில் ஐயம்புகுந்தே உண்ண வேண்டும்; காலை மாலை சமிதா தானம் செய்யவேண்டும். கல்வி கற்பதுடன் குரு சேவை செய்ய வேண்டும். குருவை நிந்திக்கக் கூடாது. பரிகாசம் செய்யக்கூடாது; குருவைப் பழிக்கும் தீய நண்பரை விலக்க வேண்டும். தோண்டத் தோண்ட ஊற்றுப் பெருகும்; குருவைப் பணியப்பணிய அறிவு பெருகும். குரு பத்தினியையும் குருவெனவே வணங்க வேண்டும். பிரமசாரி விடிய நான்கு நாழிகைக்கு முன்பே எழுந்திருக்க வேண்டும். சூரியன் உதித்தும் தூங்குவோன் அந்தப் பிழைக்காக ஒரு நாள் பட்டினியிருந்து காயத்ரி ஜபம் செய்யவேண்டும். சாதி வேறுபாடின்றி, எவனிடம் புலமையுள்ளதோ அவனிடம் கலை பயிலலாம். மண்ணோடு கலந்தாலும் பொன்னைப் பிரித்தெடுக்கிறோம்; அதுபோலப் பகைவனிடமும் நல்லதிருந்தால் கொள்ளலாம்; ஒரு குழந்தை நன்மதி சொன்னாலும் கேட்கலாம். பொன் மணி, வைரம், நற்குணம், தூயவொழுக்கம் அறிவுரை, கலைகள்—இவை எங்கிருந்தாலும், எவரிடமிருந்தாலும் முயன்று பயில்க! எந்த வர்ணமானாலும் குரு குருவே; அறிவிற்குச் சாதி பேதமில்லை. படிக்கும்போது குரு சேவை செய்க! கல்வி முடிந்ததும் இயன்ற மட்டும் குரு தட்சிணை தருக! 12, 18 அல்லது 36 ஆண்டுகள் நன்றாக வேதம் பயின்ற பிறகு, பிரமசாரி தனக்கேற்ற தருமபத்தினியுடன் இல்லறம் போற்றுக!

இதுவே மனுவின் ஆணை.

---

# 25. குரு, சிஷ்யன்

வேதகாலக் கல்விமுறை தைத்திரியோபநிடதம் சீக்ஷா வல்லியினின்றும் நன்கு விளங்கும். வேதம் பயின்று நின்று உண்மைகண்ட பிரம்ம தேஜஸ்வியான குரு, தமது கலையைப் புகட்ட பிரமசாரிகளை அழைக்கிறார் :—''பிரமசாரிகள் என்பால் வருக! (ஆமாயந்து ப்ரஹ்மசாரிணஸ்வர் ஹா!) பிரமசாரிகள் விரைந்து என்பால் வருக! எல்லாத் திசைகளி னின்றும் பிரமசாரிகள் என்னிடம் வருக! மனத்தை அடக்கிய பிரமசாரிகள் என்பால் வருக! (தமாயந்து ப்ரஹ்மசாரிண ஸ்வா ஹா!) சமநிலை, அமைதிபெற்ற பிரமசாரிகள் என்பால் வருக!'' என்று ஞானசிரியர் வழுத்தி, அக்கினியில் ஹவி வழங்குகிறார். மக்கட் செல்வம், பசுச்செல்வம், மனை, நிலம், பொன், பொருள் ஆகிய இவற்றினும், அடக்கமும் அமைதி யும் தெளிவுங் கொண்ட ஒரு நல்ல பிரமசாரிக்குக் கலை பயிற்றுவதை அக்காலப் புலவர் பெரும்பேருக மதித்தனர்.

''ஜனங்களுக்குள் நான் புகழ் பெற்றேங்கவருள்! செல் வரிற் சிறந்தோங்க வருள்! யான் நின்னுள் புகுந்துறைக— பகவானே! நீ என்னுட் புகுந்துறைக! ஆயிரங்கிளை விரிந்த நின்னுல் யான் மாசறக் கடவன்!

''தண்ணீர் கீழ் மட்டத்திற்கு ஓடுவது போல், மாதங்கள் ஆண்டை நோக்கி ஓடுவதுபோல், அருளிறைவனே, எல்லாத் திசைகளினின்றும் பிரமசாரிகள் என்னிடம் வரட்டும்! நீயே சாந்த நிலயம்; அறிவொளியேற்றி உன்னுள் என்னை ஆழ்த்தி யருள்!—இறைவ போற்றி!''

இவ்வாறு பிரமசாரிகளை அழைக்கும் குரு எத்தகைய பெருமை பெற்றவர்? சீக்ஷாவல்லி பத்தாவது அநுவாகத்திற்

காண்போம்:—''வாழ்வெனு மரத்தை நானே வளர்க்கிறேன்; எனது புகழ் மலைச்சிகரம்போல நிவந்தது; அனைத்திற்கும் புண்ணிய மூலம் யானே; பரிதியுள் விளங்கும் ஒருவன் போல நான் அமுதன், நித்தியன்; நானே சுடரும் அறிவுச் செல்வம். நான் இறப்பில்லாதவன்; என்று முள்ளவன்.'' இத்தகைய் அமர நிலைபெற்ற ஆசிரியர் தமது ஆத்ம வித்தையைப் புகட்ட பிரமசாரிகளைக் கூவியழைக்கிறார். பிரமசாரிகள் வருகின்றனர். பிரமசாரி நியமமென்ன? கேவலம் நூலறிவு மட்டுப்போதாது; கற்றவழி நேர்மையுடன் நடக்கவேண்டும்; உண்மையாளனு யிருந்து வேதமோத வேண்டும்; பிறர்க் குரைக்க வேண்டும்; ஆசிரமத்திற்கேற்ற விரதங் காத்துப் புலன்களை யடக்கி, மனச் சாந்தியுற்று, அக்கினி ஹோத்ராதிகளைச் சரிவரச் செய்து, மனிதனுக்குள்ள அறங்களைச் சரிவரக் காத்து வேதமோத வேண்டும்.

இவ்வாறு நேர்மையுள்ள குருவும் சீடரும் வேதந் தொடங் குமுன், பிரணவ த்யானம் செய்கின்றனர். ''ஓமே பிரமம், ஓமே சர்வம்; நான் பிரமத்தையடைக! பிரமத்தை யடைந்த வனே மேலோன்'' என்று சிந்திக்கின்றனர். பிறகு கல்வி நன்கு இயலும்படி தெய்வங்களை இருவரும் வழுத்துகின்றனர்.

''மித்திரன் நமக்கு நலம் புரிக! வருணன் நலம் புரிக! அர்யமான எமக்கு நன்மை யருளுக! இந்திரன், பிருஹஸ்பதி, எமக்கு நலஞ் செய்க! எங்கும் நிறைந்த விஷ்ணு எமக்கு நல மருளுக! பிரம்மத்திற்கு வணக்கம்! வாயுதேவ, உனக்கு வணக்கம்! நின்னையே சாக்ஷாத் பிரம்மம் என்று போற்றுதும்! உள்ள துரைப்பன்! உண்மையுரைப்பன்! அஃது (பிரம்மம்) என்னைக் காத்தருளுக! அஃது எனது போதகனைக் காத்தரு ளுக! பிரம்மம் நம்மிருவரையும் காத்தருளுக; நாமிருவரும் சேர்ந்து வீறுகொண்டுழைப்போம்; நமது கல்விப் பயிற்சி திண்மையுற்றொளிர்க! நாம் ஒருவரை யொருவர் பகைக்கா திருப்போமாக! ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி.!'' பிறகு பாடம் நடக்கிறது. ஆசாரியர் வேத ரகசியங்களையே உணர்த்துகிறார். முதலில் ஒலியிலக்கணம் சொல்லித் தருகிறார். எழுத்துக் களின் உச்சரிப்பு, மாத்திரை, பலம், சாமம், சந்தி இவற்றை

விளக்குகிருர். பிறகு ஸம்ஹிதைகளை உபதேசிக்கிருர். மண் புவி, விண் புவி, காற்ருல் இவற்றை யியக்கும் ஆகாயம் முதலியவற்றின் தன்மையை விளக்குகிருர். பிறகு தீ, கதிரவன், நீர், மின்னல் இவற்றினியல்பு கூறி, ஒளியை விளக்குகிருர்; ஆசிரியர்,—மாணவன்,—கல்வி,—இலக்கணங்கள்,— போதனுமுறை முதலியவற்றை விளக்கி ஞானப் பயிற்சியைத் தெரிவிக்கிருர். மாதா பிதாக்களின் இணைப்பால் நன்மக்கட் பேறுண்டாவதை விளக்கி, கிருகஸ்த தருமத்தை உபதேசிக்கிருர். பிறகு அத்யாத்ம நூல் நுணுக்கங்கூறி ஆத்ம ஞானத்திற்கு வழி திறக்கிருர்.

''ஸய ஏஷோ அந்தர் ஹ்ருதய ஆகாச:
தஸ்மின் அயம் புருஷோ மனோமய:
அம்ருதோ ஹிரண்மய:''

''இதயாகாசத்தில் மனோமயனுன புருஷன் வசிக்கிருன்; அவன் நித்தியன்; பொன் மயன்!

''அவனே உண்மை; அவனே உயிர்க்கமைதி; அவனே மனத்திற்கின்பம். அவன் சாந்தமயன். அவன் அழிவிலி, அவனைத் தியானி!'' என்று ஆத்மத்யானம் பயிற்றுகிருர். இந்த ஆத்மாவைச் சூழ்ந்திருக்கும் இயற்கைத் தத்துவங்களை விளக்குகிருர்; ஸப்த லோகங்களின் இயல்பை வர்ணிக்கிருர். வேதவேதாந்தங்களை விளக்கிய பிறகு அனைத்திற்கும் உயர்ந்தது பிரம்மமே; பிரம்மத்தை அறிந்தவனே பெரியவன்; பிரம்மம் சத்யம், ஞானம் அனந்தம்; அஃது இதயக்குகையிலுள்ளது; அதனை யறிவதே யறிவு...''

என்று உரையாலும் உணர்வாலும் ஆத்ம வித்தையைப் புகட்டுகிருர்.

வேதத்தைக் கற்பித்தான பின்பு குரு மாணவனுக்கு உபதேசிக்கிருர் :—

''உண்மையுரை; தருமம் செய், வழுவாது வேதமோது; ஆசாரியருக்குப் பிரியமான பொருளைச் சேர்த்துக் கொடுத்த பின் குலக்கிளையை வளர்! சத்தியந் தவருதே; தருமந்தவருதே; நன்மை செய்யத் தவருதே; செல்வஞ் செழிக்கத் தவருதே! தேவர் பிதிர்க் கடன்களை வழுவாது செய்; அன்னை

தந்தை, ஆசாரியன், அதிதி ஆகியோர்களைக் கடவுளாகப் போற்றி வணங்கு; மாசற்ற செயல்களைச் செய்; நல்லனவே செய்!'' இவ்வுபதேசங்களைப் பெற்று, பிரமசாரி இல்லறத்தை மேற்கொள்ளுகிறான்.

இவ்வாறு கீதை, மனு, உபநிடதங்களினின்று நம் நாட்டினர் முற்காலம் பெற்ற கல்வி முறையை அறிகிறோம். இவை பெரும்பாலும் பிரம்மவித்தை கற்பவருக்கே ஏற்பட்ட விதிகள். முற்காலம் ஜனசமுதாயத்திற்கு வேண்டிய எக்கலை பயிலும் மாணவரும், ஒரு புலவனிடம் குருகுல வாசமிருந்தே பயின்றனர் என்றறியலாம். எண்ணெழுத்துக் கற்க ஏராளமான திண்ணைப் பள்ளிக்கூடங்களும், சாலைப் பள்ளிக் கூடங்களும் நமது நாட்டில் இருந்தன. எழுதப் படிக்கத் தெரிந்த மாணவர் தக்க புலவரை நாடித் தமதியல்பிற்கேற்ற கலைகளைப் பயின்றனர்.

அக்காலத்து மாணவன் எவ்வாறு குரு பக்தியுடன் கற்றான் என்பது ஆருணியின் கதையால் நமக்கு விளங்குகிறது:

தௌமிய முனிவர் இயல்வளம் நிறைந்த ஓர் ஆற்றோரத்தில் அழகான குருகுலம் அமைத்தார். அதில் நூற்றுக்கணக்கான பிரமசாரிகள் ஆத்ம வித்தையும், பல கலைகளும் பயின்றனர். அவர்களுள் ஆருணி ஒரு தூய பிரமசாரி. ஆருணி பஞ்சாபி; மற்றொரு குருகுலத்தில் 20 ஆண்டுகள் வேதம் பயின்றபின் தௌமியர் குருகுலத்திற்கு வந்தான். ஆருணிக்குக் குருதான் தெய்வம்; குருசேவைதான் படிப்பு! குரு குளிக்கத் தண்ணீர் இறைப்பது; குருவின் ஆடையைத் துவைப்பது; பூஜை, ஹோமங்களுக்கு வேண்டியமலர், அரசங்குச்சி, புல் ஆகியவற்றைக் கொண்டு வருவது முதலிய பணிகளை அவன் செய்வான்; குருவின் உபதேசங்களைக் கருத்துடன் கேட்டு ஒழுகுவான்; மீதி நேரமிருந்தால் மற்ற மாணவர்களுக்கு வேண்டிய பணிகளைச் செய்வான்; தோட்டத்துக்குத் தண்ணீர் இறைப்பான்; ஆசிரமத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்வான்; பிறர் ஆடைகளை வெளுப்பான்;

நோயாளருக்கு மூலிகைகள் கொணர்ந்து சிகிச்சைசெய்வான்; புதிதாக வரும் மாணவர்களை அன்புடன் ஏற்று, ஆசிரமநடை முறை நெறிகளை உணர்த்துவான். யாராவது சோர்ந்திருந் தால் அவர்களை உற்சாகப்படுத்துவான். பிராணிகளிடம் பிரியமாயிருப்பான்; படிப்பது மட்டும் கிடையாது. ஆருணி யின் எளிமையையும், கரவற்ற தன்மையையும் கண்டு எல்லா ரும் அவனையே வேலை யேவுவர். சிலர் ''அப்பாவி, அப்பாசு!'' என்று பரிகாசமும் செய்வர். ஒருநாள் மழை கொட்டியது; குருவின் பசுக்கள் காட்டிற்கு மேயச் சென்றிருந்தன. பொழுது விழுந்தும் அவை வரவில்லை. வெளியே தலைநீட்ட முடியாது மழை! எல்லாரும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர். யார் தேடச் செல்வது? ஆருணிதான். ''ஆருணீ!'' எங்கே ஆருணி? காணோம்! குருவும் மாணவரும் சந்த்யா ஹோமம் செய்ய எழுந்திருந்தனர். அப்போது, ''குருப்யோ நம:'' என்ற சத்தம் கேட்டது; ஆருணி பசுக்களை ஓட்டிக்கொண்டு வந்தான்; அவனது மரவுரி கிழிந்திருந்தது. காட்டில் அங்கு மிங்கும் மழையில் நனைந்து திரிந்து மாடுகளைச் சேர்த்துக் கொண்டுவந்தான். அச்சமயம் ஆசிரம வயல்களின் கரை உடைப்பெடுத்ததாக ஒரு மாணவன் வந்து சொன்னான். அதை அடைக்க வேண்டுமென்றார் குரு. ஆருணி குருவிற்குப் பால் கறந்து வைத்துவிட்டு, சத்தமில்லாமல் வயலுக்குச் சென்று கரை போடத் தொடங்கினான். மிகவும் சிரமப்பட்டு இரவெல்லாம் மண்ணை எடுத்தெடுத்து அப்பிக் கரையைச் செய்து முடித்தான். ஓர் இடத்தில் மட்டும் உடைப்பு அதிக மாயிருந்தது. கரை போடப் போட உடைந்தது. நெடுநேரம் வேலைசெய்து கை கால் அலுத்தன. என்ன செய்வது? 'மண்ணைப் போட்டுக் கரையெழுப்பமுடிய வில்லை யென்றால், இந்த மண்ணுடல் எதற்கிருக்கிறது? படு குறுக்கே! குருவே துணை!' என்று ஆருணி தானே அணையா கித் தண்ணீரைத் தடுத்து நின்றான். பாதி உடல் மணலிற் புதைந்தது. பசி தாகம் எல்லாம் மறந்தான்; குளிரால் உடம்பு விறைத்துப் போயிற்று; உயிர் போனாலும் சரி; குரு சேவையே பெரிதென உறுதிகொண்டு விழுந்து கிடந்தான்

ஆருணி. காலை புலர்ந்தது; இரவு வயலுக்குப் போன ஆருணி யைக் காணோம். ''அப்பாசு எங்கேயாவது மாடு மேய்க்கும்'' என்று பரிகாசம் செய்கின்றனர் சிலர். குரு வயலுக்குப் போய்த் தேடினார். ''ஆருணீ! ஆருணீ!'' பேச்சில்லை! குரு வயலைச்சுற்றி வரும்போது கரையோடு கரையாக ஆருணி புதைந்து கிடக் கக் கண்டார்! குரு திகைத்தார்! உண்மை யறிந்தார். ''ஆருணீ! என் ஞான மகனே, எழுந்திரு!'' என்றார். ஆருணி, உணர்வு பெற்றெழுந்தான். ''குருவே துணை'' என்று பணிந் தான். ''என் மகனே, நீயே ஞானி, நீயே உண்மை மாணவன்'' என்று தழுவிக் கொண்டு அவனுடலினின்று மண்ணைத் துடைத்தார் குரு! ''ஆருணி! உனக்கு ஞானோதயமாயிற்று! நீ கல்வியின் எல்லையையடைந்தாய்; வேதப்பொருளையுணர்ந் தாய்'' என்று ஆசீர்வதித்தார் குரு. அன்றே ஆருணி ஒப்பற்ற ஆத்ம ஞானியானான்; அவன் வாக்கில் வேதவாணி குடி கொண்டாள்.

முற்காலத்து பிரமசாரிகள் இவ்வாறு குருவைப் பணிந்து குருவின் திருவருளால் ஞானம் பெற்றனர்.

இக்காலம் கலாசாலை, மாணவர் கலாட்டா சாலையா யிருக்கிறது!

# 26. தமிழர் கற்ற கல்வி

## கலை வணக்கம்

'கல்வி அழகே அழகு', 'கல்வியே மக்கள் கண்', 'எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்', 'பிச்சை புகினும் கற்கை நன்றே', 'கல்வி கொடுத்தார் கண்கொடுத்தாரே'-இவ்வாறெல்லாம் நம் பெரியார்கள் கல்வியைச் சிறப்பாகக் கூறியிருக்கிறார்கள். அக்காலம் நம் நாட்டில் கல்வியைக் கண்ணென மதித்தனர்; தெருவிற்கொரு திண்ணைப் பள்ளிக்கூடம் வைத்து ஒவ்வொரு மாணவனும் படிக்க வகை செய்தனர். தவிர, குலகுரு என்று ஒரு புலவரை ஆதரித்து வீடுதோறும் கருத்தூன்றிப் புனித ஞானங்களைப் பயின்றனர். புலவர்களுக்கு ஊழியம் செய்து நம் மாணவர் புலமை பெற்றனர். கல்வி யறிவைக் கலைமகள் வடிவாகச் செய்து வணங்கினர்; கலைமகளுக்குத் திருவிழாக் கொண்டாடினர். வெறும் ஏட்டுக் கல்வி மட்டுமன்று, தொழிற் கல்வியையும் பலதுறைக்கலைகளையும் பயபக்தியுடன் போற்றி, ஆயுத பூஜைகள் நடத்தினர். நம் நாட்டில் ஒரு குழற் புலவன் தனது குழலைக் கண்ணன் குழலாக மதித்து வழிபடுகிறான்; யாழோன் தனது யாழைக் கலைமகளின் கையில் விளங்கும் யாழாகவே கருதி வழிபடுகிறான்; முழவோன் தனது மத்தளத்தை நந்தி தேவர் வாத்தியம் என வணங்குகிறான்; ஓலை யெழுதும் உபாத்தியாயர் எழுத்தாணியை ''ஓம் சிவம்'' என்று சொல்லி வணக்கமுடன் பிடிக்கிறார். நமது நாட்டில் கல்விக்கும் கலைமகளுக்கும் இத்தகைய தெய்விகப் பெருமை நின்று நிலவுகிறது.

பரதர்மம் புகுந்து, நம் கலைகளும், ஒழுக்கங்களும், அறிவாற்றல்களும் சிதைந்துபோன இந் நாட்களிலும், நமக்குக்

கலைமகளிடம் பக்தி இருக்கிறது. அருட் பாடல்களை வைத்து வழிபட்ட நம் சரஸ்வதி பூஜைகளில், இன்று, கண்ட அந்நிய நூல்களை எல்லாம் வைத்து மலர் தூவுகிறோம். என்றாலும், கலையிடம் நமக்கொரு மதிப்பிருக்கிறது. ஏடு, கலை, ஆசிரியர் அனைத்தையும் தெய்விக அன்புடன் நமது நாடு மதித்தது.

நமது நாட்டிற்கே தனிச் சிறப்பைக் கொடுத்த குருகுலக் கல்வி முறைக்கு இணை வேறு எந்நாட்டிலுமில்லை.

## ஆசிரியன்

அறம், அறிவு, அருள், பொருள், அன்பு, இன்பம், இகம் பரம்—எல்லாம் அக்காலத்தில் கல்வியால் எய்தின. அக்கால ஆசிரியன் வணங்கத்தக்க சான்றோனா யிருந்தான். நல்லகுலம், தெய்வ பக்தி, கருணையுள்ளம், தெளிந்த கலையறிவு, பல நூற் பழக்கம், சொல் திறமை, உலகியல் அறிவு, உள்ளியல் அறிவு, மாசற்ற குணநலம்—இவையெல்லாம் அவனிடம் பொருந்தியிருந்தன. அவன் பெருமையும், பொறுமையுங் கொண்டு, பருவ முயற்சிக்கேற்ற பலனைத்தரும் நிலத்தைப் போல, மாணவன் முயற்சிக்கேற்றபடி அறிவளித்தான்; அவனது அறிவு அளவு கடந்த மலைவளம் போன்றது; அவன் தோற்றமும் மலைபோல மாண்புடையதாம். அவன் புலமை தராசு போல ஐயமறப் பொருளுணர்ந்து, நடு நிலையினின்று, மாணவருக்கு உதவியது. அவன் முகமும், அகமும், மங்கல மலர் போன்று மகிழ்வான தோற் றத்தையும், அன்பு மனத்தையும்அளித்தன. அவனிடம் யாரும் விரும்பிச் சென்று கற்பர். அத்தகைய ஆசிரியனையே அக் காலம் 'குரு' என்று போற்றியது. சொல்லுந் திறமை யில்லா தவன், இழிகுண வியல்பினன். பிள்ளைகளைப் பேய்போல மிரட்டி அடிப்பவன், பணமே குறிப்பா யிருப்பவன், அவா மிக்கவன், பொறாமைப் பித்தன்,கலகக்காரன், மாணவருடன் மன மொவ்வாதவன்-இவர்களெல்லோரும் ஆசிரிய பீடத்தின் கிட்டக்கூட வரமுடியாது. சிலர் கற்றிருப்பர்; ஆனால், கழற் குடம்கொட்டுவதுபோல்முன்னுக்குப்பின் கோவையில்லாமல் விஷயங்களைச் சொல்வர். சிலர் மடற்பனை போல்வர்; மனம்

வந்து அவர்களாகப் பாடம் சொன்னாலன்றி, அவர்களிடம் நெருங்கி ஏதும் கொள்ளமுடியாது. குடுக்கையில் அடைத்த பருத்தியைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பறித்தெடுப்பது போலச் சிலரிடம் அறிவை வலிந்து சிறிதளவாகக் கொள்ள வியலும். சிலர் தம்மிடம் அன்புடன் காணிக்கை தந்து காத்திருப்பவருக்கு ஒன்றும் சொல்ல மாட்டார்; முடத்தெங்கு போல மற்றொருவருக்கு உழைப்பார்-இத்தகையோரெல்லாம் ஆசிரியராயிருக்கத் தகுதியல்லர்.

## போதனா முறை

அக்கால ஆசிரியன் போதனா முறையில் மிகத்திறமை பெற்றிருந்தான்; குழந்தையின் வயதுக்கும், உடலுக்கும் ஏற்ற உணவைத் தரும் தாயைப்போல மாணவன் தகுதிக்கேற்ற கல்வியை யளித்தான். அந்தக் காலப் போதனா முறையின் அழகைப் பாருங்கள்:

ஈதல் இயல்பே இயம்புங் காலை,
காலமும், இடனும், வாலிதின் நோக்கிச்
சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி,
உரைக்கப் படும்பொருள் உள்ளத்[து] அமைத்து,
விரையான், வெகுளான், விரும்பி, முகமலர்ந்து,
கொள்வோன் கொள்வகை அறிந்து, அவன் உளம்கொளக்
கோட்டமில் மனத்தினால் கொடுத்த லென்ப!

ஆசிரியன் போதிக்கும் நூலில் அடியிற் காணும் பத்தழகுகளும் பொருந்தியிருக்கவேண்டும்:—

சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல்.
நவின்றோர்க் கினிமை, நன்மொழி புணர்த்தல்.
ஓசை யுடைமை; ஆழம் உடைத்தாதல்.
முறையின் வைப்பே, உலக மலையாமை,
விழுமியது பயத்தல் விளங்கு உதாரணத்தது
ஆகுதல் நூலிற்கு அழகெனும் பத்தே.

குறைபடக் கூறல், மிகைபடக் கூறல், கூறியது கூறல், மாறுகொளக் கூறல், குற்றமுள்ள சொற்களைச் சேர்த்தல், மயங்க வைத்தல், விஷயமில்லாத வறட்டுச் சொற்கள், ஒன்றிருக்க இன்னொன்று சொல்லல், போகப்போக விறுவிறுப்பிழந்து சொல் தளர்ந்து தேய்தல், பயனற்ற பேச்சு இவையெல்லாம்

குற்றமாகும். இத்தகைய பிழைகளுள்ள நூல்களை அக்காலம் தொடமாட்டார்கள்.

ஆசிரியர் போதனு முறையிலும் முப்பத்திரண்டு யுக்திகள் உண்டு. 'இதற்கு இவ்வகை' என்ற நூலின் பொருளுக்கேற்றபடி உதாரணங்களுடன் மனத்திற் பதியக்கூறுவது உத்தியாம். நூலில் இப்படிச் சொல்லியிருக்கிறது; உலக வழக்கில் அஃது இவ்வாறு பொருந்தும் என்று ஆசிரியன் விளக்குவான். ஆசிரியன் திடுதிப்பென்று மனத்திலிருப்பதெல்லாம் கொட்டித் தீர்க்கமாட்டான். மணிக்கோவை போலப் பொருளை இனப்படுத்தி அவன் ஓதுவான்.

அவன் சொற்கள் திட்ப நுட்பமாயிருக்கும். அவைஅரிமா நோக்குப் போல முன்பின் பார்த்துச் செல்லும்; தவளைப் பாய்ச்சலைப் போல இடையிட்டும் குதிக்கும்;பருந்தின்வீழ்ச்சி போலக் குறித்த இடத்திற் பாயும்; ஆற்றொழுக்கம் போலத் தொடர்ந்து செல்லும். மாணவனுக்குத் தலை சுழலாமல் ஒவ்வொரு வார்த்தையும் மனத்தில் புகுந்துறையும்படி அவன் தனது சொல்திறனைக் கையாளுவான்.

'இன்று இன்ன பொருளைக் குறித்த பாடம்' என்று சொல்லி ஆசிரியன் தொடங்குவான். அப்பொருளை முறையாக வைத்து ஓதுவான்; பொருளைத் தொகுத்துக் காட்டுவான்; பிறகு வகுத்துக் காட்டுவான்; அறிவாளிகள் சம்மதம் இது, இதுவே உண்மை; இதோ பாருங்கள்! என்று முடித்துக்காட்டுவான். தான் சொல்லும் இலக்கண விதியை ஓர் இலக்கிய உதாரணங் கொண்டு விளக்குவான்; பழைய நூல் கொள்கைகளை எடுத்து மொழிவான்; பிறர் நூல் கோட்பாடுகளைச் சொல்வான்; தனது பொருளை உதாரணங்களுடன் விளக்குவான்; தன் பொருளைத் தொடர்ந்த அறிவாளிகள் சொற்களைப் புணர்ப்பான்; ஒரு சொல்லுக்கு இரண்டு பொருள் கூறுவான்; காரணங் காட்டித் தன் பொருளை முடிப்பான்; அதே இலக்கணம் இதற்கும் ஒத்திருக்கிறது என்று இரண்டையும் பொருத்திக் காட்டுவான்; ஒரு சூத்திர விதியை மற்றொன்றிற்கு

இணைத்துக் கூறுவான்; காலத்தால் இறந்துபட்டுப் பயனொழிந்த கொள்கையை விலக்குவான்; காலத்தாற் பயன் மிக்க புதிய கொள்கையை ஆதரிப்பான்; முன்னே இது பொருள் என்று சொல்லிப் பின்னே அதை நிலை நிறுத்துவான்; பொருளை வெவ்வேறாக முடிப்பான்; அவ்வாறு முடித்ததைத் தொகுத்து முடிப்பான்; ''இதைப் பின்னே விளக்குகிறேன்'' என்றொன்றைச் சொல்வான்; கூறியதைச் சும்மா அழுத்தாமல் 'இதை முன்பே விளக்கியாயிற்று' என்பான். இரண்டு கட்சிகள் பேசுமிடத்தில் சந்தேகமில்லாமல் ஒருதலைத் துணிவுடன் உண்மைப் பொருளைச் சொல்வான்; இலக்கணத்திற்கு இலக்கியத்தினின்று விளக்கங் காட்டுவான்; உதாரணங் காட்டுவான்; தான் சொல்லும் இலக்கணத்தை இலக்கியத்திற் பொருத்திக் காட்டுவான்; இன்னது பொருள் என்று ஐயந்திரிபறக் கூறுவான்; 'இதுகாறும் சொன்னதிலிருந்தே சொல்லாது விடுத்த பொருளின் இயல்பை யறிக!!' என்பான்; அதை உய்த்துணர வைப்பான்; அறிவாளிகள் எழுதிய பிறநூல் முடிபுகளை ஏற்றுப் போற்றுவான்; தான் புதிதாகக் கண்டறிந்த முடிபுகளைச் சிறப்பாக எடுத்து விளக்குவான்; சொல்முடிவில் அதன் பொருளும் விளங்க முடிப்பான்; ஒற்றுமைப்பட்டவைகளை ஒருங்கே கூட்டி முடிப்பான்; ஓரினப் பொருளைத் தொகுத்துரைப்பான்; இந்தச் சூத்திர விதியைக் கொண்டே இன்னதை ஆராய்ந்தறிக என்பான். இவ்வாறு பல யுக்திகளைத் திறமையுடன் கையாண்டு ஆசிரியன் மாணவர் மனத்திற் பதியும்படி அக்காலம் பாடம் சொல்லித் தந்தான்.

## நூல்

இவ்வளவு யுக்திகளுடன் கற்கும் நூல் எத்தகையது? நூலென்பதன் பொருள்தா னென்னே?

*பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்*
*செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத*
*கையே வாயாகக் கதிரே மதியாக*
*மையிலா நூன்முடியு மாறு.*

வார்தாக் கல்வித் திட்டத்தில் பஞ்சு நூற்றுக் கொண்டே படிப்பும் நடக்கிறதல்லவா? பல்லாண்டுகளுக்கு முன்பே நம் தமிழர் பஞ்சு நூலையும், ஏட்டு நூலையும் வைத்து இந்த அழகான கவி நூலை நூற்றிருக்கிறார்கள். அக்காலம் கவிதைக்கு இருந்த மதிப்புத்தா னென்னே! சொல்லாகிய பஞ்சை மதியாகிய கதிரில் பூட்டி, வாயால் பனுவலாகிய நூல் இழுக்கிறுணும் செஞ்சொற் புலவன்! அந்த நூலின் சிறப்பு மிகப்பெரிது. அது மாந்தர் மயக்கந் தீர்க்கும்; தீமை போக்கும்;

> உரத்தின் வளம் பெருக்கி, உள்ளிய தீமைப்
> புரத்தின் வளம்முருக்கிப் பொல்லா—மரத்தின்
> கனக் கோட்டந் தீர்க்குநூல் அஃதேபோல் மாந்தர்
> மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு.

ஏற்று நூல், கெட்ட மரத்தின் கோணலைப் போக்கும்; அதுபோலே ஏட்டு நூற் கல்வியும் மாந்தர் மனக் கோணலைத் தீர்க்கும்; ஞானவளம் பெருக்கும்; உடலுறுதி யளிக்கும்; தீய நினைப்பையும், மடவிருளையும் ஒழிக்கும். இருளைப் போக்கி, ஒளியைத் துலக்கி, உடலுக்கும், உள்ளுக்கும், வாழ்விற்கும் பெரும் பயனுவதே 'நூல்' என்றனர் ஆன்றோர். அத்தகைய நூலைப் பயின்ற மாணவர் இலக்கணத்தைக் கேளுங்கள்!

## மாணவன்

அக்காலம் குருகுலக் கல்வி நிலவியது; தன் மகன், குரு புத்திரன், அரசர் மகன், நல்ல பொருள் தரும் செல்வன் மகன் பக்தி சிரத்தையுடன் தன்னை வழிபடும் எளிய மாணவன்— இவர்களைக் குருகுலத்தில் ஏற்று ஆசிரியர் கல்வி பயிற்றினர்.

மாணவன் நீரை யொதுக்கிப் பாலைக்கொள்ளும் அன்னம் போன்று, நல்லதைக் கொண்டு அல்லதை விலக்கும் விவேகியா யிருக்கவேண்டும். கிளிப்பிள்ளை மாதிரி குருட்டுப் பாடம் செய்வதிற் பயனில்லை; பொருளை மனத்துட்கொண்டு தனதாக்க வேண்டும்; நெய்யை அடியில்விட்டுக் கசண்டை ஏந்தி நிற்கும் பன்னாடை போலும், ஒட்டைக் குடம் போலும், தெளிந்த நீரைக் கலக்கிக் குடிக்கும் எருமை போலும் மண்டுவா யிருக்கக்கூடாது. பாடுபடுவதற்கேற்ற பயன் அளிக்கும் நிலம்போ

விருக்கலாம். தான் உண்ட தீனியைத் தனியே வந்து அசை போட்டுச் சீரணிக்கும் பசுவைப்போல மாணவன் ஆசான் உரைகளை உட்கொண்டு, பிறகு தனியே அமைதியாக மனனம் செய்ய வேண்டும். மாணவன் பாடத்திற் கருத்தூன்ற வேண்டும். உணவு, உறக்கம், பேச்சுவார்த்தை, நடை அனைத்திலும் மாணவன் சுத்தமா யிருக்கவேண்டும். கட்குடியன், சோம்பேறி, அகம்பாவி, காமப்பித்தன், திருடன், நோயாளி, அறிவிலி, மாறுபட்ட மனங் கொண்டவன், கோபக்காரன், தூங்குமூஞ்சி, மந்தன், பழைய நூல்களுக்கு அஞ்சித் தடுமாறுபவன், தறுகணன், பாவி, புளுகுணி,—இவர்களெல்லாம் குருகுலக் கல்விக்கு அருகரல்லாதவர்கள். இவர்கள் தங்கள் நடத்தையை முதலில் திருத்திக்கொள்ள வேண்டும். நம் நாட்டுக் கல்வி முறை, ஒழுக்கத்திற்கே முதலிடம் தரும், பிறகே ஏட்டிற்கு.

## கோடன் முறை

தக்க மாணவன் எப்படி ஆசிரியரிடம் கல்வியைக் கொள்ள வேண்டும்? கேளுங்கள்!

> **கோடன் மாபே கூறுங் காலைப்**
> **பொழுதொடு சென்று, வழிபடன் முனியான்,**
> **குணத்தொடு பழகி அவன்குறிப்பிற் சார்ந்து,**
> **இருவென இருந்து, சொல்லெனச் சொல்லிப்**
> **பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகிச்**
> **சித்திரப் பாவையின் அத்தக அடங்கிச்**
> **செவி வாயாக நெஞ்சு களனாகக்**
> **கேட்டவை கேட்டவை விடாதுஉளத் தமைத்துப்**
> **போவெனப் போதல் என்மனார் புலவர்.**

காலையில் எழுந்து கால்கை சுத்திசெய்து, அனுட்டானங்களை முடித்து, சரியான மணிக்கு மாணவன் பள்ளிக்கூடம் செல்ல வேண்டும்; சென்றதும் குருவை வணங்கவேண்டும்; சும்மா பொம்மை மாதிரி காலில் விழுவதன்று, மனத்தில் அழுக்கு வைத்துக்கொண்டு வெறுப்புடன் பணிவதன்று—உண்மையாகக் குருவைப் பணியவேண்டும்; சரண்புக வேண்டும்; குருவின் உயர்ந்த குணத்துடன் பழகி அக் குணத்தைத்

தனதாக்கிக்கொள்ள வேண்டும். ஆசிரியன் குறிப்பறிந்து அறிவுடன் நடக்கவேண்டும்; அசம்பாவிதமாக நடக்கக்கூடாது; எதிர்செய்யக்கூடாது; அவன் 'இரு!' என்றால் பணிவாக உட்காரவேண்டும்; 'பாடம் சொல்!' என்றால் சொல்லவேண்டும். கேட்காதபோது கிளம்பக்கூடாது, கத்தக்கூடாது. தாகமுள்ளவன் தண்ணீர் குடிப்பதுபோல ஆசிரியன் உபதேசங்களை ஆர்வமுடன் பருகவேண்டும். தனக்குத் தெரிந்ததுபோலச் சம்பமடிக்கக்கூடாது; பாடம் நடக்கும்போது சேட்டையில்லாமல், சித்திரப் பாவைபோல் அடங்கி, ஆசான் உபதேசத்தைச் செவியால் வாங்கி நெஞ்சாகிய களஞ்சியத்தில் விடாது கொட்டிப் பிறகு அதை உள்ளத்தால் உன்னி உன்னிப் பார்த்துத் தனதாக்கிக் கொள்ளவேண்டும். ஒரே முறையிற் பாடம் வந்துவிடாது; கேட்டதில் கால் பங்குகூட மனத்தில் தங்குவது கடினம். ஒன்றுக்கு இரண்டு தடவையாகக் கேட்கவேண்டும். பாடங் கற்கும் விதத்தை யறிவோம்:—

> நூல்பயில் இயல்பே நுவலின், வழக்கறிதல்,
> பாடம் போற்றல், கேட்டவை நினைத்தல்,
> ஆசாற் சார்ந்துஅவை அமைவரக் கேட்டல்,
> அம்மாண் புடையோர் தம்மொடு பயில்தல்
> வினுதல், வினுயவை விடுத்தல் என்றிவை
> கடனுக் கொளினே மடம்நனி யிகக்கும்.

மாணவன் பாடத்தைக் கருத்துடன் போற்றிக் கற்கவேண்டும். இன்ன பாட்டுக் கற்றோம், அதன்படிதான் உலக வழக்கம் இருக்கிறதா என்று மாணவன் ஆராய வேண்டும். கேட்ட பாடத்தைச் சிந்திக்க வேண்டும். கற்பது ஒரு பங்கானால், சிந்திப்பது பத்துப் பங்காயிருக்கவேண்டும்: சந்தேகமானதை மனத்திற்குத் தெளிவாகும்படி மீண்டும் ஆசானிடம் கேட்கவேண்டும். கண்டபேருடன் சேராமல் கல்வியில் கருத்துள்ள நன்மாணவருடனே பழகவேண்டும்; அவர்களிடம் தனது சந்தேகத்தைக் கேட்கவேண்டும்; அவர்கள் வினுக்களுக்கு விடையளிக்கவேண்டும்—இவ்வாறாகத் தினம் செய்தால் மடவிருள் நீங்கும், அறிவு பெருகும், பாடம் பிடிபடும், கல்வி பயனளிக்கும். கல்வியை வெறும் புத்தகப் படிப்பாக்காமல் அனுட்டான உண்மையாக்க அக்காலத்தில் முயன்றனர்.

அக்காலம் கற்றல், கேட்டல், சிந்தித்தல், அறிதல், கற்றவழி நிற்றல், ஆகிய ஐந்துபடி யேறித்தான் 'கற்றவன்' ஆகலாம்.

அக்காலக் கல்வி மாணவன் பூரணமடைவதையே கருதிப் பூரணனான குருவினால் அளிக்கப்பெற்றது. அக்கால மாணவன், குருவை முன்னிற்கும் தெய்வமாகக் கருதினான்— 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்.' ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே வணக்கமுள்ள அன்பு நிறைந்திருந்தது. குளிர் காயும் தீயை நாம் தொட்டு அணைவதில்லை; அதை விட்டு விலகுவதுமில்லை; அதுபோலே மரியாதையான தூரத்திலிருந்து ஆசானுக்கு வேண்டிய தொண்டுகளைச் செய்து அக்கால மாணவன் கல்வி கற்றான். குருவார்த்தைக்கு எதிர் வார்த்தை கிடையாது. குருவும் மாணவனைப் பிள்ளைபோலப் பேணி அறிவளித்தான்.

அவ்வாறு கல்விகற்ற மாணவர் நிபுணர்களானார்கள். புத்திபலம், தேகபலம், மனோபலம், வீரியபலம், கலைத்திறன், உலகறிவு, கடவுளறிவு, எல்லாம் பொருந்தி, சமுதாய வாழ்வை வெற்றிபெறச் செய்தனர் அக்கால மாணவர். அத்தகைய தீரர் இருந்த மட்டும் நமது நாடும் சுதந்தரமாயிருந்தது. இக்காலக்கல்வி முறை குழந்தைகளுக்கேற்றபடி யமைந்தது. எல்லாம் மேற்கிருந்து வந்தது. மேற்கே எவ்வளவு கருத்துடன் கல்வி வீரர் குழந்தைகளைப் பயிற்றுகிறார்கள் என்பதற்கு இரண்டு உதாரணங்கள் தருவோம்:

(1) தோல்ஸ்தாய்.

(2) மோந்தெஸ்ஸோரி.

---

# 27. தோல்ஸ்தாயின் கல்விமுறை

தோல்ஸ்தாய் ஐரோப்பா முழுதும் சுற்றியானதும், கிராமத்தில் பொது ஜன ஊழியம் செய்தார்; அதிலும் கல்வி பரப்புவதே சிறந்த கைங்கரியமாகச் செய்தார். தம் கிராமமாகிய போல்யானுவில் முதலில் பள்ளிக்கூடம் தொடங்கினுர். சுமார் பதிஞயிரம் ஜனங்களடங்கிய ஒரு ஜில்லாவில் 14 பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தினுர். தியாக புத்தியுள்ள நண்பர்களையே அவற்றில் ஆசிரியராக ஏற்படுத்தினுர். அத்தனை ஆசிரியருடனும் சகோதரப்பான்மை கொண்டு சேர்ந்து பழகினுர். அவர் இருந்த போல்யானு பள்ளிக்கூடம் இரண்டு மாடியுள்ள கல் கட்டிடம். அதில் இரண்டு அறைகளில் பள்ளிக்கூடமும், ஒரு அறையில் பள்ளிக்கூடச் சாமான்களும், இரண்டு அறைகளில் உபாத்தியாயர்களும் இருந்தனர். பள்ளிக்கூட வாசலில் ஒரு பெரிய மணி கட்டியிருக்கும். வெளியில் தேகப்பயிற்சி செய்யும் இடம் இருக்கும். காலை எட்டுக்கு மணி அடிக்கும். அரைமணி நேரத்திற்கெல்லாம் பையன்கள் வந்து வரிசையாக உட்காருவர். பையன்கள் கையில் புஸ்தகம் கொண்டுவருவதில்லை. அவர்களுக்கு வீட்டுப்பாடம் கொடுப்பதில்லை. ஒன்றையும் பாடம் பண்ணச் சொல்லுவது மில்லை. பாடம் பண்ணவில்லையே என்ற கவலையும் அவர்களுக்கு இல்லை. அவர்கள் தங்கள் இயற்கையைத் திருத்திக் கொள்வதே படிப்பு. தாமதமாய் வந்ததற்காக ஒருவரும் தண்டிக்கப் படுவதில்லை. தாமதமாகவும் ஒருவரும் வருவதில்லை. பையன்கள் உபாத்தியாயர் வருமுன்பே இயல்பாகவே படிப்பைக் கவனிப்பர். பெண்கள் பையன்களுடன் கலந்து உட்காருவதில்லை. எப்போதும் தனியாகவே உட்காருவர்.

கல்வி யென்பது எழுதப் படிக்க இயலும் அறிவுமட்டு மன்று. எழுதப் படிக்கத் தெரியாது எத்தனேயோ குடியான வர்கள் பயிர்த் தொழிலில் மேதாவிகளாயிருக்கின்றனர்; திற மையுள்ள வியாபாரிகளாயும், யந்திரவித்வான்களாயும், தொழிலாளிகளாயுமிருக்கின்றனர்.

மனிதனேப் பூரணப்படுத்திப் புதிய அறிவும், விரிந்த நோக்கமும் கொடுப்பது கல்வி. பையன்கள் பெற்ரோரிடமும், பள்ளிக்கூடத்திலும், புத்தகங்களின் மூலமும், உலகிலும் அடையும் அனுபவம் கல்வி யாகும். நல்லொழுக்கத்திற்காக ஒரு மனிதன் தனது தூயவாழ்வைக்கொண்டு மற்ெருரு வனேப் பழக்குவது பயிற்சியாகும். அறிவை ஒருவனிடமிருந்து மற்ெருருவனுக்குக் கொடுப்பது படிப்பு. பாட்டு, சித்திரம், நாட்டியம், கைத்தொழில் இவை படிப்பு. படிப்பும் போதனே யும் கல்விக்கு வழியே யாகும். நம் கல்லூரிப் படிப்புகளில் சுயேச்சையும், சுதந்திரமுமில்லே. அவை உலகினின்று பிரிபட் டனவாய் இருக்கின்றன. புரோகிதன் மைந்தன் தந்தையுடன் பழகுவதால் புரோகிதனுவது போல், நமது வாழ்வை இயற் கையுடன் இணேத்து மனிதருடன் பழகவேண்டும். முதலி லேயே படிப்பை ஜீவனத்திற்கும் தக்கதாக்க வேண்டும். வீட் டிலிருந்து பிரிந்து, புதிய நகரில் தன் இளம் ஆசைகளுக்கு இடங் கொடுத்து, தன் ஜீவனத்திற்குப்பிறரை எதிர்பார்த்து தன் குற்றங்களேயே வளர்க்கக் கூடிய சிநேகிதருடன் கூடி, தன்னே நல்வழியில் நடத்துவோரின்றி, வாழ்வில் ஒரு நோக்க மின்றி, உலகின் புதிய மாறுதலே யுணராது, பழைய நூல் களேயே பரீட்சைக்காகப் பாடஞ் செய்து திரியும் கல்லூரி மாணவன் சர்க்கார் சேவகத்திற்கே படிக்கிருன். சமூகத் திற்கு அவனுற் பயனில்லே. கல்லூரிகள் சமுதாய வாழ்வைப் பாழ்படுத்துகின்றன. இன்னும் நூறு ஆண்டுகளுக்குள் இந் தக் கட்டிடப் பள்ளிகளும், கல்லூரிகளும்போய், சுதந்திர மான கல்விக்கூடங்கள் மனிதரின் நோக்கத்திற்கும், வாழ்விற் கும் உகந்தபயிற்சி தந்து விளங்கும்; இதுவே தோல்ஸ்தாயின் சிந்தனே.

தோல்ஸ்தாய் பள்ளிக்கூடம் நடத்துவதில் மிக்க ஊக்கங் காட்டினர். அவர் கடுமையான உபாத்தியாயரைப் போல் நடக்கவில்லே. தாமும் ஒரு மாணவன் போல் பள்ளிப்பிள்ளே களின் சுசதுக்கத்துடன் கலந்து கொண்டார். தமது அத்யாத் மச் செல்வத்தில் அவர்களுக்குப் பங்கு கொடுத்தார். தைரிய மும், துருதுருப்பும், உள்ள பிள்ளேகளேக் கண்டால் அவருக்கு ஆனந்தம். அவர்களேக் கூட்டிக்கொண்டு அடிக்கடி காடு களுக்கும் கிராமங்களுக்கும் செல்வார். மாலேயில் அவர்களு டன் உலாவிக்கொண்டே பல கதைகள் சொல்லுவார். கண் முன் நடக்கும் காட்சிகளேயே கொண்டு வியாஸங்கள் வரை யச் செய்வார். குழந்தைகளின் அனுபவத்தையே கொண்டு பாடங்களே நடத்துவார். குழந்தைகள் தாங்கள் படிப்பதை யும் எழுதுவதையும், சொல்வதையும் மனத்தில் உணர்வார் கள். ஒரு கதை சொன்னுல் அதில் கண்ட விஷயம் முன்னுல் நடப்பது போலத் தோன்றும். தேச பூகோளமும், சரித்திர மும், அந்தத் தேசத்திற்கும் மற்ற நாடுகளுக்குமுள்ள வித்யா ஸமும், அதன் ஆட்சி முறை, அதன் தற்கால நிலேமை முத லியனவும் குழந்தைகள் மனத்தில் பதியவைப்பார். கேள்வி கள் மூலம், குழந்தைகளிடமிருந்தே நாட்டுச் சரிதையை வரு விப்பார். ஜார் அரசாட்சியின் கொடுமைகளே மாணவரே உணரும்படி செய்வார். சரித்திர பாடத்தைச் சாயங்கால மாவது இரவிலாவது வைத்துக்கொள்ளுவார். மாணவர் தங்கள் முன் நடக்கும், தங்கள் காலச் சரித்திரத்தை, நன்ருக உணர்ந்து கற்கச் செய்வார். இது தவிர பிரெஞ்சுப் புரட்சி யையும், நெப்போலியனேயும் பற்றி வர்ணிப்பார். அதைப் பற்றி மாணவருடன் சம்பாஷித்து அவர்கள் கருத்தை வெளிப் படுத்தி அவர்களுக்குத் தேசீய உணர்ச்சி ததும்பச் செய் வார். தம் அன்பாலும், களிப்பாலும், சொல்லழகாலும் மாணவர் மனத்தை வென்று விடுவார். நெப்போலியன் மாஸ் கோவிற்கு வந்து புறங்காட்டிச் சென்ற கதையைச் சொன்ன தும், மாணவர் தம் தேசத்திற்கு வந்த வெற்றியை யுணர்ந்து, ஆரவாரஞ் செய்வார்கள். கொடுங்கோன்மையைப் பற்றிப் பேசுகையில், மாணவர் கோபத்துடன் ஆவேசங் கொள்ளு

வர். சங்கீதம் கற்பிப்பதில் தோல்ஸ்தாய் மிகவும் ஊக்கங் காட்டுவார். சங்கீதம் ஒரு போகவுணர்ச்சி தருவதைத் தடுத்து அவரிடம் பயின்றவருக்கு, ஓர் அத்யாத்ம எழுச்சியையும், ஆனந்தத்தையும் தரும். சித்திரம் எழுதுவதை ஒரு முக்கிய பாடமாகத் தோல்ஸ்தாய் கற்பித்தார். தோல்ஸ்தாயின் மாணவர் சுதந்தர வுணர்ச்சியில் பெருகினர்.

ஜார் அரசாங்கத்தார், அவர் பள்ளிக்கூடத்தைப் புரட்சிக் கூட மென்று சந்தேகிக்கத் தொடங்கினர். 1862-ம் ஆண்டு போலீஸ் உத்தியோகஸ்தர் அதைக் கண்காணித்தனர். தோல்ஸ்தாய் குடியானவர் விடுதலைக்காகப் பாடுபட்டார். அதற்காக அரசாங்கத்தார் அவர்மேல் சீற்றங்கொண்டனர். அவரைச் சுட்டு விடுவதாகக்கூடப் பயமுறுத்திக் கடிதங்கள் வரைந்தனர். ''போல்யாஞ'' என்ற ஒரு பத்திரிகை மூலமாயும் தோல்ஸ்தாய் தம் எண்ணங்களை வெளியிடத் தொடங்கினுர். அப்போது ருஷ்யப்புரட்சி இயக்கமும் தலை தூக்கியது. இரகசியப் போலீஸார் உபத்திரவம் அதிகரித்தது. தோல்ஸ் தாய் நடத்திய பள்ளிக்கூடங்களில் நுழைந்து சோதனை செய்தனர். மாணவர் குறிப்புப் புத்தகங்களை யெல்லாம் பார்த்தனர். விரோதமாக ஒன்றும் அகப்படவில்லை. மாணவரின் நெஞ்சத்தில் தோல்ஸ்தாய் சுதந்தரத்தை நாட்டினுர். மாணவர் சோதனைக்காரரர் கேள்விகளுக்குச் சுறுசுறுப்பாய் விடையளித்து அனுப்பி விட்டனர். வேண்டுமென்றே போலீஸார் தோல்ஸ்தாயின் அறையில் கெட்டித்த துப்பாக்கியைக் கொண்டுவந்து வைத்துவிட்டனர்; அவர் ஊரிலில்லாத சமயம் பார்த்துச் சோதனைக்கு வந்துகொண்டிருந்தனர். இதைப் பற்றித்தோல்ஸ்தாய் பிரபு ஜாரினிடம் நேரே முறையிட்டார். தோல்ஸ்தாய் நடத்திய போல்யாஞ என்ற பத்திரிகை புதுவிதமான கல்வி முறையைப் பரப்பி வருவதாகவும், அஃது ஏற்கெனவேயுள்ள முறைக்கு மாருக இருப்பதாகவும், சுதந்தர வுணர்ச்சியைப் பெருக்குவதாகவும் அதிகார வர்க்கத்தார் குற்றஞ் சாற்றினர். எல்லா இடர்களையும் கடந்து தோல்ஸ்தாய் தம் கிராமப் பள்ளிக்கூடத்தையும், பத்திரிகையையும், தொழி

லாளர் விடுதலை இயக்கத்தையும் தைரியமாக நடத்தினார்; ஒரு கிராமப் பஞ்சாயத்துச் சபையும் நடத்தினார்.

தோல்ஸ்தாய் பிரபு எப்போதும் சத்தியவாழ்வு வாழ்ந்தார். உண்மையை ஆர்வமுடன் நேசித்தார். தாம் கண்ட உண்மை வழியில் தைரியமாகவே நின்றார். நன்மையை நேசித்து, அதில் களித்து, அதில் உழைத்து, அதைப் பரப்பி, பிறரையும் அதன் வழிப்படுத்துவதில் அவருக்கு ஆனந்தம் அதிகம். தம் இலக்கிய முயற்சிகளிற்கூட அவர் சலிப்புக்கொள்வார்; தம் அத்யாத்ம வளர்ச்சியில் மகிழ்ச்சி கொள்வார். தோல்ஸ்தாய் திருவுள்ளமே நம் காந்தியடிகள். அடிகள் வகுத்த வார்தாக் கல்வித் திட்டமும் தோல்ஸ்தாய் கொள்கைகளுக்கு இசைந்ததாகும்.

# 28. திருமதி மோந்தெஸ்ஸோரி

திருமதி மோந்தெஸ்ஸோரி அன்று அடையாற்றில் இருந்தார். அவர் சிறுவர் கல்விக்காகப் பெரிதும் உழைத்தவர். அவர் கல்விமுறை உலகெங்கும் புகழ்பெற்று விளங்குகிறது. 'எனது கல்விமுறையைப் பற்றிப் பேசமட்டும் நான் இங்கே வரவில்லை; என் வாழ்வின் அனுபவங்களையெல்லாம் சொல்ல வந்தேன். இத்தேசம் என் உள்ளத்தைக் கவர்ந்தது; அதனுல் இந்த முதுமைப் பருவத்திலும் இதைக் காணவேண்டுமென்று ஆவலாக வந்தேன்' என்றுர் அவ்வறிஞர். உலகெங்கும் அம் மாதரசியைப் போற்றுகின்றனர். அவர்வரலாற்றையும், கல்விமுறையையும் தமிழர் அறியவேண்டும்.

மாதாம் மாரியா மோந்தெஸ்ஸோரி இத்தாலியில் பிறந்தவர்; ஏழைகளிடம் இரக்கமும், குழந்தைகளிடம் ஓர் அன்னையின் அன்பும் நிறைந்தவர். இத்தாலியில் பெண்களுக்கிருந்த கட்டுப்பாடுகளை மீறி இவரே முதன்முதல் வைத்திய நிபுணர் (Doctor of Medicine) பரீட்சையில் தேறி டாக்டர் பட்டம் பெற்றுர். இவர் ரோம் சர்வகலாசாலையைச் சேர்ந்த மூளை வைத்தியசாலையில் வேலை செய்தார். அச்சமயம் குழந்தைகளின் நிலைமையை இவர் கண்டார். குழந்தைகளே இனிவரும் பிரஜைகள். அவர்களை நன்றுக வளர்த்தலே நாட்டிற்குப் பாதுகாப்பாகும். டாக்டர் மோந்தெஸ்ஸோரியின் உள்ளம் குழந்தைகளை நாடியது. தாம் மருத்துவரா யிருப்பதைவிட குழந்தைகளுக்கு ஆசிரியராயிருப்பது நலமெனக் கண்டு, அவர் ஒரு குழந்தைப் பள்ளிக்கூடத் தலைவியானுர், அஃது அரசாங்கப் பள்ளிக்கூடம். அங்கே மெலிந்து நலிந்த சிறுவர்களைப் பயிற்றினர். இக்குழந்தைகளை மோந்தெஸ்ஸோரி தம் சொந்தக் குழந்தைகளைப் போலப் பிரியமாக நடத்தி வேண்டிய

சுயேச்சை தந்து அவர்களை நன்றாகப் பயிற்றினார். குழந்தைகளுடன் இவ்வாறு இரண்டாண்டுகள் பழகி, இவர் ஒரு புதிய கல்வி முறையைக் கண்டுபிடித்தார். குறையுள்ள குழந்தைகளை இவரது அன்புவழி அற்புதமாகத் திருத்தியது. குழந்தைகளுக்கு இவர் வழி இன்பச் சுயேச்சை யளித்தது. 1907-ஆம் ஆண்டு ஒரு குழந்தை யில்லம் இவர் பொறுப்பில் நடந்தது. தமது கல்விமுறையை இவர் அங்கே பரிசோதித்துப் பெரும் பயன் கண்டார். பிறகு அம்முறைப்படியே பல பள்ளிக்கூடங்கள் எழுந்தன. அதன்பின், இவர் கல்விமுறை நூலாக உலகெங்கும் பரவியது. எல்லா நாடுகளிலும் மோந்தெஸ்ஸோரி முறை புகழ்பெற்றது.

மோந்தெஸ்ஸோரி முறை சிறு குழந்தைகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். ஆனால், அதற்குரிய சாமான்களை வாங்கப் பணம் அதிகமாகிறது; நமது நாடு ஏழை நாடு. கடுமையான கால அட்டவணை, அரட்டி மிரட்டிப் பிரப்பம்பழம் கொடுக்கும் உபாத்தியாயர் கொடுமை, பரீட்சைப் பேயின் பயம், பாடக் கட்டுப்பாடு—இவையெல்லாம் இல்லாமல், குழந்தைகள் சுயேச்சையாக, தாராளமாக, மனமகிழ்ச்சியுடன் கல்வி பயிலவேண்டும். குழந்தை ஒரு சிறு உலகம். அதற்குப் புலன்கள், மனம்,புத்தி, சித்தம், பகுத்தறிவு, உணர்ச்சிகள் எல்லாம் உள்ளன. நாலு குழந்தைகள் பொம்மை வைத்து விளையாடுவதைக் காணுங்கள்! காலை எழுந்து, பல் விளக்கி, பற்று விளக்கி, வீட்டை மெழுகிக் கோலம் போட்டு, செம்மண் பட்டையிட்டு, குளத்திற்குப் போய்க் குடந் தேய்த்து, புடவை துவைத்து,மஞ்சள் பூசிக் குளித்து, நீர் சுமந்து வந்து, அடுப்பு மூட்டி, உலை வைத்து, அரிசி களைந்து போட்டு,பருப்பு வேகவைத்து,குழம்பு வைத்து, கறி சமைத்து, அப்பளம் சுட்டு, வெந்நீர் வைத்து, கணவனை உபசரித்துச் சோறு போட்டு, கச்சேரிக் கனுப்பி, குழந்தைகளைப் பேணி,குழந்தைகளுக்குப் புத்திமதி சொல்லி, விளையாட்டுக் காட்டி, மாலை நீர் சுமந்துவந்து சமைத்து, கணவனை உபசரித்து, சாப்பாடானதும் வெற்றிலை போட்டு, குடும்ப விஷயங்கள் பேசி, கொஞ்சம் பாடி, குழந்தைகளைத்

தூங்க வைத்து, பிறகு கணவனுக்குப் படுக்கை போடும் வரையில் ஒரு காரியம் பாக்கிவிடாமல் பெண் குழந்தைகள் நடிப்பதைப் பார்க்கலாம். ஆண் குழந்தைகள் பூவரசங்காயினல் தேர்கட்டி, சாமி வைத்து, இலேக்குழலூதி, தகரத்தாளம் போட்டுத் திருநாள் நடத்துவர். சிறுவர் சிறு செங்கல்களைச் சுற்றிலும் வைத்து, மண் வீடுகட்டி, மண் செப்புகளைக் கொண்டு, பெரிய கலியாணங்களை நடத்துவர். வஞ்சமில்லாத அவர் உள்ளத்தினின்று வரும் சொற்களும், பாவனைகளும், ஆடல்பாடல்களும் காணக் காணக் கண்ணிற்கின்பமாகும். உண்மையாக நம் நாட்டில் ஏழெட்டு வயதுச் சிறுவரும் சிறுமியரும் ஆடும் இயற்கையான விளையாட்டுகளே மோந்தெஸ்ஸோரி முறையாம்; பின்னதற்கு விலையுயர்ந்த சாமான்கள் வேண்டும்; அவ்வளவே.

இம்முறைப்படி மூன்று வயது முதலே குழந்தைகளைப் பழக்குகின்றனர். பள்ளிக்கூடம் அழகான தோட்டங்களில் இருக்கும். வேனிற் காலங்களில் குழந்தைகள் கூடாரம் கட்டி விளையாடுவர். ஆசிரியர் ஒரு தாயாரைப் போலக் குழந்தைகளைக் கவனிப்பார். ஒருவரோடொருவர் சண்டை போடக் கூடாது, மரியாதையாகப் பேசவேண்டும், ஒருவர் வேலைக்கு மற்றவர் இடர் செய்யக்கூடாது. அவ்வளவே சட்டதிட்டம். குழந்தைகளுக்கு ஏராளமான விளையாட்டுச் சாமான்களுண்டு. அவர்கள் எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பர். ஒவ்வொரு சாமானையும் தாமே தொட்டுப் பார்த்து, சோதித்து உபயோகிப்பர். ஆடையணிகளைச் சுத்தமாக வைத்தல், வீட்டைச் சுத்தம் செய்தல், பாத்திரம் கழுவுதல், உணவாக்கல், மாடு கன்றுகளைப் பிரியமாக நடத்தல், தம்மினும் சிறிய குழந்தைகளைப் போற்றல், சாமான்களை அடுக்கல், எளிய தொழில்களைச் செய்தல், கைப்பழக்கம், கூர்ந்த பார்வை, கண்ணைக் கட்டிவிட்டு ஸ்பரிசத்தாலேயே பொருள்களை நிதானித்தல், ஐம்புலவளர்ச்சி, பகுத்தறிவு வளர்ச்சி, மனப்பான்மை வளர்ச்சி, கதை சொல்லுதல், நடித்தல், எண்ணெழுத்தறிதல், பாட்டு, நடனம், வீடுகட்டல், துணி தைத்தல் காகிதப் பூ செய்தல், நோயாளரைப் பாதுகாத்தல், ஓடி

விளையாடல், பந்தாட்டம், தோட்டம் வைத்தல் முதலிய பல பயிற்சிகளால் குழந்தைகள் நல்ல வளர்ச்சி பெறுகிறார்கள்.

கண், காது, குரல், வாய், கால், உடல், மனம், குணம், மூளை அனைத்திற்கும் முறையாக நல்ல பயிற்சி கிடைக்கிறது. பள்ளிக்கூடம் என்றால் நமனைப் போன்ற உபாத்தியாயர், எமதண்டம்போன்ற பிரம்பு, குருட்டுப் பாடம், பரீட்சை, மார்க்கு, தேர்வு, அடி, வசவு என்றஞ்சிக் குழந்தைகள் அங்கே போகவே மனமின்றி முரண்டு செய்வதைக் கண்டிருக்கிறோம். ஆனால், மோந்தெஸ்ஸோரிக் கல்விமுறை சுயேச்சையானது; குழந்தைகள் ஆவலாகப் பள்ளிக்கூடம் செல்கின்றனர். வீட்டைவிடப் பள்ளிக்கூடம் இன்பமா யிருக்கிறது.

இந்தக் கல்வி முறையைக் கண்டு, கோடிக்கணக்கான குழந்தைகளுக்கு மகிழ்வீந்த மோந்தெஸ்ஸோரி அன்று நமது தமிழ் நாட்டில் நமக்கருகே வந்து தமது இன்பக் கல்விமுறையைப் போதித்தார். இவர் இத்தாலியமும், பிரெஞ்சும், கொஞ்சம் ஆங்கிலமும் பேசுவார்.

குழந்தையே நாடு. சிறிது பெருகியே பெரிதாகிறது. சிறிய சம்பவங்களே பெரிய சம்பவங்களாக வளரும். அற்பமென்று எதையும் அசட்டை செய்யக்கூடாது. அற்பவிஷயங்களிலும் கவனமாக நடக்கவேண்டும். குழந்தைகளின் நடை உடை பாவனை, ஆடல் பாடல், படிப்பு, சிந்தனை, ஊண், உறக்கம், பயிற்சி அனைத்திலும் நாம் போதிய கவனம் செலுத்தவேண்டும். நமது நாட்டில் ஒவ்வொரு தாயும் ஒரு மோந்தெஸ்ஸோரி ஆதல் வேண்டும்.

# 29. காலத்திற்கேற்ற கல்வி

இதுகாறும் பல நாடுகள் கல்வித்துறையில் முன்னேறும் வகையை விளக்கினேம். அவற்றின் உதாரணங்களை யெல்லாம் நாம் தற்காலத்திற் கேற்றபடி பின்பற்றி நமது நாட்டுக் கல்வியை வளர்க்க வேண்டும்.

அழகும் மணமும் மலருள் உள்ளன; ஒளியால் மலர்ந்து அவை விளங்குகின்றன. அறிவும் ஆற்றலும் குழந்தையுள் உள்ளன; அவற்றைத் தூண்டுவதே கல்விப் பயிற்சியாகும். குழந்தை ஒரு சைதன்ய வடிவம். அதற்கு வாழ்க்கைத் தொழில் நடத்த ஊனுடல் உள்ளது; வெளியுலகை அறிய ஐம் புலன்கள் உள்ளன; உள்ளுலகை அறிய அந்தக்கரணங்கள் உள்ளன. நல்லது பொல்லாததைப் பகுத்தறிந்து நடக்கப் புத்தியுள்ளது. தனது தெய்வத்தன்மையை அறிய உள்ளம் உள்ளது, ஆன்மவுணர்ச்சியுள்ளது. இவையனைத்தையும் தூண்டி வளர்ப்பதே நல்ல கல்வி முறையாகும். அவற்றை வளர்க்கும் சாதனங்களைத் தாராளமாக வழங்குவதே பள்ளிக்கூடமாம். அரசாங்கத்திற்கு அடிமைகளைத் தயாரிப்பதன்று; அடிமைத் தளைகளை அறுத்தெறியும் தீரரை ஆக்குவதே கல்வி. பலசரக்குப் போல் புத்தகங்களைக் கொண்டு ஐந்து மணி நேரம் கதறி வயிறு வளர்ப்பவன் ஆசானல்லன்; வருங்கால வீரப்புலவரை ஆக்குவோனே ஆசான். ஆட்டு மந்தை மாதிரிக் குழந்தைகளை அடைத்து வைத்து நூலறிவைத் திணிக்கும் இடமன்று; இயற்புலமையைத் தூண்டிக் குழந்தையை நிபுணனுக்கும் நிலயமே கலாசாலையாம்.

இக்காலம், வாழ்க்கைப் போராட்டம் வரவர வலுக்கிறது; அறிவு விசாலிக்கிறது. எந்தத் துறையிலும் போட்டி அதிக-

மாகிறது. புதுப்புது யந்திரங்கள் தோன்றி இடத்தையும் காலத்தையும் வெல்லுகின்றன. இப்போது உடலாலும் அறிவாலும் உழைத்தே உண்ண வேண்டும். மூளையில் புத்தக மூட்டையை யேற்றினால் போதாது; வயிறு வளர்க்க ஒரு தொழில் வேண்டும், தெய்வம் விட்டபடி விடட்டும் என்றிருக்க முடியாது; அடுத்தவன் நம்மை வீழ்த்தி முன்னேறுவான். வாழ்வை வீரன்போல் வென்று ஆளவேண்டும்; சோர்வை நோய்போல் வெறுத்துத் துணிவுகொண்டு முயலவேண்டும். அறிவு, கலை, ஆற்றல், ஒழுக்கம், தொழில், திறமை— ஆகிய ஐந்தையும் நிறைவாக வளர்த்து நாட்டில் அருட்புலவரையும். அசகாய சூரரையும், கலா நிபுணரையும், பலபீமர்களையும், ஆத்ம ஞானிகளையும் ஒருங்கே வளர்ப்பதே நிறைவான கல்வியாகும். நமது பாரத தேசத்திற்குரிய அத்யாத்ம சக்தியைப் பாதுகாத்து வளர்க்க வேண்டும். நமது தாயின் அருட்செல்வத்தை மேன்மேலும் பெருக்கவேண்டும். அத்துடன் மேனாடு பெருமை கொள்ளும் பொருட் செல்வத்தையும் அமோகமாக வளர்க்கவேண்டும். அருள் பொருள், அகம் புறம் ஆகிய இரண்டிலும் நிறைவோங்கும் கல்விப் பயிற்சியே இனி நமது நாட்டை உய்விப்பதாம்!

இப்போது நமது நாட்டில் நல்ல கல்வியைத்தர முயலும் நிலயங்கள் சிலவுள்ளன. தயானந்தர் ஆங்கில வேதக் கல்லூரி, சிரத்தானந்தர் கண்ட காங்கிரி குரு குலம் இரண்டிலும் பிரமசாரிகளுக்கு வேத ஞானமும், தற்காலத்திற்குரிய லௌகிக ஞானமும் அளிக்கின்றனர். சாந்திநிகேதனத்தில் கவிதாகூரின் விசுவ பாரதி உள்ளது. அதில் இருபாலாரும் சுயேச்சையாக அறிவும் கலையும் அவரவர் இயல்பிற்கேற்ற தொழிலும் பயிலுகின்றனர். அதில் படித்த மாணவர் சர்க்கார் பரீட்சைகளுக்குச் செல்லுகின்றனர். காசி சர்வகலாசாலை நாட்டிற்குரிய அருட்செல்வத்தையும், காலத்திற்கேற்ற பொருட்செல்வத்தையும் புகட்டும் பெரிய அறிவு நிலயம். மேனாட்டு முறைப்படி அங்கே மாணவர் பல தொழில்களும் கலைகளும் பயின்று பட்டம் பெறுகின்றனர். காசி சர்வகலாசாலையை நம் நாட்டு ஆக்ஸ்ஃபோர்ட் என்னலாம். அலிகார்

இஸ்லாமியக் கல்லூரி இஸ்லாமிய நாகரிகவளர்ச்சிக்கும் நவ நாகரிகத்திற்கும் ஏற்ற கல்வி பயிற்றுகிறது. சென்னை சர்வ கலாசாலை, அண்ணுமலை சர்வகலாசாலை இவை யெல்லாம் முற்றிலும் அரசாங்கத்தார் வகுத்த முறையைத்தழுவியே பட்டதாரிகளைப் படைக்கின்றன. இவற்றை யெல்லாம் பார்த்து அனுபவம் பெற்ற மஹாத்மா அப்போது ஒரு புதிய முறை வகுத்தார். அதுவே வார்தாக்கல்வி முறையாம். ஒருதொழிலைக்கொண்டு கல்வி புகட்டுவதே அதன் தத்துவம். அதனுல் மாணவன் உழைத்துப் படிக்கிருன்; தானும் உட னுழைத்து ஆசிரியன் அதன் பயனைக் கொண்டு பிழைக்கிருன். அதனுல் கல்விச் செலவு குறைவு; சுயைச்சையாகப் பிழைக்க வும் வழியுண்டாகும். நூற்றல், நெய்தல், ஏருழுதல், காய் கனித் தோட்டம் வளர்த்தல் முதலிய தொழில்களைக் கற்கும் போதே பேச்சு, எழுத்து, கணக்கு, கலை, பூகோளம், சரித்திரம், தாவரம், ரசாயனம், பௌதிகம் முதலியவற்றில் மாணவன் பயிற்சி பெறுவான். பேச, எழுதப் படிக்க, கணக்குப் போட, உலகை அறிய வேண்டிய படிப்பும், பிழைக்க ஒரு தொழிலும் வார்தாக் கல்வியால் மாணவருக்கு உண்டாகும். இக் கல்வி முறை அமெரிக்காவில் நடக்கிறது. எத்தனையோ மாணவர் அங்கே தொழில் செய்து கொண்டு படிக்கின்றனர்.

மேற்சொன்ன கல்வி முறைகளெல்லாம் அறிவு, தொழில், உடலுறுதி, கலை ஆகிய நான்கையும் தத்தம் போக்கில் வளர்க்க முயலுகின்றன. ஆனுல், காலத்தை வென்ருேங்கும் நிபுணரை நாம் தயாரிக்க வேண்டும். குழந்தையிடம் உள்ள புலமையைத் தூண்டி அதைக்கொண்டு அறிவாற்றல்களை நிறைவாக்க வேண்டும். அதற்கு முதன்மையாக வேண்டியது அந்தக்கரணப் பயிற்சியாகும். குழந்தைகளின் புலன்களையும் ஆருவது புலனுகிய மனத்தையும் நன்ருகப் பயிற்ற வேண்டும். மனத்திட்பத்தால் வினைத் திட்பமுண்டாகும். பிறகு எந்தத் துறையிலும், மாணவன் நிபுணனுக வியலும். அதற்கேற்ற கல்வி முறையைக் காண்போம்.

கல்வியை ஐந்து வகையாக வழங்கலாம்:— (1) பொதுக் கல்வி (2) குழந்தைக் கல்வி (3) சிறுவர் கல்வி (4) இளைஞர் கல்வி (5) அனுபவக் கல்வி.

(1) பொதுக் கல்வி:— நம் நாட்டில் பலகோடி மக்கள் மடமையிருளில் வருந்துகிறார்கள்; வறுமைப் பிணியில் வாடுகிறார்கள்; உடல் நலங்குன்றி நடைப்பிணங்களாகக் காண்கின்றார்கள்; தீய பழக்கங்களால் கெடுகின்றார்கள்; கடன் சுமையேறிக் கவலைப்படுகின்றார்கள். இவர்களுக்கு எண், எழுத்தறிவு, பிழைப்பிற்கேற்ற தொழிலறிவு, சிக்கனம், தூய வாழ்க்கை, அறநெறி—இவற்றை எளிதாகவும் இயல்பாகவும் புகட்ட வேண்டும். இப் பணிக்கு உயர்கலை மாணவர், பொதுவூழியர், ஆசார், மருத்துவர், படித்த பெண்கள், பாடுவோர், நடிகர்—இவர்கள் முன்வர வேண்டும். படித்த பெண்கள் தம் தெருக்களில் உள்ள பெண்களை ஒரு வீட்டில் கூட்டி, ஒழிந்த நேரங்களில் எழுத்தறிவு புகட்டலாம்; நல்ல பொருளைப்பற்றியும் பெரியார் வரலாறுகளைப்பற்றியும் பேசலாம். பாட்டாளிகளுக்குக் காலை வேலை தொடங்கு முன் அல்லது மாலை வேலை முடிந்தபின் கல்வி புகட்டலாம். மாலை $5\frac{1}{2}$-மணிக்கெல்லாம் தொழிலாளர் கட்டுப்பாடாக ஒய்வு பெற வேண்டும். அவர்களுள் ஒரு பஜனை கோஷ்டியார் இருக்க வேண்டும். பக்தி, அன்பு, சமரஸம், அறநெறி, கல்விப்பயன், சுகாதாரம் இவற்றைக் குறித்து எளிய இனிய பாடல்களைப் பாடிக் கொண்டே, அவர்கள் தெருத்தெருவர்கச் சுற்ற வேண்டும். பஜனையைப் பொதுத்தொண்டரும், ஆசிரியரும் நடத்தவேண்டும். பாட்டிற்குக் கூட்டம் வரும். எல்லாரையும் ஒரு சவுக்கத்திற் கூட்டிச் சுமார் 6—மணிக்கு மணியடித்துக் கல்வி தொடங்கவேண்டும். ஊர் விளக்கடியில் கரும்பலகை போட்டு எழுத்துக்களை எழுதிக் காட்டவேண்டும். மணலிலாவது, கற்பலகையிலாவது பொது ஜனங்கள் எழுதிப் பழக வேண்டும். எண், எழுத்து, சொல், சொற்றொடர், சிறுகதைகள், பயனுள்ள பாடல்கள் அறிவை வளர்க்கும் பேச்சுக்கள்—இவற்றால் முறையே எடுத்த புத்தகம் படிக்கும் திறமை வளர்க்கவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும், ஊர்த் தெரு

விலும் பயனுள்ள புத்தகசாலை யிருக்கவேண்டும். சுமார் 200 வீடுகளுக்கு ஒரு புத்தகசாலை வீதம் இருக்கவேண்டும். அதுவே வாசகசாலையுமாகும். எளிய நடையில் நாட்டறிவு, உலகறிவு, விஞ்ஞானம், வீட்டொழுங்கு, பொருளாதாரம், சிக்கனம், அரசியல், சன்மார்க்கம், வீரர் வரலாறு, தாவரம், விவசாயம், கைத்தொழில், மாடுவளர்த்தல் முதலிய பொருள்களைப் பற்றி 32 பக்கத்திற்குமேற் போகாத ஓர் அணு நூல்கள் ஏராளமாக வெளிவந்து கிராமப் புத்தகசாலையில் இருக்க வேண்டும். வாழ்வை உயர்த்தும் பாடல்களும் வேண்டும்.

தக்க வைத்தியர்களைக்கொண்டு,வாராவாரம் சுகாதாரப் பிரசாரம் செய்யவேண்டும். பொதுத்தொண்டர் தெருத் தெருவாகச் சென்று சுத்தமாக வாழும் வழியைச் சொல்ல வேண்டும். கிராமாதிகாரிகள் இவ்வகையில் துணைசெய்ய வேண்டும். மாதம் ஒரு முறை பெரியார் வரலாறுகளை நாடகமாக நடத்திச் சன்மார்க்கத்தை விளக்கலாம். நாடகம் ஆயிரம் சொற்பொழிவினும் சிறந்த பயனைத் தரும். விளக்குப் படங்களைக் கொண்டும் தொண்டர், நல்ல விஷயங்களைப் போதிக்கலாம். நல்ல முறையில் நடத்தும் தெருக்கூத்துகள், கதை புராணங்கள், கோயில் வழிபாடுகள், பஜனைகள், ரகேலாட்டங்கள், குதித்துப் பாடும் பாடல்கள்—இவையெல்லாம் பொதுஜனக் கல்விக்குத் துணையாகும். ஒவ்வொரு தெருவிலும் உடற்பயிற்சிக்காக இடமிருக்கவேண்டும். குஸ்தி, சிலம்பம், கசரத், பஸ்கி, கிளித் தட்டு, பலீன் சடுகுடு—இவையெல்லாம் நல்ல உடற்பயிற்சிகளாகும்.

(2) **குழந்தைக் கல்வி**:—5-வயது முதல் 10-வயது வரையில், குழந்தைக் கல்வி நடக்கும். ஐரோப்பா அமெரிக்காவில் 3-வயது முதல் 6-வயது வரையில் உள்ள குழந்தைகளுக்கு இனிய பயிற்சி யளிக்கின்றனர். அதற்கு ஃப்ரோபெல், மோந்தெஸ்ஸோரி போன்ற மேனாட்டறிஞர் ஏராளமான செலவில் விளையாட்டுமுறையமைத்திருக்கின்றனர். ஆனால், செலவதிகம்; நம் குழந்தைகளுக்கு நம் நாகரிகத்திற்கேற்ற பயிற்சி தர வேண்டும். குழந்தைகளுக்கேற்ற விளையாட்டுகள் நம் வீடுகளில் வழங்குகின்றன. 5—வயது வரையில் குழந்தைகள் தாய்

மார் கவனத்தில் இருக்கவேண்டும். தாயே குழந்தையின் முதலாசிரியர். தாய்மாருக்குக் குழந்தைகளை வளர்க்கும் முறையைப் பயிற்ற வேண்டும். 5—வயதில் சுமாராகப் பேசவும், பேச்சறியவும் குழந்தைகளுக்குத் தெரியும். குழந்தைப் பள்ளிக்கூடங்கள் தோட்டங்களில் அமையவேண்டும். பிராணிகளைப் பிரியமுடன் வளர்த்தல், செப்புவைத் தாடல், பந்து விளையாட்டு, மணல் விளையாட்டு, அட்டையாலும் கட்டையாலும் வீடுகட்டல், காகிதப் பூக்கள் செய்தல், உவர்மண் போட்டுத் துணி வெளுத்தல், இஸ்திரி போடுதல், வீடுகட்டி மெழுகுதல், கோலம் போடுதல், தோரணம் கட்டுதல், இலை தைத்தல், காகிதப் பை செய்தல், துணி தைத்தல், சொக்காய்க்குத் துணி வெட்டல், மணலில் எழுதுதல், புளிய விதையால் எழுத்துச் செய்தல், எண் கற்றல், பூக்களை எண்ணிப் பறித்தல், எண்ணித் தொகுத்தல், பலநிலப் பூக்களைக் கொண்டு கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் முதலிய கணக்குகளைச் சொல்லித் தரல்; இராமாயணம், பாரதம், ஸ்காந்தம், பெரிய புராணம் முதலிய பழங்கதைகளினின்றும், பாரத வீரர் வரலாற்றினின்றும் உணர்ச்சியுள்ள சம்பவங்களைச் சொல்லி அவற்றையே நாடகருபமாகப் பயிற்றி விளையாடச் செய்தல், அம்பு கட்டல், அம்பு விடல், தேர் கட்டல், வண்டி கட்டல், ஆடுமாடுகளைப் பட்சமுடன் வளர்த்தல் முதலியவற்ருல் ஏழு வயதிற்குள் குழந்தைக்கு நல்ல பயிற்சி தரலாம். ஏழாம் வயதில் ஒழுங்காக அரிச்சுவடி, எண்சுவடி, ஓலை யெழுத்து (ஓலை யெழுத்திஞல் கையெழுத்து மணி மணியாக இருக்கும். அதை அவசியம் நம்மவர் இன்று பயிலவேண்டும்), காகித எழுத்து, நீதிப் பாடங்கள், சிறு கதைகள், உள்ளூர் அறிவு, தோட்டக் கலை, நூற்றல், பொம்மை செய்தல், சிற்ருள் வேலை, தொழிற் கல்வி, மாணவருக்கு உதவல், இயற்கைப் பொருள்களை ஆராய்தல், பசு பட்சி வாழ்க்கையைக் காணல், சிற்றேவல் செய்தல் முதலியவற்ருல் நல்ல பயிற்சி தரலாம். அதன் பிறகு படிப்படியாக மாணவன் பக்குவத்திற் கேற்றபடி எளிய நடைக் கதைகள், வரலாறுகள், பாடங்கள், ஔவை நூல்கள், கதைப் பாட்டுகள், நீதிச்சத

கங்கள், கணக்கு, சிறுகுழி, பெருகுழி, முகத்தலளவை, எடுத்தலளவைகள், வீட்டுக் கணக்குகள், உடலுறுதி நூல், நல்லொழுக்கம், பயிர் வேலை, மலர் கனி விளைவு, நெசவு, பானைவனைதல், தூம்பு செய்தல், பலகை யறுத்தல், சூளை வைத்தல் முதலியவற்றால் திறமையான பயிற்சி பெறலாம். பத்து வயதிற்குள் ஒரு பயனுள்ள தொழில், நூற்றல், கைப் பழக்கம், எடுத்த வேலையை இனிது முடிக்கும் திறமை, தூய வாழ்க்கை, நன்னெறி யொழுக்கம், தாய்மொழியைத் தெளி வாகப் பேச எழுதப் படிக்கத் திறமை, வீட்டுக் கணக்கு, குறிப் புப் பேரேடு வைத்தல், கடைக் கணக்கு, கடித மெழுதல், நாட்டு வரலாறு, பஞ்சாங்கம் பார்த்தல், ஜில்லா பூகோளம், மாகாண பூகோளம், இனிய நீதிப் பாடல்கள், நாட்டன்பு, சன்மார்க்கம்—முதலியவை சிறுவருக்கெய்தும். சன்மார்க்க ஞானம் பெரும்பாலும் பஜனைப் பாடல்களாலும், தினசரி ஒழுக்கத்தாலும் எய்தும். சாதிமத வேறுபாடே பள்ளிக்கூடத் தில் தலைகாட்டக் கூடாது. எல்லாரும் ஒரு குலம் என்னும் உணர்ச்சி மாணவர் மனத்தில் ஊறிப்போக வேண்டும். பத்து வயது மட்டும் இருபாலாரும் ஒன்றாகவே படிக்கலாம்.

(3) **சிறுவர் கல்வி:**—11-முதல் 15-வயது வரையிலுள்ள பையன்களுக்கு இக் கல்வியாம். தமிழில் இலக்கண இலக்கியப் பயிற்சி; முற்கால தற்கால நாவலர் பாவலர் அருட்கவிகளின் வாக்குகளிற் பயிற்சி; தமிழர் வரலாறு, பாரத நாட்டு வர லாறு, இதிகாசப் பயிற்சி; கதை சொல்லல், கட்டுரை எழுதல், பத்திரிகை படித்தல், தற்காலம் பயிலும் கணித சாத்திரம், இயற்கணிதம், வடிவக் கணிதம், நிலக் கணக்கு, பூகோள சாத்திரம், பூதவேதி தாவர நூல்கள், உடலறிவு, வைத்தியம், காயம் கட்டுதல், நோயாளியைப் பாதுகாத்தல், சாரணப் பயிற்சி, பேச, படிக்க, எழுத இந்துஸ்தானிப் பயிற்சி, வியா பார முறைக்கும், உலக நடையறிவுக்கும் போதிய ஆங்கிலப் பயிற்சி, ஒரு குறித்த தொழிலில் புலமை, அதை லாபகரமாக நடத்தும் வல்லமை, பொதுநலத் திறமை, குழந்தைகளுக்குக் கற்பித்தல், கிராம சேவை, தேச சேவை ஆகிய துறைகளில் இருபாலாரும் 15-வயதில் பயிற்சி பெற்றிருக்கவேண்டும்.

(4) **இளைஞர் கல்வி**:—இக்கல்வி 16 முதல் 18 வரையில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் நிகழும். பெண்களுக்குச் சமையல், வீட்டு நிர்வாகம், உடற்கூறு, வைத்தியம், பிள்ளைப்பேறு, குழந்தை வளர்த்தல், போதனு முறை, சங்கீதம், நடனம், சித்திரம், அணி வேலைகள், தோட்ட வேலை, சிற்பம், சன்மார்க்கம், சாத்திரம் முதலியவற்றில் நிறைவான பயிற்சி தரப்படும். அவரவர் தமது தொழிலுக்கேற்ற இலக்கிய இலக்கணங்களெல்லாம் மாசறக் கற்பர், பெண்கல்வி தோகியோ கலாசாலை போல் நடக்கவேண்டும்.

ஆண்களுக்கு வீட்டையும் நாட்டையும் நிர்வகிக்கும் வீரத் திறமையே பயிற்சியாம். யந்திரத் தொழில், நெசவு, காகித உற்பத்தி, மரத் தொழில், இரும்புத் தொழில், பஞ்சலோக வேலைகள், ஒட்டுத் தொழில், நவீன யந்திர வாகனத் தொழில், புதுமுறை விவசாயம், தோட்டத் தொழில், ஆலைத் தொழில், மின்சார வேலைகள், ரேடியோப் பயிற்சி, ஆங்கிலத்திலும் இந்தியிலும் நல்ல பயிற்சி, தமிழ்ப் புலமை, வியாபார தந்திரம், கணக்கு வேலை, பூத வேதி தாவர பிராணி நூல்களிலும், பூகோளத்திலும் ஆழ்ந்த பயிற்சி, பிரயாண அனுபவம், பத்திரிகைத் தொழில், நூலெழுதும் திறமை, கவித்திறமை, நாடகக் கலை, வைத்தியம், சிற்பம், உபாத்திமை முதலிய தொழில்கள், இராணுவப் பயிற்சி, பகைவனை எதிர்த்து வெல்லும் திறமை, அத்யாத்ம சாத்திரப் பயிற்சி, இராஜயோகசித்தி—இவற்றில் 20 வயதுக்காளை நிறைவுற்றுத் தீரனுக நிற்பான். அத்துடன் ஒய்வு நாட்களில் பல தலங்களுக்குச் சென்று உலகை நேரே கண்டு லௌகிக ஞானம் பெறுவான். பிரெஞ்சுக் கல்விமுறையில் காட்டியுள்ள பயிற்சிகளெல்லாம் நம்மவரும் பெற்ருலே உலகின்முன் மானமாகப் பிழைக்க முடியும்.

(5) **அனுபவக் கல்வி**:— 20-முதல் 22—வரையில் இளைஞர் தாம் கற்றவழி நின்று, சமுதாயப் பணிசெய்து அனுபவம் பெறுதல். அப்போது, ஒரு வாலிபன் வைத்தியப் புலவனுனல், ஒரு பெரிய வைத்தியரிடம் அமர்ந்து நோயாளரைக்

குணப்படுத்தி அனுபவம் பெறுவான்; எஞ்சிநீயரானுல் ஒரு பெரிய எஞ்சிநீயருடன் இருந்து நகரமைப்பில் உதவுவான். இக்காலம் ஒவ்வொரு மாணவனும் தினம் 2-மணி நேரம் கட்டாயமாக இராணுவப் பயிற்சி செய்ய வேண்டும். இவ்வாறு பயிலும் மாணவரே ஊரைக் காக்கவேண்டும். கப்பற் புலவனுனுல், ஒரு கப்பலில் அமர்ந்து உலகைச் சுற்றியறிந்து அத்தொழிலில் நிபுணனுக வேண்டும். ஒருவன் சரித்திரப் புலவனுனுல், நாட்டுச் சரிதையை ஆராய்ந்து புதுமுறையில் நூலெழுதி மற்ற மாணவருக்குத் தொண்டு செய்யவேண்டும். பூத வேதிப் புலவனுனுல், ஆராய்ச்சியால் புதியன காண வேண்டும்; அல்லது, சில வாலிபரை அத்துறையில் பயிற்றிக் காட்டவேண்டும். செயலுள்ள வாலிபர் இக்காலம் ஐரோப்பா அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்று, யந்திரக் கலையிற் புலமை பெறலாம். காகிதத் தொழில் கற்றவன் இரும்புத் தொழிலாளியைக் கொண்டு அதற்கேற்ற யந்திரத்தைச் செய்வித்து நிலைநாட்டி, கூழ் அரைத்துத் தன் ஊருக்குப் போதிய காகிதங்களைச் செய்து பிழைக்கவேண்டும். சன்மார்க்க நூல்களில் தேர்ச்சி பெற்றவர் தகுந்த யோகிகளிடம் அருட் பயிற்சி பெற்றுச் சமுதாயத்தில் அருளொளி பரப்ப வேண்டும்.

நமது நாடு மீண்டும் தலைநிமிர வேண்டுமானுல், இலக்கியம், நுண்கலை, இயற்கலை, இயந்திரம், தொழில், அரசியல், வாணிபம், போர்க்கலை, போர்க் கருவிக்கலை, வீரம், சன்மார்க்கம், யோகம் ஆகிய எல்லாத் துறைகளிலும் நிறைவுற்ற பாரத வாலிபச் சிங்கங்களைப் படைக்கவேண்டும். அர்ஜுனனும், சிவாஜியும், ராமதாஸும், வள்ளுவரும், கம்பனும், குரு கோவிந்தனும், திருமாவளவனும், இராஜராஜனும், செங்குட்டுவனும், ராக்ஃபெல்லரும், எடிசனும், ஒருங்கே சேர்ந்த புதிய வீரத் திருவடிவில் சக்தி பெற்ற வாலிபர்களை உண்டாக்க வேண்டும். அத்தகைய சக்தி வீரராலேயே நம் நாடு விடுதலை பெற்றது. இனி பாரதநாடு உலகிற்கு அறம் வழங்கும், அமர நிலைதரும். அந்நாள் வருக, வருக!

# 30. ஆசிரிய மணிகளுக்கு

ஆசிரிய மணிகளா,

கல்விக்கதிர் வீசும் அறிவுச் சுடர்கள் நீங்களே. இளம் இந்தியாவின் சிற்பிகள் நீங்களே. நாடு பள்ளிக்கூடத்தில் தொடங்குகிறது. உங்கள் உழைப்பே நாட்டின் செழிப்பு. வருங்கால வீரரும், கவிகளும், புலவரும், புரவலரும் உங்கள் நாற்காலிமுன் வீற்றிருக்கிறார்கள். காலத்திற்கேற்ற கல்வி யளித்து அவர்களை நீங்கள் ஆளாக்கவேண்டும்.

காலம் அணுக்கனலை எழுப்பி ராக்கெட் வேகத்தில், ஸ்பட்னிக்-விந்தை காட்டி மதிமண்டலத்திற்குத் தாவுகிறது. இன்னும் பத்தாண்டுகளில் உலகம் முற்றிலும் மாறிப்போகும். கால வேகத்திற்கேற்றபடி நாமும் அடியெடுத்து வைத்து நடக்கவேண்டும். நல்ல கல்வி தந்து, நல்ல பண்பாட்டை ஊக்கி, மனிதரை மனிதராக்கிப் புனிதராக்கி-இனிவரும் உலகை அருட்கலை நிலையமாக்க எழுந்திருங்கள்.

உலக நாடுகளின் முன்னேற்றத்தை உணர்த்தினேன். உலக நாடுகளையெல்லாம் சுற்றிவந்து, நமது நாட்டையும் பார்த்தோம்—தோகியோ, சிகாகோ, துசுக்கி, கலிபோர்னியா, ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ், எடின்புரோ, டப்ளின், பாரிஸ், சோர்போன், ஜெனீவா, ஜூரிக், பெர்லின், வார்ஸா, மோஸ்கோ, லெனின்கிராடு பல்கலைக்கழகங்கள் வீரதீரர்களை விஞ்ஞானப் புலவர்களைப் பயிற்றி உலகை ஆளுகின்றன. விஞ்ஞானக் கலையும் தொழிலும் மூச்சாகக் கொண்ட சோவியத் ரஷ்யாவில், குழந்தை பிறந்தவுடன் கல்வியுந் தொடங்குகிறது. ஏராளமான செவிலித்தாய்கள் குழந்தைகளைப் பராமரிக்கிறார்கள். அவர்களுக்கென குழந்தையில்லம் உண்டு. பாட்டாளி மக்கள் குழந்தைகளை அங்கே விட்டுக் கவலையற்

றுத் தங்கள் வேலேகளேக் கவனிக்கிருர்கள். நான்கு வயதுக் குழந்தை தாய்மொழி பேசுகிறது; மட்டுமரியாதையுடன் பழகுகிறது; செடி கொடி வளர்க்கிறது. ஆடல் பாடல் நடத்துகிறது; நாட்டு வரலாறு சொல்லுகிறது; கடைக் கணக்குப் போடுகிறது. பனிரண்டுவயதுப் பையன் நான்கு மொழிப் புலவனுகிருன்; நல்ல பாடல்களேப் பாடுகிருன். பூதவேதி விஞ்ஞானக் கலேத் தேர்ச்சி பெறுகிருன்; நாட்டு வீரனுகிருன்; பதினெட்டு வயது வாலிபன் தொழிற்புலவன், எழிற்புலவன், நாட்டு வீரன். இருபத்திரண்டு வயது வாலிபன் சுருசுருப்பாக நாட்டுப்பணி செய்கிருன், வீட்டுப்பணி செய்கிருன். பெரும்பாலும் சோவியத் இளேஞர் சன்மானத்திற் படிக்கின்றனர்; வெகுமானியாக வாழ்கின்றனர்; இரவும் பகலும் கருத்துடன் நாட்டூழியம் செய்கின்றனர்-கல்வி, தொழில், விவசாயம், வாணிபம், கலே, அரசியல், சமுதாயம் ஆகிய எந்தத் துறையிலும் அவர்கள் முன்னணி வகுக்கின்றனர். அத்தகைய கல்வி முறை நமது நாட்டிற் பரவவேண்டும். அத்துடன் நமக்கு உரித்தான யோகக் கலேயும் வளரவேண்டும்.

நமது நாட்டில் கற்றவர் மிகச் சிலர்; பொதுக் கல்வி கிராமம் கிராமமாகப் பரவவேண்டும். பேசும்படம், நாடகம், கதை, பாட்டுகளால் பொதுஅறிவு பரவும். அடுத்தது எழுத்தியக்கம்; எல்லாரும் எழுதப் படிக்க ஏற்பாடு செய்யவேண்டும். கோவில் மைதானங்களில் எழுத்துப் படங்காட்டி அனேவரையும் எழுதச் சொல்லி படிக்கச் சொல்லி எழுத்தறிவு பரப்பவேண்டும். தக்க ஆசிரியர் குழு பாடபுத்தகங்களேப் படிப்படியாகப் படிக்கத் தயாரித்துப் பொதுமக்களுக்கு வழங்கவேண்டும். பாடப்புத்தகங்கள் விஞ்ஞான அடிப்படையில் எழுதினுல் நல்லது. நூலியக்கம் ஒன்று வேண்டும். தெருவுக்கொரு நூலகம், அதில் காலத்திற்கேற்ற நல்ல நூல்களே வைத்து அந்தத் தெருவார் படிக்கச் செய்யவேண்டும். படிப்பகத்தில் ஒருவர் ஒரு நூலேக் கிணீரென்று படிக்க மற்றவர் கேட்கவேண்டும். பயனுள்ள நூல்களே மலிவாக வெளியிட்டு வீடுதோறும் தந்து படிக்கச் செய்யவேண்டும். தினம் இரண்டுமணி நேரமாவது ஆணும் பெண்ணும் படிப்பில் மன

மூன்றி அறிவை வளர்க்கவேண்டும். நாட்டுக்கு நல்ல தின மலர்களும் மாத மலர்களும் தெளிவான நடையில் வெளி யிட்டுதவவேண்டும். சமுதாய முன்னேற்றத்திற்கு ஏற்ற கட்டுரைகளும் கதைகளும் பாடல்களும் அதில் வரவேண்டும். பொருள் பொதிந்த இலக்கிய-விஞ்ஞானக் கட்டுரைகள் வர வேண்டும். அத்தகைய பத்திரிக்கைகளை மாணவர் படிக்கச் செய்யவேண்டும். வீட்டிலும் ஊரிலும் பொதுநலப் பணிகளில் பங்குகொண்டு, மாணவர் சமுதாயப் பண்பாட்டைப் பயில வேண்டும். மாதம் ஒருமுறையாவது இயற்கை வனப்புகளில் முகாம்போட்டு, சமைத்துண்டு, சாரணப்பயிற்சி செய்து, கிராமசேவை செய்து வரவேண்டும். ரஷ்யாவில் இளைஞர் முகாமில் (யங் கன்சொமோல் காம்ப்) நாட்டுணர்வும், வாழ்வுக் கலையும், பண்பாடும் உருவாகின்றன. நாம் சாதிமத வேறுபாடின்றி எல்லாரும் ஒரே மனித சமுதாய வுணர்வுடன் பழகச் செய்தல் வேண்டும். உலகக் கோவிலில், உயிர்க்கூட்டமான கடவுளை அன்பினால், அருட்பணியினால், தியாக சேவையால் வழிபட வேண்டும். மாணவர் தாய்மொழி, நாட்டுப் பொதுமொழி, உலக மொழி ஆகிய மூன்றிலும் பேச எழுதப் பழகவேண்டும். தாய்மொழி வளர்ச்சிக்கே பிறமொழிகளைப் பயன்படுத்தல் வேண்டும். விஞ்ஞானக் கலைக்கு ஆங்கிலம் அவசியமாகும். தமிழ் சோறு குழம்புபோலும்; ஆங்கிலம் கூட்டு; கறிபோலும்; இந்தி நெய்போலும்; சமஸ்கிரதம் வடை பாயசம் போலும்; கணக்கு, பூகோளம், பூதவேதி, தாவர விலங்கு நூல், மானிட நூல், உடல்நல நூல்களைப் பொது மக்களுக்கு விளங்கும்படி பக்குவமாக எழுதி,அறிவை வளர்க்க வேண்டும். மாணவருக்குப் பல கைத்தொழில்களும், பயிர்த்தொழில்களும் ஏற்படுத்தி, அவர்கள் நான்குமணி நேரம் உழைத்து அதனால் உண்டுடுத்துப் படிக்க வசதிசெய்ய வேண்டும். பெற்றோருக்குச் சுமையில்லாமல் பிள்ளைகள் கற்று முன்னேறத் தக்க தொழில்வளப் பள்ளிகள் பெருக வேண்டும். நான்குமணி நேரம் படிப்பு, இரண்டுமணி நேரம் உழைப்பு, ஒருமணிநேரம் யோகப் பயிற்சி, தேகப் பயிற்சி இவ்வாறு கல்விமுறை வகுத்தால் மாணவர் உடல், உயிர்,

மனம், மூளை, உள்ளம், ஆன்மா எல்லாம் வீறுமேவிப் பொலியும்.

ஆசிரியர்களே, நீங்கள் வீறுகொண்டு பொலியவேண்டும். உங்கள் உதாரணத்தை மாணவர் பின்பற்றும்படி இருக்க வேண்டும். ஆசான் எப்படி மாணவன் அப்படி; ஆசிரியர்களே காலமுன்னேற்றத்திற்கேற்ற கல்வியை நீங்களும் வளர்த்து மாணவருக்கும் அளித்து, நாட்டில் அறிவுச் செல்வமும், அன்புச் செல்வமும், தொழிற் செல்வமும், எழிற்செல்வமும், ஒருமைச் செல்வமும், உரிமைச் செல்வமும், யோக, போக தியாகச் செல்வமும் பெருகச் செய்வீராக.

எல்லாரும் கல்விகற்போம்
இனிய தமிழ் நாட்டீர்
கல்வியில்லார் உலகினிலே
கடையரெனத் தாழ்வார்.

எண்ணெழுத்தும் கண்களென்றே
இயம்புகின்றார் புலவர்
கண்களின்றி வாழ்வினிலே
காட்சியின்பம் உண்டோ?

திருவுடைய கல்வியில்லார்
தேசநலம் இல்லார்
இருளுடைய வீட்டினிலே
இன்பம்என்றும் உண்டோ?

ஆளழகும் அணியழகும்
அறிவழகுக் கிணையோ?
தோலழகால் யாதுபயன்
சுவையழகே கனியாம்.

நல்லநல்ல நூல்கள்பல
நயமுடனுண் டிங்கே!
சொல்லறியா ஊமரெனத்
தோன்றலுமக் கழகோ

வீடுதொறும் கல்வியெனும்
விளக்கேற்றி வைப்போம்
வாடுகின்ற மன்னுயிரின்
வறுமையினைத் தீர்ப்போம்

எண்ணறிவீர் எழுத்தறிவீர்
இயற்கலைகள் அறிவீர்
பண்ணறிவீர் பயனறிவீர்
பதிநூல்கள் அறிவீர்

புல்லியவை போயொழியும்
புண்ணியங்கள் பொலியும்

நல்லதெல்லாங் கல்வியினல்
நாடிவரும் வாழ்வில்
பொன்னளிக்கும் பொருளளிக்கும்
புவியின்பம் அளிக்கும்
சன்மார்க்க வாழ்வளிக்கும்
சத்தியமாங் கல்வி
பரவுகவே கல்விக்கதிர்
பாருலக மெல்லாம்
விரவுகவே வீடுதோறும்
விஞ்ஞானத் திருவே!
பெண்மையுடன் ஆண்மைவளர்
பேரின்பக் கல்வி
மண்வளமும் பயிருமென
மங்கலமாய் வாழ்க!

—சுத்தானந்த பாரதி.

—கல்விக் கதிர் முற்றும்—

TAMIL NADU ARCHIVES LIB.
No. 106213
EGMORE, MADRAS-600 008